

# ல்லோரும் வாழ்வோம்

நெ.து.சுந்தரவடிவேலு

# பொருளடக்கம்

CONNEMARA PUBLIC LIBRARY
7 - JUL 1961
MADRAS

| | | |
|---|---|---|
| 1 | எல்லோரும் வாழ்வோம் | |
| 2 | மானிடப் பிறவி .. | 8 |
| 3 | இந்தியர் | 13 |
| 4 | குறள்வழி .. | 18 |
| 5 | உழைப்போம்; பிழைப்போம் .. | 22 |
| 6 | உயிர் காக்கப் பயிர் காப்போம் .. | 26 |
| 7 | தருமம் மறுபடி வெல்லும் .. | 31 |
| 8 | வீரத்தின் விளைநிலம் .. | 36 |
| 9 | கல்வி சிறந்த தமிழ்நாடு .. | 44 |
| 10 | மந்திர ஒலிகள் .. | 50 |
| 11 | வாழ்வாங்கு வாழ்ந்தவர் .. | 59 |
| 12 | தகுதி உண்டா? .. | 66 |
| 13 | கனவு வென்றது .. | 75 |
| 14 | அறியாமையைத் துடைக்க வாரீர் .. | 76 |
| 15 | உலகம் அழைக்கிறது | 81 |
| 16 | வாழும் முறை .. | 87 |
| 17 | நோக்கும் போக்கும் .. | 93 |
| 18 | புதிய போக்குத் தேவை .. | 100 |
| 19 | தியாகம் செய்வோம் .. | 104 |
| 20 | பாரதம் வளர்க .. | 108 |
| 21 | முன்னே நோக்குவோம் .. | 113 |
| 22 | நவம்பர் பதினாலு .. | 116 |
| 23 | குலப் பெருமை .. | 120 |
| 24 | உயர்த்திடுவீர்! உயர்ந்திடுவீர்! .. | 1[illegible] |
| 25 | வாழ்வளிக்கும் கல்வி .. | [illegible] |

# முன்னுரை

எதிர்காலம், தம்பி, தங்களுடையது. காலம் விரைவாக மாறி வருகிறது. நிலாவை அழைத்து அழைத்து ஏமாந்த மக்கள், துணிந்து நிலாவில் இறங்கியதைக் கண்டோம். எனவே எதிர்காலம், புதுமைக் காலம் மட்டுமன்று; எல்லோரையும் அடுத்த வீட்டுக்காரராக்கும் காலம். அத்தகைய காலத்திற்கேற்ற கருத்தோடு, தம்பி தங்கைகள் வளர வேண்டும். அதற்குச் சீரான சிந்தனை தேவை. இந் நூலில் உள்ள கட்டுரைகள் அத்தகைய சிந்தனையைத் தூண்டும் நோக்கத்தோடு எழுதப் பட்டவை.

'எல்லோரும் வாழ்வோம்' என்னும் தலைப்பில் தொடர் கட்டுரைகள் எழுதத் தூண்டிய, 'உலகம்' ஆசிரியர், காஞ்சி அமிழ்தனுக்கு நன்றி. அவரது நச்சரிப்பு இல்லையேல் இவை எழுத்தில் உருப் பெற்றிரா.

இக் கட்டுரைகளைத் தொகுத்து, நூலாக வெளி யிட முன்வந்துள்ள, **என். சி. பி. எச்.** நிறுவனத் திற்கு என் நன்றி உரியது.

என் பிற நூல்களை ஆதரித்து வரவேற்ற தமிழ் மக்கள் இதையும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். நோக்கிலே சமதை, உழைப்பிலே உயர்வு, நேர்மை யின் உறுதி ஆகியவை கிளைத்துத் தழைக்க இந் நூல் துணைபுரியும் என்று நம்புகிறேன்.

நெ. து. சுந்தரவடிவேலு

# எல்லோரும் வாழ்வோம்

என்னருமைத் தம்பிகளே, தங்கைகளே!

உங்கள் அனைவருக்கும் என் அன்பில் தோய்ந்த நல்வாழ்த்துகள். ஆர்வம் பொங்கும் சுதந்திர நாள் வாழ்த்துகள்.

நீங்கள் வாழுங்கள்! பல்லாண்டு வாழுங்கள். நலத்தோடு வாழுங்கள். நந்நலத்தோடு வாழுங்கள். உடல் நலத்தோடு வாழுங்கள்.

அறிவு நலத்தோடு வாழ்க. எத்தகைய அறிவு நலத்தோடு? காலமெல்லாம் வளரும் அறிவு நலத்தோடு.

குண நலத்தோடு வாழ்க. எத்தகைய குண நலத்தோடு? கறைபடாத குண நலத்தோடு வாழ்க. குணமென்னும் குன்றேறி நின்று வாழ்க.

மனை நலத்தோடு வாழ்க. எத்தகைய மனை நலத்தோடு? அன்பும் அறனும் நிறைந்த மனை நலத்தோடு வாழ்க. அறச் செயல்களுக்கும் அருட் பணிகளுக்கும் கைகொடுக்கும் வாழ்க்கைத்துணை நலத்தோடு வாழ்க.

அங்கோர் சோலை; அதைச் சுற்றிப் பெரும்பாலை. சோலை, வழிப்போக்கருக்கு ஆறுதல்; பாலையோ வாழ்வோருக்குத் துன்பம். வாழையடி வாழையாக அக்கம்பக்கத்தில் வாழ்வோருக்குத் துன்பம். மாறாக நாடெல்லாம் சோலை; யாவருக்கும் நன்மை.

''நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை''— இது நம் முன்னோர் உணர்ந்தது. எந்த முன்னோர்? இருந்து, இறந்த முன்னோரா? அல்ல. வாழ்ந்து, சிறந்த முன்னோர் உரைத்தது.

ஏன் உரைத்தனர்? எதன் பொருட்டு உரைத் தனர்? தற்சிறப்பிற்காகவா? இல்லை. அவரிடமும்

இவரிடமும், 'பலே, பலே' என்று பாராட்டுப் பெறவா? இல்லை, இல்லை. சிந்தனை வானத்தில் எவ்வளவு எட்டமுடியுமென்று காட்டவா? அல்ல, அல்ல.

பின் எதற்கு உரைத்தனர் இப்படி? உணர்ந்ததை உரைப்பது உயர்ந்ததோர் உரிமை; ஏன்? கடமையுங்கூட! அந்தத் தெளிவினால் உரைத்தனர். வழிகாட்டும் பொருட்டு உரைத்தனர்.

யாருக்கு உரைத்தனர்? யாருக்கு வழிகாட்ட நினைத்தனர்? ஊருக்கு வழிகாட்ட உரைத்தனர். நாட்டிற்கு வழிகாட்ட உரைத்தனர். நானிலம் முழுமைக்கும் வழிகாட்டக் கருதினர்.

அன்றைய ஊருக்கு மட்டுமா உரைத்தனர்? இல்லை. இன்றைய ஊர்களுக்குமே உரைத்தனர்; நாளைய ஊர்களுக்கும் சேர்த்தே.

அன்றைய மூவேந்தர் நாடுகளுக்கு மட்டுமா? இல்லை, இல்லை. இன்றைய நாடுகள் அனைத்திற்குமே இவ்வுரை பொருந்தும். நாளைய நாடுகளுக்கும் இதுவே குறிக்கோள்.

அன்றைய, சுருங்கிய நானிலத்திற்கு மட்டுமா? இல்லை. இல்லவே இல்லை. இன்றைய பரந்த நானிலத்திற்கும் இதே. நாளை விரியும் வியனுலகத்திற்கும் இதே.

இது, வாழ்ந்து சிறந்தவர் நல்லுரை; அறிவுரை; அறவுரை; வாழ்க்கை முறை. இதைக் கேள். இதன் கருத்தை அறி. இதைச் சிந்தி. ஆழ்ந்து சிந்தி. இதைப் பின்பற்று; இப்போது மட்டுமல்ல. எப்போதும் பின்பற்று. காலமெல்லாம் பின்பற்று; மலைபெயர்ந்தாலும் நிலைபெயராது பின்பற்று. அலை அலையாக எதிர்ப்புகள் மோதினும் பின்பற்று.

வாழ்ந்து சிறந்த நம் முன்னோர் வேண்டுவது யாது? வணக்கமா? வாழ்த்துரையா? பாராட்டா? போற்றுதலா? அல்ல; அல்ல; இவற்றுள் யாதுமன்று. இவை சிறியன; எளியன. அப்படியாயின் அவர்கள் வேண்டுவது என்ன? அவர்கள் விரும்புவது பெரியதை; அரியதை; அது எது? அது வழிபடுதல்; அவர்களது நல்லுரையைப் பின்பற்றி நல்வழிப் படுதல்; அவர்களைப் பின்பற்றுதல்; அவர்களது சிறப்புகளைத் தேடுதல்; முயன்று, முயன்று அவற்றைப் பெறுதல்; பயின்று, பயின்று அவர்களது நல்வழி நடத்தல்; அன்புவழி நடத்தல்; அறவழி நடத்தல்; அருள்வழி நடத்தல்; ஒருமைவழி நடத்தல்; பொறுமைவழி நடத்தல்; பெருமைவழி நடத்தல்; இதுவே தேவை. எனவே, மேலளவு வணக்கத்தைக் குறைப்போம். உள்ளுணர்ந்து வழிபடக் கற்போம். முன்னோர்க்குரிய கடமையை ஆற்றுவோம்.

இச் சுதந்திர நன்னாளிலே இத் தெளிவைப் பெறுங்கள். உறுதி பூணுங்கள். தொண்டாம் பயணத்தைத் தொடங்குங்கள்.

இதோ என்னுடைய காணிக்கை: 'நீங்கள் வாழுங்கள். இந்தியா வாழ்க; உலகம் வாழ்க.'

இதோ ஊக்க ஒலி; களைப்பைப் போக்கும் ஊக்க ஒலி; ஆர்வமூட்டும் ஊக்க ஒலி; இலட்சியத்தை நினைவுபடுத்தும் ஊக்க ஒலி.

எல்லோரும் வாழ்வோம்
நன்றாக வாழ்வோம்
ஒன்றாக வாழ்வோம்

இதயத்தின் அடியிலிருந்து ஒலிக்கட்டும் இம் மூவொலிகளும். எங்கும் ஒலிக்கட்டும் இவ்வொலி, என்றும் ஒலிக்கட்டும் இவ்வொலி.

# மானிடப் பிறவி

என்னருமைத் தம்பிகளே, தங்கைகளே!

நீங்களும் நானும் பெறற்கரியது பெற்றவர்கள். எது பெறற்கரியது? மானிடப் பிறவி பெறற்கரியது. உயிர்வகைகள் எத்தனை எத்தனையோ! நாம் புல்லாய் முளைத்தோமா? பூண்டாய்க் கிளைத்தோமா? புழுவாய் வந்தோமா? ஊர்வனவாய் உருவானோமா? பறவைகளாய் வெளியானோமா? விலங்குகளாய் வந்தோமா? இத்தனையும் விட்டு வந்தோம். மானிடப் பிறவி பெற்றோம். மக்கள் இனத்திலே தோன்றினோம்.

நீ பிறந்ததும் மக்கள் இனத்தில். யான் பிறந்ததும் மக்கள் இனத்தில். பாரதி பிறந்ததும் மக்கள் இனத்தில். இளங்கோ பிறந்ததும் மக்கள் இனத்தில். வள்ளுவர் பிறந்தது மாக்கள் இனத்திலா? இதற்கு ஏன் உங்கள் கண்கள் சிவக்கின்றன? யானோ வள்ளுவரை இழிவுபடுத்துவேன்? வள்ளுவர் தோன்றியதும் மக்கள் இனத்திலேதான். அதனாலன்றோ மக்கள் இனம் முழுமைக்கும் பொதுமறை வழங்க முடிந்தது!

தமிழ்ப் பெரியோர் இருக்கட்டும். பிற பெரியோர்களையும் கவனிப்போம். இரவீந்திரநாத் தாகூர் பிறந்தது எந்த இனம்? மக்கள் இனம். விவேகானந்தர் பிறந்தது? மக்கள் இனமே. ஷேக்ஸ்பியர் என்ன இனம்? மக்கள் இனம். ஷெல்லி? அவரும் மக்கள் இனத்தவரே! டால்ஸ்டாய் வேறு இனமோ? இல்லை, இல்லை. மக்கள் இனமே.

அண்ணல் காந்தியடிகளும் மக்கள் இனம். அவர்வழி நின்று, உரிமைக்குப் போராடிய டாக்டர் மார்டின் லூதர்கிங்கும் மக்கள் இனமே.

ஏன் திகைப்பு தம்பிகளே? இதுவரை கேள்விப் பட்டதற்கு நேர்மாறாகக் கூறுகிறேனா? இருந்தால் என்ன, பலமுறை கேட்டதால், பொய் மெய்யாகி விடுமா? முதன்முறை கேட்பதால், உண்மை பொய்யாகி விடுமா? வள்ளுவரை தமிழ் இனமாகக் காட்டியது மாயையா? வள்ளுவரை மக்கள் இனமாகக் காட்டுவது மாயையா? ஷேக்ஸ்பியரை ஆங்கில இனத்தவராகக் காட்டியது, குருடன் கண்ட யானையா? ஷேக்ஸ்பியரை செகப்பிரியராகக் காட்டுவது குருடன் கண்ட யானையா? டால்ஸ் டாயை இரஷியராகக் கண்டது தோற்ற மயக்கமா? டால்ஸ்டாயை மக்கள் இனத்தவராகக் காண்பது தோற்ற மயக்கமா? சிந்தித்துச் சொல்லுங்கள்.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

சொன்னதைச் சொல்லுதல் அறிவுடைமையா? உண்மையைக் காணுதல் அறிவுடைமையா?

தம்பிகளே! தங்கைகளே! வாருங்கள் உண்மை யைக் காண்போம்.

இதோ, பச்சைக் குழந்தை; இரண்டொரு மணிகளுக்கு முன்னர் பிறந்த குழந்தை. எங்கே பிறந்த குழந்தை? சேக்கிழார் மரபிலே பிறந்த குழந்தை. எனவே, தமிழ்க் குழந்தை என்று அழைக்கத் தோன்றும் நமக்கு. பட்டஞ் சூட்டு வதைக் கொஞ்சம் நிறுத்துவோம்.

இவ்விளங் குழந்தையை எடுத்துச் செல்வோம்; பாதுகாப்பாக எடுத்துச் செல்வோம்; ஆகாய விமானத்தின்மூலம் கொண்டு செல்வோம்; எங்கே செல்வோம்? கல்கத்தா செல்வோம்; அப்புறம்? தாகூர் பரம்பரையில் அன்பர் ஒருவரைத் தேடிப் பிடிப்போம். அவரிடம், சேக்கிழாரின் வழிவழி

கொண்டு, இதுவே முழு உண்மை என்று உரைக்கிறோம்.

"தோள் கண்டார் தோளே கண்டார்"
"தாள் கண்டார் தாளே கண்டார்"

என்றபடி, 'மொழிகண்டார் மொழியே கண்டார். நாடு கண்டார் நாடே கண்டாராக' நாம் இன்னும் வாழவேண்டுமா? இந் நாளிலாவது நம் நிலையை, பெரு நிலையை, மக்கள் இனம் என்னும் ஒரு நிலையை எண்ணிப் பார்க்க வேண்டாவா?

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு

என்னும் பொய்யாமொழியின் பொருள் ஆழம் காண வேண்டாவா? உங்களைப் பரீட்சையில் எளிதில் தேறவைப்பதற்கா எழுந்தது இக் குறள்? வாழ்க்கைப் பரீட்சையில் தேறவைக்கப் பிறந்த தல்லவா இவ்வறவுரை! உங்கள் கல்வி, உங்கள் முழு நிலையை உணர்த்த உதவட்டும். அது வெறும் படிப்பாயில்லாமல், சீட்டுப்பெறும் உபாயமாக இல்லாமல், வாழ்க்கைக்கு வழிகாட்டும் கல்வியாகப் பயன்படட்டும்.

தம்பிகளே! தங்கைகளே! நீங்களும் நானும், மொழியால் தமிழர், நாட்டால் இந்தியர், இனத்தால் மக்கள். இதுவே முழு உண்மை. அடிப்படை உண்மை. இதைச் சிக்கெனப் பிடியுங்கள்; செம்மையாக வாழுங்கள்.

# இந்தியர்

என்னருமைத் தம்பி, தங்காய்!
வாருங்கள், இக் கருத்தரங்கிற்கு.
எல்லோரும் வாழ்வோம்.
நன்ருக வாழ்வோம்.
ஒன்ருக வாழ்வோம்.

இதுவே சிறந்த கொள்கை. நல்லோர். கொள்கை. நம் முன்னோர் கொள்கை. வாழ்ந்து சிறந்த முன்னோர் கொள்கை. எக் காலத்திற்கும் ஏற்ற கொள்கை. இதை உணருங்கள்; உணர்த் துங்கள். உடும்புப் பிடியாய்ப் பற்றிக்கொள்ளுங்கள்.

'சரி' என்று உங்கள் நெஞ்சம் ஏற்கிறதா? மகிழ்ச்சி.

எப்படித் தெரிகிறது என்று மலேக்காதீர்கள். அதோ உங்கள் கண்களைக் கேளுங்கள். அவை காட்டிக்கொடுத்து விட்டன.

நாம் மேலும் சிந்திப்போம், உடன் பிறந் தோரே!

நாம் எந்த இனமாக வாழப் போகிறேம்? புல் பூண்டாக அல்ல. இதுவன்ரே உங்கள் முடிவு? நல்லது.

மயிலாகக் குயிலாக வாழ விருப்பமா? 'இல்லே, இல்லே' என்கிறீர்களா? போற்றுகிறேன்.

பரியாகக் கரியாக வாழலாமா நாம்? 'ஆகாது, ஆகாது' என்று சொல்லாமற் சொல்லுகிறீர்கள், அப்படித்தானே! ஏற்றுக் கொள்கிறேன்.

'எடுத்தது மக்கட் பிறவி. இருப்பதும் மக்கட் பிறவியாக இருக்கட்டும். நினைப்பதும் மக்கள் இன நினைப்பாக இருக்கட்டும். நடப்பதும் மக்கள் இன

நடப்பாக இருக்கட்டும்.' இம் முடிந்த முடிவிற்கு வந்துவிட்டீர்களா? வரவேற்கிறேன்; பின்பற்று கிறேன்.

'தம்பி வழிகாட்ட, அண்ணன் பின்பற்ற! கேலியா செய்கிறீர்கள் அண்ணு?' என்று திகைத்து நிற்காதீர்கள். மெய்யாகவே சொல்லுகிறேன்.

தம்பியோட்டும் ஈருருளியின் பின்னுல் அண்ணன் ஏறி உட்கார்ந்து பயணஞ் செய்வ தில்லையா? தம்பியோட்டும் பேருந்து வண்டியின் பின்னுல் அண்ணன் அமர்ந்து செல்வதில்லையா? அது தவரு? கேலியா?

அண்ணன் ஐந்தடி. தம்பியும் அதே மட்டத் தில் தேங்கிவிட வேண்டுமா? உள்ளது சிறத்தல் அல்லவா இயற்கை? அதுவன்ருே வாழும் வழி? 'உள்ளதே உயர்ந்தது; அதுவே சிறந்தது; அதற்கு மேல் வேறெது' என்பது தேக்க வழியல்லவா? தேய்வு வழியுமல்லவா?

தேக்கவழி வேண்டா, தேய்வுவழி வேண்டா, உள்ளது சிறக்கச் சிந்திப்போம். உள்ளது உயர உழைப்போம். நல்லதை நாடிப் பாடுவோம், வாருங்கள்.

மக்களாகப் பிறந்து, ஆனுல் மொழிகளை வெறுப்பவர்களாக வெம்பி வீழ்ந்து, நிறவெறிப் பிஞ்சுகளாக உதிர்ந்து, பாழாகும் மக்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டாவா? அவர்கள் மக்களாகக் கனி வதற்கான வழிவகைகளைக் காணவேண்டாவா? அவைகளைக் கையாண்டு விளக்க வேண்டாவா? அதற்கு நிலைகளை உருவாக்க வேண்டாவா? அதற் கேற்ற பணிகளை ஆற்றவேண்டாவா?

அடேயப்பா, சித்தர்களால் ஆகாதது; புத்த ரால் ஆகாதது: என்னுலா ஆகும்? இதுவா உங்கள் மலைப்பு?

இதோ! இப்படித் திருப்புங்கள் உங்கள் சிந்தனையை.

எந்தச் சித்தராலே ஏக இந்தியாவை உருவாக்க முடிந்தது? ஞாயிறு மறையாத, பரந்த பேரரசைச் சேர்ந்த ஆங்கிலேய ஆட்சி ஏக இந்தியாவை உருவாக்கிற்று? ஐந்நூற்றுச் சில்லறைச் சமஸ்தானங்களை விட்டுவைத்ததால் அல்லவா, அவர்களால் இந்தியாவை ஆண்டு கொண்டிருக்க முடிந்தது?

பிறப்புச் சிறப்புடைய மன்னர் மன்னர்களால் ஆகாத பாரதம்—சிறுசிறு நாடுகளாகச் சிதறிக் கிடந்த பாரதம்—யாராலே ஒரே பாரதமாக உருவாகியது? முப்படை மிகுந்த உலகப் பேரரசால் உருவாக்க முடியாத இணைந்த பாரதம் எவராலே உருவாக்கப்பட்டது? சூரிய வம்சத்தாராலா? சந்திர வம்சத்தாராலா? இல்லை, இல்லை.

சூரியவம்ச அரச பரம்பரையைச் சேராத ஒருவரால் உருவானது ஏக இந்தியா. சந்திரவம்ச அரச பரம்பரையைச் சேராத ஒருவரால் உருவானது ஏக இந்தியா. 'இந்தியா ஒன்றே. ஆட்சியும் ஒன்றே. குடிகளும் ஒன்றே' என்ற தெளிவுடைய ஒருவரால் உருவானது ஏக இந்தியா.

ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்

என்னும் உலகியல் அறிந்து, வினையாற்றிய வல்லவரால் உருவானது இணைந்த பாரதம்.

இதனை இதனால் இவன் முடிக்குமென் றாய்ந்து
அதனை அவன் கண் விடல்
வினைக்குரிமை நாட்டிய பின்றை அவனை
அதற் குரியனாகச் செயல்

என்னும் அரசியல் தெளிவுபெற்ற வல்லவர்—எஃகு மனிதர்—அஞ்சா நெஞ்சினர்—வல்லபாய் பட்டேலால் பெற்றோம், இணைந்த இந்தியாவை. பழங்குலப் பெருமைபெருத ஒருவரால் விளைந்ததே இப் பெரு நன்மை.

'பண்டை மகான்களால் செய்ய முடியாததை—மன்னர் மன்னர்களால் செய்ய முடியாததை, தலைமைப் பதவியைக்கூடப் பெறமுடியாத நானு செய்யக்கூடும்? இருக்கிற இந்தியா போதாதா? அங்கும் இங்கும் உறங்கிக் கொண்டிருக்கும் பரிகளையும், நரிகளையும், சிறுத்தைகளையும், புலிகளையும் சண்டைக்கிழுப்பானேன்?' என்று வல்லபாய் மலைத்திருந்தால், அஞ்சியிருந்தால், சும்மா இருந்திருந்தால் இணைந்த இந்தியாவைப் பெற்றிருக்க மாட்டோம். குடியாட்சி இந்தியா என்ற பெரும் பகுதியும் மன்னர் ஆட்சி வனங்கள் பலவும் நீடித்திருக்கும். அவ் வனங்களிலிருந்து, குடியாட்சி இந்தியாவிற்கு அடிக்கடி தொல்லைகள் விளைந்திருக்கும்.

பண்டை மகான்களால் ஆகாதது, நேற்றைய மனிதரால் ஆயிற்று. மன்னர் மன்னர்கள் சாதிக்க முடியாததை சாதாரண குடிமகனுர் எஃகு மனிதர், நம் வல்லபாய் படேல் சாதித்துவிட்டார்.

அத்தகைய எஃகு மனிதராக, நீ இருக்கக் கூடாதா தம்பி? உதிர்ந்து, இறைந்து கிடக்கிற சமுதாயத்தை, ஒரே பாரத சமுதாயமாக்கும் வல்லபாயாக நீ வளரக்கூடாதா தம்பி?

> குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
> மடிதற்றுத் தான்முந் துறும்

இது பொய்யா மொழியாயிற்றே தம்பி! சீட்டுக் கல்விக்கு இக் குறள் தேவைப்படாதிருக்கலாம்,

வாழ்க்கைக் கல்வியில் நடுவிடம் பெற வேண்டாவா இது? இதைக் கொள். கசடறக் கற்றுக் கொள். இதன்வழி நட தம்பி. அச்சத்தை அகற்று. ஆண்மையைப் பற்று. இயற்கையை உணர். ஈடிலா நிலையைப் பெறு.

''ஒன்றே குலம்'' என்னும் மக்கள் சமுதாயத்தை உருவாக்கத் துணிந்துவிடு. அவ்வழி நட; விழிப்பாக நட; ஊன்றி நட; வழி தவறாமல் நட. சாதிப்பற்று என்கிற நச்சுப் பொய்கையில் இறங்காமல் நட. மொழிவெறி என்கிற ஆட்கொல்லியைப் பறித்து உண்ணாமல் நட. செல்வர்கள் சிரிப்பிலே மயங்காமல் நட. பெரியவர்கள் பார்வைக்கு அஞ்சாமல் நட. அக்கம் பக்கத்தார் பார்வைக்கு அஞ்சாமல் நட. அக்கம் பக்கத்தார் ஆதரவு என்கிற பொய்மான் வேட்டையாடாமல் நட. சுற்றத்தார் ஒப்புதல் என்ற கானல் நீரைத் தேடி அலையாமல் நட. தொலைவிலிருந்தாலும் மக்கள் என்கிற உணர்ச்சி உணர்வைத் தேடி நட. இந்தியர் என்கிற தெளிநீரைப் பருக நட. நானும் வருகிறேன் பின்னாலே.

# குறள் வழி

என்னருமைத் தம்பீ, தங்காய்!

அன்பு வணக்கம் இருவருக்கும். 'சாதிப்பற்று என்கிற நச்சுப் பொய்கையில் பருகோம். மொழி வெறி என்கிற ஆட்கொல்லியைப் பறித்து உண்ணோம். இந்தியர் என்கிற ஒருமை உணர்ச்சி யோடு மக்கள் இனத்தை உருவாக்கப் புறப்படு வோம்.'

இம் முடிவிற்கு வந்து விட்டீர்களா? மகிழ்ச்சி. இம் முடிவு உண்மையானதாக இருக்குமா? நெஞ்சின் ஆழத்திலேயிருந்து பொங்கி எழுமா? ஆம்---ஆம் என்று வாக்களிக்கிறீர்கள். அப்படித்தானே! மகிழ்ச்சி.

'காலப்போக்கு' என்று இதை ஒப்புக்கொள்ள வேண்டாம். 'பாராட்டிற்கு, இக்கால வழி இது' என்று இதை ஏற்காதீர். 'மானிடம் பிழைப்பதற்கு இதுவே வழி' என்று உணர்ந்து ஏற்பீர். சிந்தித்து, சிந்தித்து வாரும் இம் முடிவிற்கு. எண்ணித் துணிக, இக் கொள்கையை ஏற்க.

'நாட்டால் இந்தியர்; இனத்தால் மக்கள்' என்பது உண்மையான இலட்சியமாகட்டும். இந்த இலட்சிய ஒலி, உதட்டளவோடு நிற்கலாமா? ஆகாது, குரல் அளவோடு நிற்கலாமா? ஆகாது, ஆகாது. பின் எந்த அளவிற்குச் செல்ல வேண்டும்? நம் உள்ளத்தோடு கலந்து, உயிரோடு கலந்து நம்மை நடத்த வேண்டும். அதுவே நாமாகிவிடவேண்டும்.

பொன் — பலரும் அறிந்த ஒன்று: பலரும் விரும்பும் ஒன்று. ஏன்? அது ஒளிவிடுகிறது. காண் போரைக் கவர்கிறது. எப்போது? மாற்றுக் குறை யாதபோது; பசும்பொன்னானபோது. பொன் மின்னுவது மேற்பூச்சினாலா? இல்லை. பின் எதனால்? உள்ளொளியால்; தூய உள்ளொளியால்.

பொன் கற்பிக்கும் பாடம் என்ன? மாற்றுக் குறையாவிட்டால், நம் இலட்சியமும் ஒளிவிடும். எனவே, நம் இலட்சியம், மாற்றுக் குறையாமல் இருப்பதாக. பாராட்டு, புகழ், ஆசை ஆகிய கலப்படம் இல்லாமல் ஒளிரட்டும் நம் இலட்சியம்.

ஒளிவிடும் மக்கள் இனத்தைக் காண விரும்புகிறோம். ஒன்றுபட்ட மக்கள் இனத்தை உருவாக்கத் துடிக்கிறோம். இவ் விருப்பமும் துடிப்பும், உண்மையாக ஒளிரட்டும். உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும். அவ்வாக்கு, கேட்போரைப் பிணிக்கும். பிணித்தாரைப் பின்பற்றச் செய்யும். எனவே, இலட்சியத்தை, உள்ளத்தில் உண்மையாக ஏற்றுக்கொள் தம்பீ!

சாதிப்பற்றும், பகுதிப் பாசமும், நிறவெறியும் நீடித்த கடுநோய்கள். 'நாங்கள் பல்லவ நாட்டவர், நீங்கள் பாண்டிய நாட்டவர்' என்பது, நெடுநாள் ஊறிப்போன பிரிவினை நினைப்பு. அவர்கள் சேர நாட்டவர், இவர்கள் சோழ நாட்டவர் என்பதும் புரையோடிப் போன சிதைவு நினைப்பே! 'மௌரிய நாட்டவர் பாரீர், கலிங்க நாட்டவர் காணீர்' என்பது அதே தன்மையதாகும். இத்தகைய, பகுதி வாதங்களால் அல்லவா அன்று அன்னியர்களுக்கு அடிமைப்பட்டிருந்தோம்? இத்தகைய பகுதி வாதங்கள் அல்லவா நம்மைத் தாக்கும் அளவு அண்டை நாட்டானுக்குத் துணிச்சலைக் கொடுக்கிறது? சிற்றரசுச் சிந்தனைகள்—பகுதிப் பாசங்கள் வரலாற்றுத் தொடக்கத்தோடு தொலைய வேண்டாவா? இப் பிள்ளைப்பருவ நினைப்புகளைத் தொடர விடலாமா? விரைவிலே நீக்க வேண்டாவா இவற்றை?

இவற்றை, விளையாட்டாக போக்கிவிட முடியுமா? முடியாது. வினையால், தெளிந்த வினையால், உறுதியான வினையால் மட்டுமே தணிக்க முடியும். நொடிப்பொழுதில் தணிக்க முடியுமா? முடியாது; நெடும்பொழுது பாடுபட்டே தணிக்க முடியும். அதற்கேற்ற பொறுமை தேவை. நீண்ட முயற்சி தேவை. அயராத உழைப்புத் தேவை.

வழியிலே, தடைக்கற்கள் பலப்பல. தூற்றலும் பலப்பல. இவற்றையே எதிர்பார்க்க வேண்டும். இவற்றைப் பொருட்படுத்தாது முன்னேற வேண்டும். போர்முனைக்குப் புறமுதுகு காட்டாத ஆண்மை வேண்டும். சமூகப் போர்முனைக்கும் அத்தகைய ஆண்மை தேவை. அதற்கேற்ற உறுதியைத் தேடிக்கொள்வோமா?

> ''துச்சமாக எண்ணி நம்மைத் தூறுசெய்த போதினும்
> அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே''

என்று எக்காளமிட்டு நடப்போமா?

கொள்கையில் நன்மை, உண்மை, உறுதி மூன்றும் சேர்ந்து விட்டால் வெற்றிக்குக் கேட்கவா வேண்டும்?

> எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்

இது பொய்யா மொழியன்றோ! இதை உணர்ந்து, எண்ணித் துணிவோம். துணிந்து நடப்போம்.

''நல்லது. காலம் சரியானதா?'' என்ற ஐயம் பிறக்கிறதா தம்பீ!

ஐயம் தெளிவோம், வா! நம் தற்காப்புக்காக—யார் மண்ணையும் கவர அல்ல—போராட வேண்டிய நெருக்கடி நேர்ந்துள்ளது. இப் போரில் வெற்றிபெற வேண்டும். அதற்கு ஒற்றுமை தேவை. ஒற்றுமைக்

குக் குறுக்கே நிற்கும் சாதிப் பாகுபாடு உணர்ச்சிகளை, பகுதிப் பாசங்களைத் தூக்கியெறிவதற்கு இதைவிட ஏற்றத் தருணம், சிறந்த தருணம் வாய்க்குமா? இந் நெருக்கடியில்-இன்றைய, அளவுகடந்த ஆர்வத்தில், குறுகிய பற்றுக்களைத் துறக்காமல் எப்போது துறப்பது?

'நல்லோர் பலர், 'இதந்தருமனையினீங்கி, இடர்மிகு சிறைப்பட்டு'ப் பெற்றுத்தந்த சுதந்திரத்திற்கு ஆபத்து வந்துள்ளது. கண்ணினுமினிய சுதந்திரத்திற்கு வந்துள்ள ஆபத்தை உணருங்கள். உணர்ந்தீர்களா? நல்லது.

'மண்ணில் இன்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின் மாண்பினை இழப்போமா? மாட்டோம்' என்று முழங்குவது கேட்கிறது. அம் முழக்கம் செயலாக மாறவேண்டாவா? வேண்டுமென்று ஒப்புக்கொள்கிறுயா தம்பீ? நல்லது, தம்பீ! இதோ செயல் திட்டம். ஒன்றுபடுவோம். சாதி நினைப்புகளைத் துறந்துவிட்டு ஒன்றுபடுவோம். பகுதிப் பாசங்களை அறுத்துவிட்டு ஒன்று படுவோம். 'நாம் எல்லோரும் இந்திய மன்னர்' என்பதை அறிந்து ஒன்றுபடுவோம்.

> புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
> நட்பாம் கிழமை தரும்.

இது யாருக்கோ காட்டிய வழியா? நமக்குக் காட்டிய வழியல்லவா? இப் பொது மறையை ஏற்போம். இந்தியன் என்கிற உணர்ச்சியை ஏற்போம். உண்மையாக ஏற்போம். உறுதியாக ஏற்போம். நம் மூச்சாக ஏற்போம். பேச்சாக ஏற்போம். செயலாக ஏற்போம். முன்னேற்றப் பாதையில்—வெற்றிப் பாதையில் விரைவோம் வாரீர்.

# உழைப்போம்; பிழைப்போம்

என்னருமைத் தம்பி, தங்காய்!

இதோ விரைந்து வருகிறேன். உங்களைப் பின் தொடர்ந்து விரைந்து வருகிறேன். உங்களோடு, முன்னேற்றப் பாதையில் விரைந்து வருகிறேன். சேர்ந்து செல்வோம். எல்லோருமாகச் சேர்ந்து செல்வோம். ஒருமுகமாகச் சேர்ந்து செல்வோம்—இந்தியர்—ஆம், ஆம், நாம் அனைவரும் இந்தியர்; இஸ்லாமியரும் இந்தியர்; இந்துக்களும் இந்தியர்; கிருஸ்தவரும் இந்தியர்; சீக்கியரும் இந்தியர்; சமணரும் இந்தியர்; பௌத்தரும் இந்தியர்; பார்சியரும் இந்தியர்; அனைவரும் இந்தியர் என்னும் நல்லுணர்ச்சியோடு சேர்ந்து செல்வோம்.

பல்லவர் என்றும், பாண்டியர் என்றும் பேசும் பிள்ளைப்பருவப் பேச்சிற்குச் செவிசாய்க்காது செல்வோம். மாராட்டியர், மொகலாயர் என்ற நினைப்பைத் துறந்துவிட்டுச் செல்வோம். 'இமயம் முதல் குமரிவரை வாழும் அனைவரும் இந்தியர்; ஒரு நிறை இந்தியர்' என்னும் தெளிவோடு செல்வோம்.

'கோடி, கோடிப் பேர்கள்; உடலால் மட்டுமே. உள்ளத்தாலோ? ஒருவரே! எனவே, எவரும் கள்ளத் தால் நெருங்கொணாதே; இத்தகைய நிலையை உருவாக்கிச் செல்வோம். உணர்ச்சிவழி ஒருமைப் பாட்டோடு செல்வோம்; வாரீர்!

கொள்கையில் தெளிவு உண்டு நமக்கு. நல்லது. அதைக் கடைப்பிடிப்பதில் உறுதியுண்டா? ஆம் என்கிறீர்களா, உடன் பிறந்தோரே! மகிழ்ச்சி.

கொண்டால் கொண்டலாக வரும் பழிச் சொற்களை உதறிவிட்டுச் செல்ல, பண்படுத்திக்கொண்டீர்களா? போற்றுகிறேன். குறுக்கிடும் தடைமலைகளைக் கண்டு மலைப்பீர்களா? மலைக்க மாட்

டோம். எக்காலும் மலைக்கமாட்டோம் என்று ஏக்காளமிடுகிறீர்களா? மலையதிர முழங்குகிறீர்களா? நன்று, நன்று உம் பேராண்மை. இந்தியம் வளர்க. இந்தியம் வெல்க. இந்தியம் விழுதுவிட்டுப் பரவுக. தடைமலைகளை ஏறியும் வெல்வோம்; வளைத்துப் பிடித்தும் வெல்வோம். ஏன்? வெற்றிற்கு வழிகள் பலப்பல.

அத்தனைக்கும் அடிப்படை, தன்வலிமை. வற்றாது ஊறும் தன்வலிமை. இறைக்க இறைக்க வற்றாது ஊறும் தன்வலிமை. காலமெல்லாம் வற்றாது ஊறும் தன்வலிமை.

அத்தகைய தன்வலிமையைப் பெறவேண்டும் தம்பீ!

'எனக்கு வேண்டாவா அண்ணா?' என்று நீ கேட்பது, காதில் விழுகிறது தங்காய். உனக்குந் தான், தன்வலிமை தேவை தங்காய்.

தன்வலிமையே, தன்னினைவிற்கு வேர். தன்னினைவே, தன்னுரிமைக் கனிமரம். எனவே, தன்வலிமையை வளர்த்துக் கொள்வோம். வாரீர், ஒவ்வொரு ஆணும் வளர்த்துக் கொள்வோம். ஒவ்வொரு பெண்ணும் வளர்த்துக் கொள்வோம்.

தன்வலிமைக்கு வழியென்ன? உழைப்பே. உழைப்பே விளைவு; உழைப்பே பொருள்; உழைப்பே செல்வம்; உழைப்பே உலகம்.

ஆதியான உழைப்பைப் போற்றுவோம். உழைப்பை மேற்கொள்வோம். எத்தகைய உழைப்பை மேற்கொள்ளுவோம்?

ஆக்க உழைப்பை மேற்கொள் தம்பீ. ஆணையிடும் அலுவலே வாழ்வு என்று ஏமாற வேண்டாம் தங்காய்.

ஆளுக்கு ஆள் கோப்புத்தாள்களைத் தள்ளி விடும் பணியோ பொய்மான். இதிலே கருத்தை இழக்காதீர்.

விளைவிக்கும் உழைப்பை—உணவை விளைவிக்கும் உழைப்பைப் போற்று. மேற்கொள். ஏன்? சேறு படிந்தாலும், சோறு போடும் தொழில் அது. உனக்கும் சோறு போட்டு, ஊருக்கும் சோறு போடும் தொழில் அது. அதைத் தூற்றாதே. அதில் ஈடு பட்டுள்ளவர்களை ஒதுக்காதே. அவர்களை இழிவு படுத்தாதே. மாறாக, அதை மேற்கொள்; பகுதி நேரப் பணியாக மேற்கொள்.

மண்ணிலே பிறந்து, மண்ணிலே வாழ்ந்து, மண்ணிலே மறையப் போகும் நாம், மண்ணோடு உறவாட வேண்டாவா? மண்ணைக் கிளறி உணவைப் பெருக்க வேண்டாவா? மண் படுமே என்று அஞ்சலாமா? சிந்தித்துப் பார் தம்பீ! தங்காய்!

வாழ்க்கைப் பொருள்களைச் செய்விக்கும் உழைப்பை மேற்கொள். நூற்கும் தொழிலைத் தூற்றாதே; நெய்யும் தொழிலை இகழாதே. அது மக்களின் மானங்காக்கும் தொழில். நல்லதும், சிறந்ததுமான அதைப் போற்று.

உறைகளை உருவாக்குவோர் இழிந்தவரா? அத் தொழில் இழிந்ததா?

'செய்தவர் இழிவானவர், செய்தது இழிந்தது' என்றால் நீ உறையும் வீடும் இழிந்ததன்றோ? அதில் உறைபவரும் இழிந்தவர்தானே?

முகங்கோணாதே தம்பீ! உறையுளும் சிறந்தது. இழிந்ததல்ல. அதில் வாழும் நீயும் சிறந்தவன். அவ் வீட்டைக் கட்டிய கொத்தனாரும் சிறந்தவர். இழிந்தவரல்லர். அவர் தொழிலும் சிறந்ததே.

'வீடு கட்டும்' தொழிலா இழிந்தது? இல்லை இல்லை.

இப்படியே செய்தொழில் பலவும் சிறந்தவை. மண் பிரித்து பொன்னெடுக்கும் தொழில் மட்டுமா சிறந்தது ? காய்ச்சி உருக்கி இரும்பைத் தரும் தொழிலும் சிறந்ததே. கம்பியை வெட்டிக் காராக்கும் தொழிலும் அப்படியே!

'உடலுழைப்பு இழிந்தது ; சூழ்ச்சிப் பிழைப்பு சிறந்தது' என்னும் தவறான கருத்தைத் தள்ளிவிடு. சுரண்டும் பிழைப்பு யாருக்கு வேண்டும்? சுருட்டும் பிழைப்பு நமக்கேன்?

உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம். ஆக்குந் தொழில் பலவும் மேற்கொள்வோம். தேவைப் பொருள் பலவும் செய்து குவிப்போம்.

# உயிர் காக்கப் பயிர் காப்போம்

என்னருமைத் தம்பி, தங்காய்!

'உடலுழைப்பு இழிந்தது' என்னும் தவருன கருத்தைத் தள்ளிவிட்டீர்களா? மகிழ்ச்சி. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனே செய்ய முடிவுசெய்து விட்டீர்களா? பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன்; பின்பற்றுகிறேன்.

ஆக்குந் தொழில் பலவும் மேற்கொள்வோம் வாரீர். தேவைப் பொருள் பலவும் செய்து குவிப்போம்.

தேவைகள் பலப்பல. அவற்றிலே அடிப்படைத் தேவை எது? உணவே அடிப்படைத் தேவை. உணவின்றி வாழ்ந்த உயிருண்டோ? இல்லே. ஆதி மனிதன்—மர உரியை அணிந்தவனுக்கும் முந்திய மனிதன்—தழைகளேக் கோர்த்து உடுத்திக் கொள் வதற்கு முன், எதற்காகப் படாத பாடுபட்டான்? உடைக்கா? உறையுளுக்கா? இல்லே, இல்லே. பின் எதற்கு? உணவிற்கு. உயிர் வாழவைக்கும் உண விற்கு அவன் பட்டபாடு கொஞ்சமா? இயற்கை யாகக் கிடைக்கும் காய்கறிகளேப் பறித்து உண் டான். கிழங்குகளேத் தோண்டி உண்டான். உணவுத் தேவையைச் சமாளித்த பிறகே, ஆதி மக்கள் இனம், உடையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிற்று.

சரி. அதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்ன? உணவுத் தேவையே முதல் தேவை. அதை முதலில் கவனிப்போம், அதில் தன்னிறைவு பெறுவோம் வாரீர்!

''எப்படி முடியும்?'' எத்தனே ஆண்டுகளாக உணவுப் பற்ருக்குறை இருக்கிறது? இந்த ஐயம் எழுந்து குழப்புகிறதா தம்பீ! பொறு மனமே, பொறு. மனமே பொறு. ஐயம் தெளிவோம். யாரிடம்

கேட்டு? என்னிடம் கேட்டா? அல்ல. நிபுணர்களைக் கேட்டா? அல்ல. பின் யாரைக் கேட்டுத் தெளிவோம்?

அறிவுக் கடலிடம் செல்வோம். மன்பதைக்கும் மறைதந்த சான்ருேரிடம் செல்வோம். பொய்யா மொழியாரிடம் செல்வோம். திருவள்ளுவரிடம் செல்வோம். இதோ தெளிவுரை. காலத்தாற் கறைபடாத அறிவுரை, வையகம் முழுவதற்கும் பொருந்தும் வாய்மை. கேளீர் உடன் பிறந்தோரே!

இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும்

ஆறுதல் உரையல்ல இது. வெறும் ஊக்க உரை அல்ல இது. மயக்க உரையல்ல இது. மெய்யுரை இது. எக்காலும் மெய்யுரை இது. இதை ஏற்போம் வாரீர். இதைப் பின்பற்றுவோம் வாரீர்.

'இல்லையே! உணவில்லையே' என்று ஏங்குகிறது மக்கள் இனம். அந்த ஏக்கத்திலே சோர்ந்து கிடக்கிறது மக்கள் இனம். இதைக் காண்கிருள் நல்லாள்; எந்த நல்லாள்? நிலமென்னும் நல்லாள். அவள் தாயினும் தயையுடைய நல்லாள் அன்ருே? அத்தயையிஞலன்ருே, அகழ்வாரையும் பொறுத்துத் தாங்கி நிற்கிருள். அந் நல்லாள் நம் ஏக்கத்தைக் கண்டு ஏங்குவாளா? அலறி அழுவாளா? துடித்துத் துவளுவாளா? அவள் ஏன் ஏங்கவேண்டும்? அவள் ஏன் அழவேண்டும்? அவள் ஏன் துவளவேண்டும்? அவளுக்குத் தெரியுமே நம் அறியாமை. எத்தனை, எத்தனை வேண்டுமாஞலும் விளைவித்துத்தர நிலத் தாய் உள்ளாள் என்பது நமக்குத் தெரியாது. அவளுக்குத் தெரியும். பாலை என்று மலைக்கிருேம் நாம். சோலையாகக் காத்திருக்கும் நிலம் அது என்பதை அவள் அறிவாள். எனவே, ஏங்காது.

அழாது, துடிக்காது நம்மைக்கண்டு நகைக்கிருள். வாயுரையிலும் சிறந்த குறிப்புரையால் உணர்த்துகிருள். எதை உணர்த்துகிருள்? 'உணவு விளையும்; வேண்டிய மட்டும் விளையும்; நெடுங்காலம் விளையும்; இதை முடித்துத் தரவல்லவா நான் காத்திருக்கிறேன். உன் சிறுமையையெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். முடங்கிக் கிடக்காதே. எழுந்திரு. சோம்பலை உதறித் தள்ளு. என்னிடத்திலே வா. என்னேடு பாடுபடு. என்னிடத்தில் உள்ள தனைத்தும் எனக்கே அல்ல. உங்கள் அனைவருக்குமே' என்று உலகப் பொதுமொழியாம் குறிமொழியால், நகைமொழியால் வழிகாட்டுகிருள் நிலத்தாய்.

அவ் வழியை உணர்ந்தீர்களா? நல்லது; பின் பற்றுவோம் வாரீர், உடன் பிறந்தோரே. பயிர் செய்வோம். பகுதிநேரப் பணியாகவேனும் பயிர் செய்வோம். ஆண்டு முழுவதும் செய்யக் கூடுமானல் நன்று. இல்லையேல் என்றுமே சும்மா இருக்கலாமா?

ஆகாது; ஆகாது தம்பீ. மழைப் பருவத்திலாவது பயிர் செய்வோம். கரும்பும் செந்நெல்லும் பயிரிடுவது மட்டுமே பயிர் என்று நினைக்காதீர். வாழையும் தென்னையும் பயிரிட முடிந்தால்தான், பயிர் செய்ய முன்வரவேண்டுமென்று எண்ணுதீர். இரண்டொரு திங்கள் மட்டுமே பயிரிடக்கூடிய காய்கறித் தோட்ட வேலையும் செய்யவேண்டிய வேலையே.

நாட்டின் உணவுத் தன்னிறைவிற்கு உதவும். வேலையே கீரைப் பாத்தியும். உயிரைக் காக்கும் இதை உணர்வோம். சின்னஞ்சிறு நிலம் இருப்பின், அதிலும் பயிரிடுவோம். விளையக்கூடிய ஏதாவதொரு உண்பண்டத்தை விளைவிப்போம். நீர்வளமுடைய திங்கள்களிலாவது பயிரிடுவோம்.

நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்குமுன் நம் சிற்றூர்கள் இருந்த நிலை தெரியுமா? இளைஞர் களாகிய உங்களுக்குத் தெரியாதது வியப்பல்ல. எனவே என் பட்டறிவை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

அன்று எல்லாச் சிற்றூர்களிலும், எல்லாப் புறக்கடைகளிலும், பச்சைக் கொடிகள் படர்ந் திருக்கும், பூத்துக் காய்த்திருக்கும். கொடிகள் மட்டுமா? இல்லை. செடிகளும் பசுமையாக வளர்ந் திருக்கும்; பூத்திருக்கும்;காய்த்திருக்கும். இப் பசுமை நிலை இங்கும் அங்கும் மட்டுமா? இல்லை. இங்கொரு வீட்டிலும் அங்கொரு வீட்டிலுமா? இல்லை, இல்லை. எல்லா வீடுகளிலும் இதே நிலை. எல்லாக் குடிசைகளையடுத்தும் இதே நிலை. பெருநிலக்கிழார் பெரியசாமியின் வீட்டுப் புறக்கடையில், காய்கறித் தோட்டம் செழித்திருக்கும். வாய்க்கால்கரை வரதனின் குடிசையின் பின்னால் சின்னஞ்சிறு குழியிலே முளைத்து, அவர் குடிசை மேலேறிப் படர்ந்து, பூத்துக் காய்க்கும் பூசனிக் கொடி செழித்திருக்கும். இடைநிலையிலே உள்ளவர்கள் வீடுதோறும் இப்படியே. பச்சைக் காய்கறிகள், சொந்தக் காய்கறிகள், கீரை வகைகள். எனவே உள்ளூர் காய்கறித் தேவைகள் அனைத்தையும், உள் ளூரிலேயே பெற்று வந்தார்கள் அக் காலச் சிற்றூர் மக்கள். பச்சையாக உண்டு உரம் பெற்று வந்தார் கள். இத் தன்னிறைவே, சிற்றூர் தன்னிறைவே, காய்கறித் தன்னிறைவே நம் முன்னோர்களை வறு மைக் கொடுமையிலிருந்து காப்பாற்றியது.

இன்றைய சிற்றூர்களின் நிலை என்ன? எத்தனைச் சிற்றூர்களில், வீட்டிற்குவீடு காய்கறித் தோட்டம் உண்டு? எத்தனைச் சிற்றூர்களில், குடிசைக்குக் குடிசை படரும் பச்சைக் கொடிகளைக்

காணமுடியும்? பல ஊர்களில், பல வீட்டுப் புறக் கடைகளெல்லாம் கரம்பாக அல்லவா காட்சியளிக் கின்றன? குடிசைகள் நிலையாவது தாங்கும் நிலையில் உள்ளதா? குடிசைகள் மீதும் படரும் கொடி களுக்குப் பதில் பறக்கும் கொடிகளன்றோ நம்மை ஈர்க்கின்றன? கவனம் எல்லாம் கொடிகளைப் பறக்க விடுவதிலேயே திருப்பிவிடலாமா? வகை வகையான கொடிகளை உருவாக்கிப் பறக்க விடுவதிலேயே முழு முயற்சியும் திரும்பிவிடலாமா? படரும் கொடிகளை மறந்து, பறக்கும் கொடிகளையே நினைத்துக் கொண் டிருந்தால், நாமும் ஆலாய்ப் பறக்கத்தானே வேண்டும்? தொடர வேண்டாம், கவனமாற்றம். திருப்புங்கள் உங்கள் சிந்தனையை. மாற்றுங்கள் உங்கள் முயற்சியை. எண்ணுங்கள் பண்டைச் சிற்றூர்களை. பின்பற்றுங்கள் அக் கால மக்களை. வீட்டிலும் விடுதியிலும் பயிரிடுங்கள். கல்லூரித் தோட்டத்திலும் பயிரிடுங்கள். கிடைத்த இட மெல்லாம் கிளறி விதையுங்கள். தேர்ந்தெடுத்து விதையுங்கள். பருவத்துக்கேற்ற பயிரை வளருங் கள். காத்து வளருங்கள். பயிரிட்டு உண்ணுங்கள். முடிந்த சிறுஅளவாவது உங்கள் உணவுப் பொருளை உங்கள் உழைப்பாலே பயிரிட்டு வாழுங்கள். தன் னிறைவுக்குத் துணைசெய்யுங்கள். தனி ஆள் தன் னிறைவுக்குத் துணைசெய்யுங்கள். தனி ஆள் தன் னிறைவும், நாட்டுத் தன்னிறைவும் விரைவில் கைகூட உங்கள் பங்கு எங்கே?

# தருமம் மறுபடி வெல்லும்

என்னருமைத் தம்பி, தங்காய்!

ஒன்றை நினைப்போம், அது ஒழிந்திடும். நினையாத ஒன்றோ, தானே வந்து நிற்கும். தீயதே வந்து நிற்கும் என்பதல்ல, தீயதுபோல் நல்லதும் வந்து நிற்கும். இதுவே வாழ்க்கை.

அண்மையில் இப்படி நடந்தது எனக்கும். பஞ்சாப் மாநிலத்தின் தலைநகரம் சந்திகார். அந்த நகரில், 1965 அக்டோபர் 28, 29 தேதிகளில் மத்தியக் கல்வி ஆலோசனைக் குழுவின் ஆண்டுக் கூட்டம் நடந்தது. அக் கூட்டத்திற்குச் செல்ல எனக்கு ஆணை வந்தது. சென்னையிலிருந்து சந்திகார் வரை இரயிலில் செல்லத் திட்டமிட்டேன். அப்படியே புறப்பட்டேன்; ஜான்ஸியில் நின்று விட்டது அந்த இரயில். காரணம்? வழியில் சாமான் இரயில் கவிழ்ந்து விட்டதாம். எனவே, மேற்கொண்டு செல்லமுடியாத நிலை. மணிக் கணக்காக எங்கள் இரயில் காத்திருந்தது. பின்னர் வழிபிறந்தது. நேர் வழியல்ல—சுற்றுவழி. கான்பூர் வழியாக டெல்லிக்குச் சென்றது எங்கள்வண்டி. இதனால் ஏற்பட்டது காலதாமதம்.

நான் டெல்லியிலிருந்து சந்திகார் செல்ல ஏற்பாடாகியிருந்த இரயில் சென்றுவிட்டது. விளைவு? பஸ் பயணம். கூடிய விரைவில், சந்திகார் கூட்டத்திற் கலந்துகொள்ள வேண்டுமென்ற அவா உந்திற்று. ஆகவே பேருந்து வண்டியேறி, சந்திகாருக்கு விரைந்தேன். இதனால் பட்டப்பகலில், பாஞ்சால நாட்டின் வழியாகச் செல்லும் வாய்ப்புக் கிட்டிற்று. நெடுந்தூரம் நாட்டையும் மக்களையும் கவனிக்க முடிந்தது. இப் பட்டறிவு பயனுள்ளதாக இருந்தது. பலப்பல நினைவுகளை விளைவித்தது. இதோ அவ் விளைவு! அள்ளிக் கொள்ளுங்கள்.

பாஞ்சால நாட்டின் வளத்தைக் கண்ணாரக் கண்டேன். அவ் வளம் இன்றுதான் பிறந்ததா? இல்லை. நேற்று வந்ததா? இல்லை. தொன்றுதொட்டு வருகிறது அது. ஏறி இறங்கி வருவது; இங்கல்லவா வெகுகாலத்திற்கு முன், ஹரப்பா நகரை அமைத்து, நாகரிகத்தின் முதிர்ந்த நிலையை உலகிற்கு உணர்த்தினர் நம் முன்னோர். என் நினைவு ஹரப்பாவிற்குத் தாவிற்று. அதன் தொன்மையைக் கருதினேன். பெருமையை எண்ணினேன். சிறப்பைச் சிந்தித்தேன்.

நம் நாடு, பழம்பெரும் நாடு என்பதை உணர்ந்தேன். 'நீர் இதன் புதல்வர், இந் நினைவகற்றாதீர்' என்று விடுதலைக் கவிஞர் பாரதி, என் எதிரில் நின்று உரைப்பதுபோல் தோன்றிற்று. மொகஞ்சதராவை இழந்ததுபோல, ஹரப்பாவை இழக்கலாமோ என்று தமிழ் ஆய்ந்த இந்தியரெல்லாம் இடி முழக்கம் செய்வதுபோல் தோன்றிற்று.

மனித நாகரிகத் தொட்டில்களில் ஒன்றான இப் பாரதத் தொட்டிலில் எத்தனை எத்தனை வீரர்கள் வளர்ந்தார்கள்! எத்தனை எத்தனை விவேகிகள் வளர்ந்தார்கள்! வளர்ந்து சிறந்த சான்றோர்க்குக் குறைவுண்டா? உழைத்து, வளம் படுத்திய உழைப்பாளர் சிலரா?

ஹரப்பாவின் சிறப்பிலிருந்து குருக்ஷேத்திரத்திற்குப் பாய்ந்து என் நினைவு. ஏன்? குருக்ஷேத்திரம் பாஞ்சாலத்தில் உள்ள இடமும், பாண்டவர் பட்டபாடும், ஆண்ட நூற்றவர் அதிகார மமதையில் செய்த அடாத மானபங்கமும் மின்னின என் அறிவில். ஆணைகேட்டுக் கொதித்த பீமனைக் கண்டேன். அமைதியின் திருவுருவாம் தருமனையும் கண்டேன்.

''தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் தருமம் மறுபடி வெல்லும்'' என்னும் இயற்கை மருமத்தை நம்மாலே உலகம் கற்கும் வழிதேடி வகையீந்த விதி செய்தான். இன்று 'கட்டுண்டோம் பொறுத்திருப்போம். காலம் மாறும்' என்ற அமைதி யுரை, நம்பிக்கையுரை நினைவிற்கு வந்தது.

இவ்வியற்கை மருமத்தைப் பாண்டவரால் மட்டுமா உலகம் கற்றது. ஒவ்வொருவர் வாழ்விலும் 'தருமத்தைச் சூது கவ்வ'க் காண்பதில்லையா நாம்? அறத்தின் வெற்றியிலே அசையாத நம்பிக்கையும் அதனால் பெறும் பொறுமையும் முடிவில் சூதினை வெல்வதைப் பலமுறை காண்பதில்லையா? பலரது நிலையிலே காண்பதில்லையா? இப்படி ஓடிற்று என் நினைவுச் சிற்றருவி.

இன்றைய இந்தியாவின் நிலைக்கு வந்தது நினைவு. பாகிஸ்தானிடம் பொறுமை காட்டினோம். நெடுங்காலம் — நீதியை எடுத்துரைத்தோம்; நேர்மையைச் சுட்டிக் காட்டினோம். நேசக் கரம் நீட்டினோம். அந் நாடு, உரிமையின்றி, உடைமை கொண்ட நம் பகுதியைத் திருப்பிப் பெற வாதிட்டோம். ஆயினும் வாள் எடுத்தோம் இல்லை. பொறுமையினைப் புரிந்துகொள்ளும் திறமையில்லை பாகிஸ்தானுக்கு. சாதுக்களைக் கோழைகளாகக் கருதிவிட்டது பாகிஸ்தான்; போர் தொடுத்தது. அப்புறம் ?

இத் தலைமுறையின் தருமராக, சாந்தமூர்த்தி யாக விளங்கும் நம் பிரதமரும்—லால்பகதூரும்— பண்டைய தருமர் நிலைக்கு ஆளானார். போர் மூண்டது. மக்கள் திரண்டு நின்றனர். ஒன்றுபட்டு நின்றனர். உறுதியோடு நின்றனர். வெற்றி காண முனைந்து நின்றனர்.

படுகளத்தில் ஒப்பாரி ஏது? கீதைவழியைப் பின்பற்றினர் நம் போர்வீரர். வேறு பற்றுகளை மறந்து நாட்டுப்பற்றையே முன்னிறுத்தி நாட்டின் உரிமையையே உளத்திற்கொண்டு, நீதியையே நினைத்து, வீரத்தோடு மட்டுமின்றி விவேகத் தோடும் கடும்போர் புரிந்தனர் நம் வீர மரபினர்.

கூற்றுடன்று மேல்வரினும் கூடிஎதிர் நிற்கும்
ஆற்ற லதுவே படை.

இது படைக்கு இலக்கணம் கூறும் திருக்குறள்; பொதுமறை. இவ்விலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்கினர் நம் பாரதப் போர்வீரர்கள். வெள்ளம் போல வந்தனர் பாகிஸ்தானியர். எண்ணிக்கையில் ஒன்றுக்கு நான்காக வந்தனர் பகைவர். வந்த எதிரிக் கருவிகளும் அதே விழுக்காடு. ஆயினும் என்? மலைத்தார்களா நம்மவர்? இல்லை, திகைத் தார்களா நம்மவர்? இல்லை. சளைத்தார்களா நம்மவர்? இல்லை, இல்லை. வீரத்தோடு விவேகத் தையும் வாழையடி வாழையாகப் பெற்றவர்கள் அல்லவா நம்மவர்! எனவே மலைக்காமல், சளைக் காமல் கூடி, எதிர்நின்று போரிட்டனர். துணிந்து தாக்கினர். விரைந்து முன்னேறினர். வெற்றிமேல் வெற்றியும் பெற்றனர். எல்லாப் போர்முனைகளிலும் வெற்றி கொண்டனர்.

டாங்குகள் கொண்ட களிப்போடு—பலப்பல டாங்குகள் கொண்ட போதையோடு—நுழைந்தனர் பாகிஸ்தானியர். வந்த போரோ, உரிமைப்போர், அறப்போர், தன்மானப்போர், தற்காப்புப்போர் என்ற தெளிவோடு, ஒன்றுகூடி எதிர்த்து நின்றனர் நம் படைவீரர். முறுக்குகளை நொறுக்குவதுபோல டாங்குகளை நொறுக்கித் தள்ளினர். மண்ணோடு நின்றார்களா? விண்ணையும் விடவில்லை நம் வீரர் கள். "காற்றிலேறி விண்ணிலே சாடினர்."

எவற்றை? பகைவரின் விமானங்களை. எத்தகைய விமானங்களை? சின்னஞ்சிறியனவற்றையா? இல்லை. வல்லரசால் செய்யப்பட்ட வலிமைமிக்க விமானங்கள் என்று விளம்பரப்படுத்தப்பட்ட பெரும் விமானங்களை. பகைவரின் விமானக் கோட்டைகளைத் தகர்த்தெறிய, நம் வீரர் எத்தகைய விமானங்களைப் பயன்படுத்தினர்? சின்னஞ்சிறு விமானங்களைப் பயன்படுத்தினர். சொந்த விமானங்களைப் பயன்படுத்தினர். பிச்சை கேட்டுப் பெற்ற அன்னிய விமானங்களையல்ல, நம் உழைப்பால், நாம் சிந்திய வியர்வையால் பெங்களூரில் உருவான சொந்த இந்திய விமானங்களைக்கொண்டு பகைவனின் கொட்டத்தை அடக்கினர். தொடர்ந்து அனுப்ப விமானமில்லை பாகிஸ்தானியரிடம் என்ற நிலைக்குத் தள்ளினர்.

பட்ட உதை, பகைவரின் போதையைப் போக்கிற்று. சிறு தெளிவைக் கொணர்ந்தது. போர் நிறுத்த வாக்கை வரவழைத்தது. அறத்திற்குக் கட்டுப்பட்ட நாம், அவ்வாக்கிற்குக் கட்டுப்பட்டோம். ஆனால், பகைவனோ, அறம் இதென்றும், மறம் இதென்றும் அறியாதவன். எனவே உதையினால் ஏற்பட்டபோதை நீக்கம் தற்காலிகமானதாகி விட்டது. உதை நின்றதும் போதை மீள்கிறது. சுடுதல் தொடர்கிறது. இருப்பினும் என்? நிலைமை மிஞ்சுகையில் நீராக்கவன்றோ பொறுமை காத்தோம், காக்கிறோம்.

# வீரத்தின் விளைநிலம்

என்னருமைத் தம்பி, தங்காய்!

ஹாரப்பா காலத்திலிருந்து குருக்ஷேத்திர காலத்தின் வழியாக, நேரே நம் காலத்தின் மேல் பறந்து பாரதியாரின் வீர முழக்கத்தை முழங்கிக் கொண்டிருந்த என் நினைவு, இந்திய விடுதலைப் போரின்மேல் சென்றது.

வாழ்ந்து சிறந்த சமுதாயம் நாம் என்பதை மறந்து, தாம் என்கிற முனைப்பு ஒன்றையே குறிக் கோளாகக் கொண்டிருந்த இந்திய மன்னர்களின் ஒற்றுமைக் குறைவாலும், போட்டிகளாலும், காலை வாரிவிடும் முயற்சிகளாலும், காட்டிக் கொடுக்கும் குணத்தாலும், அன்னியராம் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டு, சிறப்பெல்லாம் இழந்து பிழைப் பிற்கே பல்லிளிக்கும் நிலைக்கு வீழ்ந்து அவலமுற்று நின்றது நம் பாரதம்.

''ஓராயிரம் ஆண்டு ஓய்ந்து கிடந்தபின், வாராமல் வந்த மாமணியாம்'' மகாத்மா காந்தி யடிகளின் தலைமையில் நடந்த அறப்போர், விடு தலைப் போர்—விரிந்து நின்றது. அண்ணல் காந்தி யடிகளின் ஆணைவழி, ''இதந்தரு மனையினீங்கி இடர்மிகு சிறைப்பட்ட'' நல்லோர், நூலோர், தொண்டர்தம் பேரணியின் பெருநடையை அகக் கண் கண்டு மகிழ்ந்தது.

அவர்கள் பட்டபாடு கொஞ்சமா? செய்த தியாகங்கள் சிலவா?

திருப்பூர் குமரனது உயிர்த் தியாகம் மின்னிற்று. செம்மல் சிதம்பரனார் செக்கிழுத்த கொடுமை நெஞ்சை வாட்டிற்று. கோமகனுகை வாழ்ந்த நேரு போன்ற தலைவர்கள், பல்லாண்டு வெஞ்சிறையில் அடைபட்டுக் கிடந்தநிலை கருத்தைக் கலக்கிற்று.

கருமவீரர் காமராசரின் சிறை வாழ்வும், தாய் நாட்டின் விடுதலைக்காகத் தன்னையே அர்ப்பணித்த அறச்செயலும் அருகில் வந்தன. பாஞ்சால சிங்கம், அறிஞர்களுள் ஏறு, தொண்டர்களுள் பெருந் தொண்டராம் லாலா லஜபதிராய், தாய்நாட்டின் தன்மானப் போராட்டத்தில் தடியடிபட்டதும், அதன் விளைவாக மாண்டதும் காட்சியளித்தன. கண்ணீரைப் பெருக்கின. தேசபக்த செஞ்சுடர் பகத் சிங் தூக்குக் கயிற்றை முத்தமிட்ட தியாகம் மேலும் கண்ணீரைப் பெருக்கிற்று. எத்தனை தேச பக்தர்கள், எவ்வளவு விலைகொடுத்துப் பெற்றார் கள் நம் சுதந்திரத்தை! கண்ணினுமினிய அச் சுதந்திரத்தைக் காக்க இன்றைய இந்தியத் தலை முறை செய்யப்போகும் தியாகமென்ன? இப்படிச் சென்று கொண்டிருந்த என் நினைவூர்தி சட்டென்று இறங்கிற்று. ஏன்?

விரைந்து ஓடிக்கொண்டிருந்த எங்கள் பேருந்து வண்டி சட்டென நின்றதால்.

'இவ்வூர் கர்னூல். இங்குப் பதினைந்து நிமிடங் கள் மட்டுமே நிற்கும். இறங்கிப் போகிறவர்கள் இதை மறக்க வேண்டாம்' என்று ''கண்டக்டர்'' அறிவித்தார்.

காலாற இறங்கினேன். எதிரிலே, நல்ல காப்பிக் கடை தென்பட்டது. கால் நகர்ந்தது. மறு நிமிடம் கடைக்குள் இருந்தேன்.

கடை, துப்புரவான இடம். வசதியான சோபாக் கள், கண்ணாடி மேசைகள். காலியாயிருந்த ஓரிடத் தில் உட்கார்ந்தேன். பேருந்து வண்டியில் எனக்கு அடுத்த இடத்தில் அமர்ந்திருந்தவரும் அருகில் வந்து உட்கார்ந்தார். அவர், பட்டாளத்தில் கேப்டன்.

பரிமாறுபவர் வந்தார். என்ன வேண்டுமென் ருர். ''காபி மட்டுமே'' என்றேன். உடன் இருந் தவர் கட்டளையும் அதே. காபி வந்தது. சுவைத் துக் குடித்துக்கொண்டே, கடை முழுவதையும் ஒரு முறை கண்ணுல் அளந்தேன். மேனுட்டுக் கடை களின் உயர்ந்த நிலையில் அக் காப்பிக் கடையும் இருப்பதை உணர்ந்தேன். போர் நெருக்கடி யிலும் இவ்வளவு பகட்டான காப்பிக்கடையா என்று எழுந்தது ஐயம். அந்நேரம் பார்த்து என் சிந்தனையைக் கலைத்தார் கேப்டன்.

கையிலிருந்த செய்தித்தாள் ஒன்றைக் காட்டி, 'பலே, எவ்வளவு தாராளமாகக் கொடுத்திருக் கிருர்கள் பாருங்கள். நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு, நன்கொடை தாருங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார்கள் தலைவர்கள். பாஞ்சால மக்களிடம் அவர்கள் எதிர்பார்த்தது சில இலட்சங்களே. உடலையும் ஆவியையும் தாராளமாக நாட்டுக்கு வழங்கியுள்ள பஞ்சாபியரிடம் குறைந்த பொருளே எதிர்பார்த்தார்கள் போலும். ஆனுல், மக்களோ பொருட் கொடையிலும் தாராளமாக உள்ளனர்; இதற்குள்ளேயே, பணமாகவே இரண்டு கோடி ரூபாய்கள் நன்கொடை வழங்கிவிட்டனரே ! மேலும் மேலும் வழங்கத் தயங்கார்' என்று பெரு மிதத்தோடு கூறினுர் அப் பஞ்சாபியக் கேப்டன்.

'இங்கும் அங்குமுள்ள, வெளிச்சம் போடும் காப்பிக்கடைகளில் நிறைந்துள்ளவர்களைக் கண்டு மதிப்பிடக்கூடாது இம் மக்களை. நாட்டின் நெருக்கடியை உணர்ந்துள்ளனர் பஞ்சாபியர். அதற் கான தியாகத்தில் மூழ்கியுள்ளனர் இம் மக்கள் என்பதை விளக்கிற்று இச் செய்தி.

உடல், பொருள், ஆவி மூன்றையுமே—வெறும் வழக்காக மட்டுமின்றி—மெய்யாகவே தாராளமாக

வழங்கும் பஞ்சாபியர், தலைநிமிர்ந்து நிற்பதில் வியப்பேது தம்பி? தமிழ்நாட்டு நன்கொடை ஒரு கோடியைத்தானே எட்டுகிறது என்ற சிறு ஏக்கம் என்னுள் எழுந்தது. நாமும் அவர்களைவிட அதிக மாக—நன்கொடையளித்து, தலைநிமிர்ந்து நிற்கும் அந்த நாளும் வந்திடாதோ என்று எண்ணினேன்.

பரிமாறுபவர், இரு 'பில்'களோடு எங்கள் முன் தோன்றினர். இரு 'பில்'களையும் எடுக்க நான் முயன்றேன். அதிலும் விரைவாக அவர் முயன்றார். இந்தி மொழியில் ஏதோ கூறினர். பரிமாறுபவர் அவர் பக்கம் நெருங்கிவிட்டார். நான் தோற்று விட்டேன். 'பில்'கள் கேப்டன் கைக்குள் சிக்கின.

'இது சரியன்று, இருவருக்கும் நானே பணம் கொடுக்க விடுங்கள்' என்றேன்.

'நீங்கள் வந்திருப்பது எங்கள் பகுதிக்கு. இங்கு நீங்களே விருந்தாளி. ஆகவே நான் கொடுப் பதே முறை. நான் சென்னைக்கு வரும்போது உங்களைத் தேடிவந்து விருந்துண்கிறேன்' என்றார் அவர்.

இதற்குள் சேரவேண்டிய பணமும் போய்ச் சேர்ந்துவிட்டது.

முடிந்த விவகாரம் என்பதை உணர்ந்தேன். அவரது விருந்தோம்பலுக்கு நன்றி கூறினேன். இருவருமாகப் பேருந்து வண்டிக்குத் திரும்பினோம்.

விருந்தோம்பல் மனிதப் பண்பு, தனிக்கூட்டப் பண்பல்ல. இதை நினைவுறுத்தவே, பொய்யா மொழியார், பொதுமறையில் விருந்தோம்பலைச் சேர்த்தார் என்பதை மீண்டும் ஒருமுறை உணர்ந்து தெளிந்தேன். பின்னர் சந்திகார் நகரிலும் மூன்று நாள்கள், பாஞ்சாபியரின் விருந்தோம்பற் சிறப்பை நேரில் உணர்ந்து மகிழ்ந்தேன்.

பேருந்து வண்டி 'கர்னூலை' விட்டுக் கிளம்பிற்று. காப்பிக்கடை நெருக்கத்தால் கேப்டனோடு அளவளாவினேன்.

''உங்கள் பேருந்து வண்டிகள் எவ்வளவு விரைந்து செல்லுகின்றன'' என்றேன்.

''ஆம்! அதோ! நெடுஞ்சாலையைப் பாருங்கள். எவ்வளவு தூரத்திற்கு, நேராகக் கோணலின்றிச் செல்கிறது பார்த்தீர்களா?'' என்று சாலையின் நேரான அமைப்பைச் சுட்டிக்காட்டினார்.

'மெய்தான். இத்தனை கிலோமீட்டர்களும் ஒரே நேராகச் செல்லும் சாலைகள் பல நம் நாட்டில் இல்லை. இந் நேர்சாலை உங்கள் இயல்பு போல் இருக்கிறதே. நீங்கள் நேருக்கு நேர் செல்பவர்கள், செய்பவர்கள்; நிற்பவர்கள், வளைந்து நுழைந்து, பதுங்குபவர்கள் அல்ல என்பதை உலகறியும்' என்று பஞ்சாபியரைப் பாராட்டினேன்.

அவர் பதில் சொல்லவில்லை. அவரது குறுநகை பதில் கூறிற்று. ஒப்புதலைக் காட்டிற்று.

''இதோ பாருங்கள்; விரைவைத் தடுக்கும் எருமை ஒன்று இந் நேர்வழியிலே, நெடுஞ்சாலையிலே'' என்று பஸ்ஸை நிறுத்தும் எருமையைச் சுட்டிக்காட்டினார்.

''இதற்குள், பலமுறை இப்படிப்பட்ட கால் நடைகள் குறுக்கிட்டுள்ளன; இல்லையென்றால் இன்னும் நெடுந்தூரம் சென்றிருக்கும் இவ்வண்டி'' என்று அங்கலாய்த்தேன் நான்.

'உண்மை. இதோ குறுக்கே நிற்கிறது எருமை. இது வேண்டுமென்று இப்படிச் செய்யவில்லை. விளையாட்டிற்காகவும் இப்படிச் செய்யவில்லை. எருமையின் போக்கு இது. எதையும் பொருட்

படுத்தாது, மெல்ல நகர்வது—எங்கும் மெல்ல நகர்வது—எப்போதும் மெல்ல நடப்பது— எருமை யின் இயல்பு.

காலம் மாறுகிறது; எருமையின் இவ்வியல்போ மாறுவதில்லை; பல்லக்குக் காலத்துப் போக்கே, பேருந்து வண்டிக் காலத்தும் அதனிடம் உள்ளது. இது தொலையட்டும். ஆறறிவு பெற்ற மக்களிலே எத்தனையோ பேர்—பட்டத்தின் மேல் பட்டம் பெற்ற எத்தனையோ பேர்—கால மாற்றத்தை உணராது, அதற்கேற்ற போக்கு மாற்றத்தை உணராது ஊருக்குத் தொல்லையாக, சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையாக, நாட்டு வளர்ச்சிக் குக் குறுக்கே நிற்கும் எருமைகளாக நிற்கின்றனர்! இதை நினைத்தால் வேதனையாக இல்லையா? குறுக்கிடும் எருமையை ஒதுக்கி, வளைந்து சென்று விரைவது போல், பத்தாம்பசலிகளை ஒதுக்கிவிட்டு, வளைந்து சென்று, புதிய பாரத சமுதாயங் காண விரைவோமாக' என்றார் அவ்வீரர்.

இமைப்பொழுது நின்று, மறு இமைப்பொழுது ஒதுங்கி, மூன்றாம் இமைப்பொழுது மீண்டும் விரைந்தது பேருந்து வண்டி. திண்ணைப் பேச்சுக் களுக்குச் செவிசாய்க்காது, குறிக்கோள் தெளி வோடு, வழிதெரிந்து நடத்தும் தலைவனைப் போல, சந்திகாரரை நோக்கி, சாலைவழி ஓட்டினார் எங்கள் சாரதி. கண்டு, கேட்கும் பொறுப்பை ஏற்றோம் நாங்கள்.

சாலை நெடுக, கண்ணுக்கு எட்டிய மட்டும் பசுமை காட்சியளித்தது தம்பீ! உயர்ந்து வளர்ந் துள்ள கரும்புத் தோட்டம் இதோ. தங்காய்! வெள்ளைவெளேரென்று பெரும்பூ பூத்து நிற்கும் 'காலிபிளவர்' தோட்டம் அதோ. பொன்னிறக் கதிர்கள் தாங்கி நிற்கும் வயல்கள் அடுத்தடுத்து. பலவகையான பயிர் வகைகள் ஆங்காங்கே.

வயல்களிலே உழுவோர் ஒருபால். மேடு களிலே கதிரடிப்போர் பெண்கள் மறுபால்.

இவ்விதம் நிலவளத்தின், மக்கள் சுறுசுறுப்பின், அவர்தம் வஞ்சமற்ற உழைப்பின் பலன்களெல்லாம் நெற்குவியல்களாக, 'காலிபிளவர்' 'லாரி'களாக, கரும்பு வண்டிகளாக எங்களை வரவேற்றன.

'நல்ல விளைவு. ஒன்று போட்டால் ஒன்பதாக விளைகிறதே. நிலவளத்தோடு, நீர் வளமும் மிகுதியோ?' என்று வினவினேன் அன்பரை.

'பாஞ்சாலத்தில் நீருக்குக் குறைவேது? ஐந்து புனலாறு கொண்டதல்லவா இவ் வளநாடு'. அவை எட்டாத பல பகுதிகளில் குழாய்க் கிணறுகள் (Tube wells) உள்ளன. சாதாரணக் கிணறுகளும் ஏராளம். எங்கள் வீரம்போல் அவற்றில் நீரும் சுரக்கும். அவற்றைக் கொண்டு பயிரை வளர்ப்பர் இம் மக்கள்.

அதோ பாருங்கள். ஓர் ஒட்டையைக் கட்டி நீர் இறைக்கிறார்கள். செக்குமாடு சுற்றுவதுபோல், இவ்வொட்டை சுற்றிச் சுற்றி வட்டமிடுகிறது. அவ்வியக்கம், தகரத் தவலைகளில் கிணற்று நீரைக் கொண்டுவந்து மேலே பாய்ச்சுகிறது. ஒட்டையைக் கட்டி நீர் இறைக்கும் முறை இன்றும் பல இடங் களில் உண்டு. மின்சார இறைப்புமுறை வேக மாகப் பரவி வருகிறது. இப்படி, தொன்றுதொட்டு வரும் உழவுத் தொழிலிலும் முன்னேறுகிறது எங்கள் பகுதி.

அதோ வலப்பக்கம் திரும்புங்கள். சாலைக் கப்பால் இருநூறு அடி தூரத்திலுள்ள வயலைப் பாருங்கள். டிராக்டர் உழவு தெரிகிறதா? இயந்திர உழவு முறை, இன்றைய பாஞ்சாலத்தின் நாகரிக மாகி வருகிறது.

எதிரே சாலையோரம் பாருங்கள். அங்கே, தெரிகிறதா பெரியகூட்டம். அது குளிர்ப்பதன நிலையம். எளிதில் கெடக்கூடிய உணவுப் பொருள்களை வேண்டிய காலம்வரை பாதுகாத்து வைத்து விற்க உதவுகிறது அது . . . . அவர் உரை முடியவில்லை.

விஞ்ஞான அடிப்படையில் பயிரிடலும், அதனுல் விளையும் பொருட் பாதுகாப்பும் நடக்கிறதே, உரவகையிலும் நவீனம் உண்டோ என்று அவர் பேச்சை மறித்தேன்.

# கல்வி சிறந்த தமிழ்நாடு

என்னருமைத் தம்பீ, தங்காய்!

பாஞ்சால நெடுஞ்சாலையின் நீண்ட நேர்மையையும், நில, நீர்வளங்கள், மக்களின் உழைப்போடு —விஞ்ஞான அடிப்படை உழைப்போடு—சேர்ந்து உணவுப் பொருள்களை விளைவித்துக் குவிப்பதையும் கண்டு, காட்டினேன் உங்களுக்கு. மக்களது மன வளத்தையும் காட்டினேன். அவர்களது உள்ள உரத்தை உணர்வதற்குமுன், பயிர் உரத்தைப் பற்றிப் பேச்சுத் திரும்பிற்று. உரவகையிலும் நவீனம் உண்டோ என்று நான் கேட்டதையும் உங்களுக்குத் தெரிவித்தேன். பதிலும், உரையாடலின் தொடர்பும் இதோ.

'ஆகா! அப்படியே! எங்கள் பக்கம், இரசாயன உரத்தை அறியாதவர் அறியாதவரே! பக்ரா-நங்கல் அணைகளைப் பார்க்கச் சென்றால், நங்கலில் உள்ள உரச்சாலையைக் காணத் தவறாதீர்கள். அங்கு அன்றாடம் உற்பத்தி செய்யப்படும் உரத்திலே பெரும்பகுதி இப் பக்கத்திலேயே செலவாகிவிடுகிறது' என்றார் அவர்.

''செயற்கை உரம் நிரம்பக் கிடைப்பதாலா, இயற்கை உரமான மாட்டுச் சாணத்தையெல்லாம் வரட்டி தட்டி எரித்து விடுகிறார்கள்?'' என்ற ஐயத்தை வெளிப்படுத்தினேன் நான்.

''சாணத்தை வரட்டியாக்குவது பெருந்தீங்கு; கணக்கிடமுடியாத இழப்பு. வயல்களுக்குத் தேவைப்படாமல் தேங்கிக்கிடப்பதால் அல்ல இத் தீங்கு நடப்பது. நெடுங்காலம் வந்த பழக்கக் கொடுமையால் இத் தவறு நடக்கிறது. வழிநெடுக, ஊர்தோறும் வரட்டி உலர்த்தியிருப்பதையும், குவித்து இருப்பதையும் பார்த்துக் கொண்டல்லவா வருகிறீர்

கள்? சாணம் முழுவதையும் வரட்டியாக்கிடவில்லை. எருவாகவும் பயன்படுத்துகிறார்கள். வரட்டி தட்டுவதை நிறுத்திச் சாணம் முழுவதையும் எருவுக்கே பயன்படுத்தினால் நம் விளைச்சல் எவ்வளவோ அதிகரிக்கும். இதைப் பஞ்சாபியர் மட்டுமல்ல, இந்தியர் அனைவருமே உணரவேண்டும்'' என்றார் அவர்.

'உண்மை. உணரவேண்டியதே. உணர்த்தினாலன்றோ உணர்வார்கள்? எழுத்தறிவில்லாத மக்கள் நம் மக்கள். பண்டையப் பழக்கம் என்கிற உளைச் சேற்றிலே சிக்கியவர்கள் நம்மவர்கள். அதிலிருந்து கரையேற முடியாதவர்கள் இவர்கள். இவர்களுக்கு நல்லதை உணர்த்த ஒரு கூட்டம் தேவை. புதியதை உணர்த்த, அடுத்தடுத்து உணர்த்த தொண்டர்கள் தேவை. நல்லதை, புதியதை உணர்ந்தவர்களைக் கை கொடுத்துக் கரையேற்றிவிட, தொண்டர் பெருங் கூட்டம் இருந்தால் இவர்களும் திருந்துவார்கள். உரப் பொருள், எரிபொருளாகப் பாழாவது நிற்கும். வயல்கள் வளம் பெறும். பயிர்கள் செழிப்புறும். விளைச்சல் மலையென உயரும்' என்று குட்டியுரை ஆற்றினேன்.

'மெய்யே! கதரை எடுத்துக் கொள்வோம். நாட்டுப் பொருள்கள்மேல் 'வெறி' கொண்ட ஒரு கூட்டம். தொண்டர் கூட்டம், தனக்கென்ன கிடைக்கும் என்று கணக்குப் பாராத நற்றொண்டர் கூட்டம், ஊர் ஊராகச் சுமந்து சென்று; திண்ணை திண்ணையாக இறக்கி வைத்து விற்றதால் அல்லவா, பட்டிதொட்டியெல்லாம், உரிமை உடையாக கதர் பரவிற்று? சம்பள உயர்வும், வேலை உறுதியும், விடுமுறை உரிமைகளும் பற்றியே கவலும் சம்பளக் காரர்கள் அன்று கதரைப் பரப்பியிருக்க முடியுமா? புதிய, நல்லதை விளக்கி, விதைத்துப் பரப்ப தொண்

டார்கள் தேவை. நிலைத்த அமைப்புகளை, முறைகளை உள்ளது உள்ளபடி நடத்தவோ அலுவலர்கள் போதும்' என்றார்.

இதற்குள், அம்பாலா நகர் வந்தடைந்தோம். பேருந்து வண்டி, நிலையத்தில் நின்றது. மக்கள் நடமாட்டம் அங்கும் இங்கும். அவர்கள் நடையிலே சுறுசுறுப்பு இருந்தது. படபடப்பு இல்லை.

'அண்மையில் நடந்த போரில், பாகிஸ்தானியர், இவ்வூரில் குண்டு போட்டார்கள் அல்லவா' என்று கேட்டேன்.

'ஆம், கிறித்தவக் கோயிலின்மேல், பாகிஸ்தானியர்குண்டு வீழ்ந்தது இவ்வூரில்தான்' என்றார்.

'அப்படியா? போரைப் பற்றிய கிலி யாரிடமும் காணோமே!' என்று வியந்தேன்.

'உண்மை. இதோ பாருங்கள். தெருவோரக் கடைகளை; அவற்றிலே மொய்த்துள்ள மக்கள் கூட்டத்தை; அவர்களின் கலகலப்பான சிரிப்பை'.

'இப்போது போர் நின்றிருப்பதாகப் பெயர். போர் நடந்தபோதுகூட—கிறித்தவக் கோயில் மேல் குண்டு வீழ்ந்த பிறகும்கூட—மக்கள் அலறித் துடித்து ஓடவில்லை. அல்லற்பட்டு அலையவில்லை. எதையும் தாங்கும் இதயத்தோடு வாழ்ந்தனர். 'எப்பக்கம் வந்து புகுந்துவிடும்; பாகிஸ்தான் எத்தனை பட்டாளம் கொண்டுவரும்' என்று உறுதியோடு இருந்தனர்; அமைதியாக, ஒழுங்காக நடந்து கொண்டனர் பொதுமக்கள். இவ்வூரிலும் சரி, பிறவூர்களிலும் சரி, வகுப்புக் கலவரம் ஏதுமின்றி, எல்லோரும் இந்தியர் என்று இணைந்து நின்றனர். வேற்றுமைகள் அனைத்தையும் மறந்து ஒருமைப்பாட்டை உணர்த்தினர் உலகிற்கு. அப்போது

நாடு முழுவதிலும் சுடர்விட்டு எரிந்த ஒருமைப் பாட்டுணர்ச்சி நம்மையெல்லாம் பரவசப்படுத்து கிறது' என்று உணர்ச்சி பொங்க உரைத்தார்.

நெருக்கடியில் முளைத்த பரவலான ஒருமைப் பாட்டுணர்ச்சி, சில வாரங்களாக வளர்ந்து வரும் அவ்வுணர்ச்சி வேரூன்றி, தழைத்துக் கிளைத்து, விழுதூன்றி விட்டால் குறையேது நமக்கு.

அமைதி தவழும் அம்பாலாவைவிட்டுப் புறப் பட்டோம். வயல்கள்மேல் திளைத்திருந்த கண்கள், வளத்தைக் கண்டுகளித்த கண்கள், வரட்டிகளைக் கண்டு வாடின கண்கள், மக்கள்மேல் வீழ்ந்தன.

பஞ்சாபியர் உயரமானவர். ஆண்கள் மட்டு மல்ல, பெண்களும் உயர்ந்து வளர்ந்தவர்களே. அப் பகுதியில், கத்திரிக்காய்க்குக் காலும் கையும் வைத்தது போன்ற குட்டை மக்களைத் தேடிப்பிடிக்க வேண்டும். உயரத்திற்கு ஏற்ற கட்டான உடலும் உடையவர்கள். ஆண்டுக்கு ஒரு முறை மாறிமாறி கடும் வெப்பத்தையும், கடுங்குளிரையும் தாங்கித் தாங்கி உரம் பெற்றது அவர்களது உடல்.

மக்களின் உடையைப் பார்த்தேன். கந்தல் உடையினர் பலர்; அழுக்கு உடையினரும் பலர். வளம் மிக்க பாஞ்சாலத்திலும், தொழில் மிக்க பாஞ்சாலத்திலும் இவர் பலர் என்றறிந்து வாடி னேன். வறுமைக் கொடுமை. அது சமூகக் கொடுமை. அது தானுக விலகாது. அதைக் களை வது சமூகத்தின் கடமை.

'உழுது விதைத்து அறுப்பார்க்கு உணவில்லை, நெய்து குவித்துக் கொடுப்பார்க்கு உடையில்லை' என்ற நிலை நன்னிலையா? அல்லவென்றுல், தானுக நீங்கும் நிலையா? நீக்கப்பட வேண்டிய நிலையா? யாரோ நீக்கவேண்டிய நிலையா? நீங்களும் நானும்

சேர்ந்து நீக்கவேண்டிய நிலேயா? சிந்தியுங்கள் தம்பிகளே! தங்கைகளே! குறிக்கோள் தூய்மை யோடு கூடிநின்று, பாடுபட்டு நீக்கவேண்டிய நிலே யல்லவா அது? விஜனத் திட்பத்தோடு நீக்கவேண் டிய நிலேயல்லவா அது? காலங்கருதி இடத்தாற் செய்து நீக்கவேண்டிய நிலே அது.

இப்போக்கிலே அழுந்தியது சிந்தனே. நேரம் ஓடிற்று, ஊரும் வந்தது. சந்திகார் பேருந்து வண்டி நிலேயஞ் சேர்ந்தோம். வண்டித்துணே அன்பருக்கு நன்றி கூறினேன். சென்னே வந்தால் காணவேண்டி னேன். வாடகைக் கார் ஏறினேன். சட்டமன்ற உறுப்பினர் புது விடுதிக்கு விரைந்தேன். பாஞ்சாலக் கல்வித்துறை அதிகாரிகள் சிலர் அங்குக் காத்திருந் தனர். நெடுநாள் நண்பர்கள்போல் வரவேற்று உபசரித்தனர்.

சுந்தரவடிவேலு என்ற என் பெயரை சுந்தர துவேதி என்று மாற்றி விட்டனர். இத் திரிபைப் பார்த்துத் திகைத்தேன். மொழியியல் வல்லார் கூறும் சொல்லாராய்ச்சி சில வேளே வலிந்துரை போலத் தோன்றுவதுண்டு. இத்தகைய பெரிய திரிபிற்குப் பின், அவர்கள் உரையிலும் உண்மை புதைந்து கிடப்பதுபோல் தோன்றிற்று.

மத்தியக் கல்வி ஆலோசனேக் குழுவின் பிற்பகல் கூட்டத்திற்குச் சென்றேன். அறிஞர் பலர் பேசினர். நெடுநாட்களாகத் தொடர்ந்துவரும் கல்வி நோய் களேப் பற்றிக் கருத்துரை வழங்கினர். சிக்கல்களேச் சுட்டிக் காட்டினர். மாற்று மருந்துகளேக் கூறினர். சிக்கவிழ்க்கும் முறைகளே விளக்கினர். அவற்றின் விவரத்தைச் செய்தித்தாள்களில் படித்திருப்பீர்கள். மீண்டும் அவற்றைக்கூறி உங்கள் பொன்னுன காலத்தை வீணுக்கேன். ஆனல் ஒன்றை மட்டும் எடுத்துரைப்பேன்.

பணமுடை, வழிவழி வந்தது; கல்வி என்றதும், முன்னே வந்து நிற்பது. பணமுடையைக் காட்டி, கல்வியைக் கட்டுப்படுத்தியது அன்னியர் காலம். எழுத்தறிவுகூட எல்லோருக்கும் எட்டாதபடி விட்டுச் சென்றது ஆங்கில ஆட்சி.

தன்னுட்சி இந்தியா, குடியாட்சி இந்தியா, வெள்ளத்தின் பெருக்கைப்போல் கல்வி பெருக வேண்டுமென்று முடிவுசெய்துள்ளது. அதை நடைமுறைக்குக் கொண்டுவர முயல்கிறது. இடையிலே தடைகள் பலப்பல. எதை எதையோ காட்டி, அடிப்படைக் கல்வியைக்கூட, ஒடுக்க நினைக்கும் அறிஞர்கள் இன்றும் உண்டு. அவர்கள் குரலுக்கும் இடமுண்டு. சந்திகாரிலும் இருந்தது.

'என்றுமுள்ள பணமுடை, நாட்டின் நெருக்கடி நிலைமையினுல் மிகுந்துள்ளது. எனவே தொடக்க நிலைப்பள்ளிகளைக்கூடப் புதிதாகத் திறக்க வேண்டா. உள்ள பள்ளிகளுக்குத் தாமே வரும் பிள்ளைகள் வரையில் தரமான கல்வி கொடுத்தாற் போதும்' என்று சந்திகார் கூட்டத்தில் இரண்டொரு குரல்கள் கேட்டன. ஆனுல் அவை செல்லவில்லை. ஏன்?

அமைதியாக, அழுத்தமாக, திருத்தமாக, தெளிவாக, இனிமையாக, மெல்லிய குரலில் பதில் வந்தது ஒடுக்கவாதிகளுக்கு. என்ன பதில் அது?

''நாம் இருப்பது குடியாட்சியில்; எனவே குடிகள் விருப்பத்திற்கே முதல் இடம். குறைந்த கல்வியை—அதிக அளவு கல்வியை அல்ல—அவர்கள் கேட்கும்போது அதையும் மறுக்க யாருக்கு உரிமையுண்டு? தட்டிக் கழிக்கத்தான் உரிமையேது? பள்ளிப் படிப்புத் தேவையைத் தள்ளிப்போட முடியாது.''

இதுவே அந்த பதில். சரியான பதில் அல்லவா?

# மந்திர ஒலிகள்

என்னருமைத் தம்பீ, தங்காய்!

நீயும் நானும் கேட்கும் உரைகள் கோடி கோடி. நாள்தோறும் நம் காதில் விழும் உரை களோ பலப்பல. ஆயினும் நினைவில் நிற்பவை எங்கோ ஒன்று! பதினாயிரத்தில் ஒன்றே பல்லாண்டு பசுமையாக நிற்கும். அப்படிப்பட்ட உரைகளில் சில என் செவிகளில் விழும் பேறுபெற்றேன். அவற்றை உங்களுக்கும் வழங்கட்டுமா?

இன்று நேற்றல்ல, சில ஆண்டுகளுக்கு முன்பு கூட அல்ல. பல ஆண்டுகளுக்கு முன், நாற்பது ஆண்டுகளுக்கு முன் அறவுரை ஒன்று கேட்டேன். அது, இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அப்படியே வலிமை குறையாமல் ஒலித்துக் கொண் டிருக்கிறது.

நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் நான், புகழுடைய, வரலாற்றுப் புகழுடைய காஞ்சீபுரத் தில் குடியிருந்தேன். யு. எப். சி. எம். உயர்நிலைப் பள்ளியில்—இன்று ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளி யென்று அழைக்கப்படும் அதே பள்ளியில்— ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன்.

என் வகுப்பு நண்பரொருவர் புத்தம் புதிய சைக்கிள் ஒன்று வாங்கினார். அடுத்த ஞாயிற்றுக் கிழமை, அதில் ஏறி பல தெருக்களையும் சுற்றி வந்தார். வழியில், பெரிய காஞ்சீபுரம், நெல்லுக் காரத் தெருவிலிருந்த என் வீட்டிற்கு வந்தார். என்னைப் பின்னால் ஏற்றிக்கொண்டார். நான்கு அரச வீதிகளையும் சுற்றி வந்தார். நான், பின்னால் நின்றுகொண்டே உலாவந்தேன். உழைக்காமல் மகிழ்ச்சி பெற்றேன்.

நெல்லுமண்டித் தெரு வழியாக, சிறிய காஞ்சீ புரம் போறுலென்ன என்று கேட்டார். சரி யென்றேன். விரைந்து சென்ற ஈருருளி, நெல்லி மண்டித் தெருவிற்குள் பாய்ந்தது.

இரட்டை மண்டபத் திருப்பத்தில், பின் சக்கர இருசின் மேல் ஊன்றியிருந்த என் கால் வழுக்கிற்று. சட்டென்று சமாளித்தேன். மீண்டும் இருசின் மேல் காலே ஊன்ற முயன்றேன், முடியவில்லே. இருசின் மேல் ஊன்ருமல் சக்கரக் கம்பிகளுக்கிடையில் விட்டு விட்டேன். நொடிப்பொழுதில் சைக்கிள் கவிழ்ந்தது. இருவரும் சாய்ந்தோம். உடனே எழுந்தோம். நண்பருக்குக் காயம் இல்லே. எனக்கோ? இடது கணுக்காலில் நல்ல அடி. மருத்துவமனேக்கு அழைத் துப் போஞர். மருந்துபோட்டுக் கட்டிஞர்கள். நான்கைந்து நாட்கள் வீட்டோடு முடங்கிக் கிடக்க நேர்ந்தது.

கால் குணமானதும் பள்ளிக்குச் சென்றேன். சில வகுப்புகள் வந்து போயின. அப் பாட ஆசிரி யர்களும் வந்தார்கள். கற்றுக் கொடுத்தார்கள். மணியடித்ததும் சென்ருர்கள். யாரும் என்னேத் தனியாகக் கவனிக்கவில்லே.

கணக்கு வகுப்பு வந்தது. கணக்கு ஆசிரியர் வந்தார். திருவாளர் சேக்ஷாத்திரி அய்யங்கார் தனிப் பிறவி. அவர் கணக்கிலே புலி. அதைக் கற்பிப் பதிலே அவருக்கு அளவற்ற அன்பு. அது மட்டுமா? அதைவிட அளவற்ற அன்பு அதைக் கற்கும் மாணவர்களிடம். அவர், எங்களேக் கணக்கு வகுப் பாகக் கருதியதில்லே. தனித்தனி மாணவர்களாகக் கருதிஞர். தனித்தனி கவனஞ் செலுத்திஞர். ஆளுக்கு ஏற்றபடி ஊக்கங் கொடுத்தார். இப் போக்கு அவரது தனிச் சிறப்பு. 227602

0,31,6N127,F

அன்று, வகுப்பிற்குள் நுழைந்ததும் என்னைப் பார்த்துவிட்டார். சில நாள்கள் வராதிருந்து அன்று வந்ததைக் கவனித்தார். இத்தனை நாள்களாக ஏன் பள்ளிக்கு வரவில்லையென்று இனிமையாக கடுமையாக அல்ல—வினவினார். பதில் கூறத் தயங்கினேன். அப்போதும் கோபப்படவில்லை. கண்ணாலும் கோபிக்கவில்லை.

'எவ்வளவு கிடைப்பதானாலும், வால்பிடிக்கும் வேலைமட்டும் வேண்டாம் வடிவேல்' என்று புன்முறுவலோடு புகன்றார். அதிலே குத்தல் இல்லை; கிண்டல் இல்லை; பரிவு இருந்தது; கனிவு இருந்தது; ஆதரவு இருந்தது. ஆகவே, அதைச் சிக்கெனப் பிடித்தது என் சிந்தை. 'கணக்கு ஆசிரியர் கணக்கோடு நிற்கட்டுமே. மற்றதில் ஏன் தலையிடுகிறார்?' என்ற எதிர்போக்கு எழவில்லை என்னிடம். அந் நல்லுரை, என் இளம் உள்ளத்திலே பசுமரத்தாணி போல் பதிந்து விட்டது. வால் பிடிக்கும் இயல்பு அன்றோடு முறிந்துவிட்டது. வால் பிடிக்கும் சபலம் மின்னும்போதெல்லாம் 'கணக்கு ஐயா'வின் நெடிய, இனிய தோற்றமும் மின்னுகிறது; அவரது இன்மொழி, நன்மொழி அன்றுபோல் வலிமை குன்றாமல் நெஞ்சில் ஒலித்துத் தடுக்கிறது.

தம்பீ! ஆண்டுகள் ஓடினாலும் எனக்கு ஒலி குறையாத மற்றொரு உரையைக் கூறட்டுமா? என்னை நெறிப்படுத்தின—நெறிப்படுத்துகிற—அவ்வுரையையும் கேள் தங்காய்.

1954 ஆம் ஆண்டு மே திங்கள் கல்விக் கூடங்களுக்கு கோடை விடுமுறை. கல்வி இயக்குனர் அலுவலகத்திற்கோ இறக்கை கட்டிப் பறக்கும் காலம். அடுத்த கல்வி ஆண்டில் எங்கெங்கே உயர்நிலைப் பள்ளிகளை வைப்பதென்று, மனுக்களை

ஆயும் காலம் அது. பல ஊர்த் தலைவர்கள் படை யெடுக்கும் காலம் அது. அப்போது நான் துணை இயக்குனர். உயர்நிலைக் கல்விக்குத் துணை இயக்குனர்.

ஒரு நாள், பதினொரு மணிக்கு, அப்போதைய கல்வி இயக்குனர் என்னை அழைத்தார்.

"முதல் அமைச்சர், 'இன்ன' உயர்நிலைப் பள்ளிக் கூட மனுவைப் பற்றிப் பேசவேண்டுமாம். இன்று பிற்பகல் மூன்று மணிக்கு அவரைக் கண்டுவா. அவரது ஆணையைப் பெற்றுவா. அவரைக் காணக் கோட்டைக்குச் செல்லும்போது, எல்லா பேப்பர் களையும் எடுத்துக்கொண்டு செல்" என்று கட்டளை இட்டார்.

அப் பள்ளிக்கூட மனுவையும், அதோடு இணைந்தவைகளையும் அலுவலகத்திலிருந்து பெற் றேன். அவைகளை நன்றாகப் படித்துப் பார்த்தேன். மீண்டும் இயக்குனரிடம் சென்றேன். அம் மனுவைப் பற்றிய முழு நிலையையும் விளக்கினேன். முதல் அமைச்சரோடு பேசும்போது, இது பற்றி என்ன சொல்ல வேண்டும் என்று வினவினேன். புன் முறுவல் பூத்தார்.

"இம் முதல் அமைச்சர், நம் துறைபற்றிய விவ காரமொன்றில், இப்போதே முதன் முறையாக நேரில் பேசுகிறார். ஆகவே விழிப்பாயிரு. அப் பள்ளியைக் கொடுக்க முடியுமென்றோ, கொடுக்கக் கூடாதென்றோ சொல்லாதே. அவரோடு விவாதிக் காதே. அவர் எதைச் செய்யச் சொன்னாலும் சரி யென்று சொல்லிவிட்டு வா." இதுவே இயக்குனர் இட்ட கட்டளை.

குறித்த நேரத்தில், முதல் அமைச்சரின் பேட்டி கிடைத்தது. அவரது அறைக்குள் மெல்ல நுழைந் தேன். பதவி நாற்காலியில் இல்லை அவர். அடுத்

திருந்த நாற்காலிகளுள் ஒன்றில் உட்கார்ந்து இருந்தார்.

''என்ன? இப்படி இருங்கள்'' என்று கலகலப் போடு, நெடுநாள் பழகியவரைப்போல் கூறினார் முதல் அமைச்சர். கர்மவீரர் காமராசரை அது வரை நான் எட்டியிருந்து பார்த்தவன். எனக்கு அவரோடு முன்பின் பழக்கமில்லை. அன்றே முதல் முறை, அவரை நேருக்குநேர் கண்டேன். ஆயினும் சட்டென்று பற்றும் கலகலப்பை அவரிடம் கண் டேன். நாற்காலியில் அமர்ந்தேன்.

'உயர்நிலைப் பள்ளிக்கூடம் வைக்க, அனுமதி கொடுக்க என்னென்ன நிபந்தனைகள்?' இது கனம் காமராசரின் கேள்வி.

நிபந்தனைகளைக் கூறினேன். 'நியாயமாகவே உள்ளன' என்றார் இனிமையாக.

'இன்ன உயர்நிலைப்பள்ளியைக் கேட்கும் இவர்கள் இத்தனை நிபந்தனைகளையும் நிறைவேற்று வார்களா அல்லது எதற்காவது விதிவிலக்குக் கேட் கிறார்களா?' என்று கேட்டார் முதலமைச்சர்.

இக் கேள்வியை எதிர்பார்த்தேன், பதில் சொல்ல ஆயத்தமாகச் சென்றிருந்தேன். எனவே பளிச்சென்று பதில் கூறினேன்.

அவர்கள் உடனடியாக நிறைவேற்றக் கூடாத நிபந்தனைகள் இரண்டொன்று இருந்தன. அவற்றைக் கூறினேன் முதல் அமைச்சரிடம்.

'இப்படிப்பட்ட நிலையில், உங்கள் இலாகா என்ன முடிவு செய்யும்?' என்று வினவினார்.

எனது இயக்குனர் சொல்லி அனுப்பிய அறி வுரையை மறந்துவிட்டு, 'முதல் மூன்று படிவங்களை மட்டுமே அனுமதிக்கும்' என்றேன்.

'சரிதான். அப்படியேசெய்து விடலாமென்று டைரக்டரிடம் சொல்லுங்கள்.' இது முதல் அமைச்சர் நேரிடையாக இட்ட முதல் ஆணை. முதல் தரமான ஆணையும்கூட அல்லவா?

அதைக் கேட்டதும் விழித்துக் கொண்டேன். இயக்குனர் கட்டளை நினைவிற்கு வந்தது.

'தங்கள் விருப்பம் எதுவோ, அப்படி உத்தர விடுவதாக இயக்குனர் சொல்லியனுப்பினார். வேண்டுமானால், மேல் வகுப்புகளுக்கும் அனுமதி கொடுக்கலாம்' என்று பணிவோடு சொன்னேன்.

'வேண்டாம், வேண்டாம். உங்கள் நிபந் தனைகள் சரியாக இருக்கின்றனவே. எனக்கு வேண்டி யவர்களே நியாயத்திற்குக் கட்டுபடாவிட்டால், மற்றவர்களை எப்படி நான் கட்டுப்படுத்த முடி யும்? முதல் மூன்று படிவங்களைக் கொடுப்பது போதும். அவர்கள் என்னிடம் வருவார்கள். நான் சொல்லியனுப்புகிறேன்' என்றார் காமராசர்.

அவரிடம் விடைபெற்றுகொண்டு திரும் பினேன். அலுவலகத்திற்கு வந்து, இயக்குனரிடம் நடந்ததைக் கூறினேன். அவர் ஒன்றும் கூறவில்லை. புன்முறுவலோடு முடித்துவிட்டார்.

இரண்டு நாள்கள் கழிந்தன. குறுப்பிட்ட பள்ளிக்கூடத்தை நடத்த அனுமதி கோரியவர் அலுவலகம் வந்தார்.

'உயர்நிலைப்பள்ளிகூடம் பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கண்டோம். எங்களிடம் உள்ள குறைகளை எடுத்துச் சொன்னார். இப்போ துள்ள வசதிகளுக்கு, எடுத்த எடுப்பிலேயேமேல் வகுப்புகளைக் கேட்பது சரியல்ல என்பதை உணர் கிறோம். முதல் மூன்று படிவங்களுக்கு அனுமதி கொடுங்கள். வசதிகளைப் பெருக்கிக் கொண்டு

பிந்திய ஆண்டுகளில் வருகிறோம்' என்று உரைத்தார். ஆகட்டும் என்றேன். மனநிறைவோடு சென்றார். சட்டப்படி நடக்கிறது என்று என் அலுவலகத்தார் அனைவருக்கும் மகிழ்ச்சி.

மூன்று படிவங்களோடு தொடங்கிய அப் பள்ளி, பின்னர் முழு உயர்நிலைப்பள்ளியாகி நன் முறையில் நடந்து வருகிறது.

'வேண்டியவர் என்பதற்கு அடையாளமே சலுகைகள். செல்வாக்கு என்பதற்கு அடையாளமே விதிகளுக்கு விலக்கு' என்கிற கலிகாலத்தில், வேண்டியவர்களே முதலில் விதிகளுக்குக் கட்டுப் படவேண்டும் என்று நெறிப்படுத்தின நேர்மை யாளரின் வாய்மையுரை, இன்றும் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. அதே வலிமையோடு பன்னிரண்டு ஆண்டுகளாக ஒலித்து கொண்டேயிருக்கிறது. அதுவே என் மனச்சான்று.

1955ஆம் ஆண்டின் முற்பகுதி. நானே பொதுக் கல்வி இயக்குனராகிப் பணிபுரிந்தேன். ஒரு நாள், பெரியவர் ஒருவர் என்னைப் பேட்டி கண்டார். உயர்நிலைப்பள்ளி விவகாரம் ஒன்றைப் பற்றிய மனுவொன்றை என்னிடம் கொடுத்தார்.

'இது மனுவின் நகல், மூலத்தைக் கனம் காமராசரிடம் கொடுத்திருக்கிறேன். அவரோடு இளமைதொட்டு எனக்கு நெருங்கிய தொடர்புண்டு. அதனால் அவரிடம் கொடுக்க நேர்ந்தது. இதைக் கவனித்து ஆவன செய்யுங்கள். அவரும் இதுபற்றி உங்களிடம் பேசுவார்' என்று கூறி விட்டுச் சென்றார். வந்த பெரியவருக்கும், கனம் காமராசருக்கும் பல்லாண்டு பழக்கம். நெருக்கமான பழக்கம் என்பது உலகறிந்த செய்தி. யானும் அறிந்ததே.

நாட்கள் சென்றன. வாரங்களும் கழிந்தன. இரண்டொரு திங்களும் மறைந்தன. அவர்—கனம் காமராசர்—மேற்கூறிய மனுபற்றி ஒன்றும் சொல்ல வில்லை.

இந் நிலையில், சென்னையில் ஓர் உயர்நிலைப் பள்ளியின் ஆண்டுவிழா நடந்தது. அதில் கனம் காமராசரும் நானும் பங்குகொண்டோம். அப் பள்ளியில் படித்தவர்களில் பெரும்பாலோர், அரிசனங்கள் அல்லது பிற்போக்கு வகுப்பினர் என்ற செய்தியை அறிக்கையில் கண்டதும் மகிழ்ந்தார். அம் மகிழ்ச்சியினாலோ என்னவோ, அவர்களது கலை நிகழ்ச்சிகளைக் காணவும் தங்கிவிட்டார்.

கலைநிகழ்ச்சிகளுக்கு இடையே என்னோடு கல கலப்பாக பேசினார். அம் மனநிலையைப் பயன் படுத்திக் கொள்ள எண்ணினேன்.

என்னைப் பேட்டிகண்ட பெரியவரின் பெயரைக் கூறினேன். அவர் முதல் அமைச்சரிடம் கொடுத்த மனுவை மெல்ல, நினைவுபடுத்தினேன். 'ஆம், கொடுத்தார்' என்றார். 'அதுபற்றி தாங்கள் என்னிடம் ஏதோ சொல்லப் போவதாகவும் அப் பெரியவர் கூறினார்' என்றேன். பதிலில்லை. புன்முறுவல் வந்தது. 'வீட்டிற்கு வந்து தெரிந்து கொள்ளட்டுமா?' என்று வினயமாக வினவினேன்.

'வேண்டாம். நீங்களும் நானும் பதவியில் இருக்கிறோம். பலரும் வருவார்கள். பார்க்கத்தான் வேண்டும். பலவும் சொல்வார்கள். கேட்கவேண்டி யதே. மற்றவர்கள் சொல்வதையெல்லாம் செய்ய முடியுமா? காதுகளைக் கொடுங்கள் அவர்களுக்கு. முடிவை வைத்துக் கொள்ளுங்கள் உங்கள் அறிவிற்கு. சட்டமும், முறையும் உங்களுக்குக் தெரியும். எது நியாயமோ அப்படியே முடிவு செய்யுங்கள் . . . .'

பேச்சு முடியவில்லை. இதற்குள் குறுக்கிட்டேன். 'இல்லை' யென்று இழுத்தேன்.

'தவறிப்போனல் மட்டும் என்ன? என்னிடமல்லவா வருவார்கள். அப்போதும் உங்களைக் கேட்காமலா எதுவும் செய்வேன்! சுயமாக, மனசாட்சிப்படி உத்தரவு போடுங்கள்.' இம் முடிவில் உறுதியிருந்தது. அதைக் கூறின குரலில் மென்மையும் இருந்தது. இதைப் பற்றிய பேச்சு அத்துடன் நின்றது.

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரியனகச் செயல்

இக் குறள் நினைவிற்கு வந்தது.

உழைப்பால் உயர்ந்தவர். தெரிந்து வினையாடலிலும் சிறந்தவர் என்பதை உணர்ந்தேன். நெறியிலும் உயர்ந்தவர் கனம் காமராசர் என்பதை அறிந்தேன். அவர் வைத்த நம்பிக்கையும் அவர் கொடுத்த உரிமையுமல்லவா, புல்லாம் என்னையும் வேலாக்கி வைத்தது. மலையைப் பெயர்க்கும் ஆற்றலையும் நல்லவர் நம்பிக்கை நல்கும்.

'சுயமாக, மனசாட்சிப்படி உத்தரவு போடுங்கள்.' அன்று கேட்டேன் இவ்வுரிமை உரையை. பின்னர் பல ஆண்டுகள் பறந்து விட்டன. ஆயினும் என்ன? காலத்தை வென்று இன்றும் ஒலிக்கிறது என் நெஞ்சில். கிணற்றுக்குள்ளே இருந்து கேட்கிற மெல்லிய ஒலியாகவா? அல்ல, அல்ல. வலிமையோடு ஒலிக்கிறதே இப்போதும். நினைவு உள்ளவரை நிலைக்கும் ஒலியன்றோ இது.

# வாழ்வாங்கு வாழ்ந்தவர்

என்னருமைத் தம்பீ, தங்காய்!

'காலை வணக்கம்! இன்று நீங்கள் நலந்தானா?'

'பிற்பகல் வணக்கம்! இன்று நீங்கள் நலந்தானா?'

'மாலை வணக்கம்! இன்று நீங்கள் நலந்தானா?'

இப்படிப்பட்ட நலங்கேட்டல் நடந்தது. நாள் தோறும் நடந்தது. என்னை இப்படிக் கேட்டார்கள். எல்லோரும் கேட்டார்கள். சாப்பாட்டு விடுதி ஆள் கேட்டார். பரிமாறுபவர் கேட்டார். வாடகைக் கார் ஓட்டிகள் கேட்டார்கள். ஆசிரியர்கள் கேட்டார்கள். ஆசிரியைகள் கேட்டார்கள். நான் சந்தித்த அத்தனை அமெரிக்கரும் கேட்டனர்.

ஏதோ எனக்குத் தனியாகக் கிடைத்த பெருமை என்று எண்ணிவிட வேண்டா தம்பீ! அந் நாட்டவர், யாரைக் கண்டாலும் இப்படியே கேட்பர். நாளை, நீ சென்றாலும், உன்னையும் இப்படிக் கேட்பர் தங்காய். இப்படி நலங் கேட்டல் அமெரிக்க மரபு. பிற நாட்டவரைக் காணும்போதும் கேட்பர்; தன்னாட்டவரைக் காணும்போதும் கேட்பர். அமெரிக்கர்கள் கலகலப்பானவர்கள். முன்னரே அறிமுகமாகாதவர்களிடமும் மரியாதையாக நடப்பார்கள். ஒருவரை ஒருவர் கண்டதும், நலங்கேட்டல் அவர்களது இயல்பு. முகஞ்சுளிப்பு குறைவு. 'உம்' என்று இருப்பதும் குறைவு. ஆகவே நீங்கள் அமெரிக்கா செல்கிறபோது இதை எதிர்பாருங்கள்; இதற்கு ஆயத்தமாகச் செல்லுங்கள். முன்னரே அறிமுகமாகாதவர்களோடு, எப்படிப் பேசுவது என்று விறைத்து நிற்காதீர்கள். அண்ணல் காந்தியடிகளின் மோகனப் புன்னகையோடு சுற்றி வாருங்கள்.

அமெரிக்கர்களின் பொது விசாரணையைப் பற்றி சொன்னேன். சிறப்பு விசாரணையைப் பற்றிச் சொல்லட்டுமா தம்பீ!

1964 ஆம் ஆண்டு செப்டம்பர் பதினோராம் நாள். நான், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலை நகரான வாஷிங்டன் நகரில் இருந்தேன். காலை உணவை முடித்துவிட்டு ஓட்டலின் வெளியே வந்து நின்றேன். வாடகைக்காருக்காகக் கைகாட்டி நின்றேன். சிறிது நேரம் சென்றது. வாடகைக் கார்கள் பல பறந்தன. கடைசியாக, காலியாகச் சென்ற கார் ஒன்று சட்டென்று நின்றது.

கார் ஓட்டி, தன் இடத்தில் உட்கார்ந்தபடியே கதவைத் திறந்தார். உள்ளே உட்கார்ந்தேன். கதவை மூடினார். செல்ல வேண்டிய இடத்தைக் கூறினேன். மறுவினாடி பறந்தது அவ் வண்டி.

அமெரிக்க மரபுப்படி, அவ் வண்டியோட்டி என் நலனைக் கேட்டார். அதோடு நின்றாரா? இல்லை. மேலும் கேட்டார். அடுத்த கேள்வி என்ன?

'எந் நாட்டிலிருந்து வருகிறீர்கள்?' இது அவரது கேள்வி.

''இந்தியாவில் இருந்து வருகிறேன்'' என்றேன். ''அப்படியா? என் அனுதாபம். நேருவின் மறைவு உங்களுக்குப் பேரிழப்பாகும். அமெரிக்கர் அனைவரும் அதற்காகப் பெரிதும் வருந்துகிறோம்'' என்றார்.

''ஆம். பிரதமர் நேரு மறைந்தது, இந்தியா விற்குப் பேரிழப்பே. எங்கள் நேருவின் மறை விற்கு, அமெரிக்கர் அனைவரும் வருந்துவது போலவே, உங்கள் கென்னடியின் மறைவிற்கும் இந்தியர் எல்லோரும் வருந்துகிறோம்'' என்று ஆறுதல் பரிமாறினேன்.

''இருவர் மறைவும் மெய்யாகவே பேரிடிகளாம். நேருவும், கென்னடியும் மனிதகுல மாணிக்கங்கள். இவர்கள் இருவரும் வெறும் கட்சித் தலைவர்கள் அல்ல. நாட்டுத் தலைவர்கள் மட்டுமல்ல. மானுடம் முழுமைக்கும் வாழ்ந்தவர்கள் இருவரும். மானுடத் திற்குக் குரல் கொடுத்தவர்கள் இவர்கள். உலக அமைதிக் காவலர்கள் ஆயிற்றே இருவரும். மக்கள் இனம் முழுவதையும் நேசித்த இரு பெருந்தலைவர் களை அடுத்தடுத்து இழந்து விட்டதே உலகம்'' என்று உருகினார் அவர்.

நெஞ்சை நெகிழ வைத்த இப் பேச்சு, அவர் ஒருவரோடு நின்றதா? இல்லை. பலரும் நேருவின் மறைவிற்கு ஆறுதல் கூறினர். ஒவ்வொரு நாளும் பலரிடம் இத்தகைய ஆறுதல் கேட்டேன், நானும் அத்தனை பேருக்கும் மாற்று ஆறுதல் கூறினேன். கென்னடியின் மறைவை நினைவூட்டி ஆறுதல் கூறினேன். ஆறுதல் கூறினவரும் ஆறுதல்கள் பெற்றவரும் ஒரு நிலையினரா? எளிய தொழிலா ளர்கள் மட்டுமா? இல்லை. சாதாரண பொது மக்களும் உண்டு. கற்றறிந்த மேதைகளும் உண்டு. எளியவர்களும் உண்டு. செல்வர்களும் உண்டு.

இங்கே பிறந்து மறைந்த நேருவிற்கு அங்கே வாழும் மக்கள் உருகுவானேன்? நம்மோடு வாழ்ந்து மறைந்த நேருவிற்கு அமெரிக்கர் அழு வானேன்? தலைமைப் பதவியில் வீற்றிருந்த ஒருவ ருக்குத் தரையில் கிடக்கும் மக்கள் துக்கப்படு வானேன்? கோமானின் மறைவிற்காகக் கோடிக் கணக்கான குடியிருப்போர் குமுறுவானேன்?

அதேபோல் அங்கே அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த கென்னடிக்கு இங்கேயுள்ள இந்தியர் கண்ணீர் வடிப்பானேன்? சமயத்தால் வேறுபட்ட இந்துக்களும் இரங்குவானேன்? செல்வத் தலைவனின்

இறப்பிற்குச் செக்குமாடாக உழைக்கும் பாட்டாளி களெல்லாம் பதைபதைப்பானேன்?

இச் சிந்தனைகள் எழுந்ததுண்டா தம்பீ?

செல்வத்தில் பிறந்தவர்கள் நேருவும், கென்ன டியும். செல்வத்தில் வளர்ந்தவர்கள் இருவரும். செல்வச் செருக்குற்றுக் கிடந்தவர்களா இருவரும்? இல்லை, ஏழைகளை ஏறிட்டுப் பார்க்காதவர்களா? இல்லை. இல்லை.

செல்வத்தையும், அது கொடுத்த சூழ்நிலையை யும், செல்வாக்கையும் வாய்ப்புகளாகக் கொண்ட வர்கள் இருவரும். எதற்கு வாய்ப்புகளாகக் கொண்டார்கள்? சொந்த வாழ்க்கைக் கவலையி லிருந்து பெற்ற விடுதலையை, நாட்டின் தொண் டிற்கு வாய்ப்பாக மாற்றினார்கள் இருவரும். ஏழைகளைப் பற்றியே எண்ணினார்கள்; ஏங்கினார்கள்; ஏழைகளுக்காகவே பேசினார்கள்; திட்டமிட்டார்கள்; உழைத்தார்கள்; காலமெல்லாம் உழைத்தார்கள்; மலைமலையாக எழுந்த எதிர்ப்பலைகளையெல்லாம் சமாளித்துக்கொண்டு அரும்பாடு பட்டார்கள்.

சமூக மாடியின் உச்சியிலே பிறந்த நேருவும் கென்னடியும் மேட்டுக் குடியினரைப்போல் உல்லாச வாழ்விலே மறைந்தார்களா? இல்லை. தாழ்ந்து கிடந்தவர்களை, சமூகத்தின் அடித்தளத்திலே அழுந்திக் கிடந்தவர்களைக் கைதூக்கி நிறுத்தி, வாழ்ந்தவர்கள் இவர்கள். ஒரு நீதிக்காகவே உழைத்து உயிரை விட்டார்கள் இருவரும். பள்ளத் தில் கிடந்த சமுதாயத்தை, மேநிலைப்படுத்த போராடி மாய்ந்தவர்கள் நேருவும் கென்னடியும்.

தம்பீ! விண்ணகத்தே உள்ள இரவி, மண்ண கத்தே வந்து ஒளி கொடுக்கிறது, வாழ்வளிக்கிறது. சிலருக்கல்ல; சில உயிர்களுக்கல்ல; எல்லோருக்கும்;

எல்லா உயிர்களுக்கும். அவ்வண்ணமே நேருவும் கென்னடியும் எவ்வளவு உயரத்தில் வீற்றிருந் தாலும், மக்கள் இனம் முழுமைக்கும் காவலாளர் களாக, வாழ்விளிப்போர்களாக, நம்பிக்கை ஊட்டு பவர்களாக விளங்கிஞர்கள். ஆகவே அவர்கள் மறைந்தாலும், மறக்காமல் வையத்து மக்களெல் லாம் போற்றுகிருர்கள். தொண்டர்களுக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு. மக்கள் தொண்டர் களுக்கு மக்கள் உள்ள இடமெங்கும் சிறப்பு. இதிலே விந்தை என்ன? நம் இந்தியத் தலைவரிடம் இவ்வளவு பெருமதிப்புக் கொண்டுள்ள அமெரிக்காவைப் பார்க்க ஆவல் எழுகிறதா தம்பீ? தவறல்ல தம்பீ! காலத்தில் கைக்கூடும் இதுவும். அதுவரை, கருத்தாய்க் கற்றுவா. பதருமல் பாடுபடு. விழிப் பாகப் பாடுபடு. உண்மையாக வாழ்ந்துவா. போக்கு வரத்து வசதிகள் மட்டுமல்ல, போக்குவரத்து வாய்ப்புகளும் மேலும் மேலும் பெருகும் எதிர்காலம் உன்னையும் அமெரிக்காவிற்குக் கொண்டுசெல்லும். இனி அமெரிக்கா செல்வோருக்கும் வழக்கம்போல் வணக்கம் கிடைக்கும். என்றும்போல், இனியும் நலனைக் கேட்பார்கள். நேருவை நினைவூட்டி ஆறுதல் கூறலாம். அதோடு நிற்பார்களா! அடுத் தடுத்து ஆறுதலுக்குரியவர்களாகி விட்டோமே நாம்.

நம் இரண்டாம் பிரதமர், லால்பகதூர் சாஸ் திரியின் மறைவையும் நினைவூட்டி ஆறுதல் கூறுவர் அமெரிக்கர். என்ன சொல்லி நினைவூட்டுவர்? யாரோடு ஒப்பிட்டு ஆறுதல் கூறுவர்?

''செயற்கரிய செய்து முடித்து வெற்றிகண்ட அதே வேளையிலே, திடீரென மறைந்தாரே சாஸ்திரி. ஆபிரகாம் லிங்கனைப்போல், வெற்றி வேளையில் மறைந்தாரே சாஸ்திரி. எத்தனை பெரும் நில அதிர்ச்சி இது!''

''ஏழையாகப் பிறந்தார் லிங்கன்; எளியராகப் பிறந்தார் சாஸ்திரியார். தன் முயற்சியால் கற்ருர் லிங்கன்; தன் பாட்டால் படித்துத் தேறினுர் சாஸ்திரியும். உழைப்பால் உயர்ந்தார் லிங்கன்; நாட்டின் தலைவராக உயர்ந்தார். சாஸ்திரியும் உழைப்பால் உயர்ந்தார்; நாட்டின் நல்ல தலைவராக உயர்ந்தார்.''

''கல்விச் செருக்கோ பதவிக் கர்வமோ இல்லாதவர் எங்கள் லிங்கன். கல்விக் கர்வமோ பதவிச் செருக்கோ கொள்ளாதவர் உங்கள் சாஸ்திரியும்.''

''எல்லோர்க்கும் செவிசாய்த்தவர் எங்கள் லிங்கனும் உங்கள் லால்பகதூரும். எல்லோரையும் மதித்து நடந்தவர் இருவரும்.''

''அமைதி விரும்பிகள் இருவரும். ஆயினும் சூழ்நிலை, போருக்குப் பிடித்துத் தள்ளிற்று இருவரையும். நாட்டின் நலனுக்காகப் போரையும் உறுதியாக நடத்தி, வெற்றி கண்டனர் இருவரும். ''இணைந்திருப்பதா? பிரிந்து போவதா?'' என்ற புயலை அமெரிக்காவில் சமாளித்து ஐக்கிய அமெரிக்காவை நிலைபெறச் செய்தவர் லிங்கன். அதே புயல் இந்தியாவில் வீசியபோது, கலங்காது நின்று இணைந்த இந்தியாவை உறுதிப்படுத்திச் சென்றவர் சாஸ்திரி.''

''அமெரிக்கர் அனைவரும் பொருமைப்படும்படியான, மாபெரும் தொண்டாற்றிச் சிறந்த, கண்ணுக்குக் கவர்ச்சியில்லாத லிங்கனுக்கும், முந்திரிக்கொட்டை போல் முன்னே நின்ற பெரியவர்களெல்லாம் பொருமைப்படும் அளவு, நாட்டிற்கும் அமைதிக்கும் நற்ருெண்டாற்றிச் சிறந்து மறைந்த லால்பகதூர் சாஸ்திரிக்கும் இரு வேற்றுமைகளே உள்ளன. லிங்கன் நெட்டையானவர்; சாஸ்திரி குட்டையானவர். இது முதல் வேற்றுமை. லிங்கன்,

வெறியன் குண்டிற்கு இரையானார்; சாஸ்திரி இயற்கைக்கு ஆளானார். இது இரண்டாவது வேறு பாடு. மற்றபடி, லிங்கனும் சாஸ்திரியும் ஒரே வகை யானவர்கள். இவர்கள் இருவரும் காலத்தை வென்று ஒளிவிடுவார்கள்'' என்று இரங்கல் உரை கூறுவார்கள்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த இந் நல்லோர்கள் நம்மை வழிநடத்துவார்களாக. அவர் க்ள், தன்முயற்சி நம்மை ஊக்குவதாக; பெருமை நம்மை உயர்த்துவதாக. தன்மை நம் தடுமாற்றத் தைத் தகர்ப்பதாக. அடக்கம் நம்மையும் அடக்க முடையவராக்குவதாக. நம்மை உறுதிப்படுத்து வதாக. கடமை உணர்ச்சி நமக்குக் கடமையைக் காட்டுவதாக. அவர்களது மனிதாபிமானம், நம் மிடம் மக்கள் இனப்பற்றை வளர்ப்பதாக.

# தகுதி உண்டா?

*என்னருமைத் தம்பீ, தங்காய்!*

நீங்கள் வாழவேண்டும். மண்ணில் வாழ வேண்டும். இப் பிறவியில் வாழ வேண்டும். நல்ல வண்ணம் வாழவேண்டும்.

வேளைக்கு வேளை வயிறு நிறைய சோறுண்டு இருந்தால் போதுமா? வீட்டில் வளரும் நாய்க்கும் வேளைக்கு வேளை சோறுண்டே! அந் நாய் இருப் போடு நாமும் இருந்து விடலாமா? சிந்தியுங்கள் உடன் பிறந்தோரே!

உடை வேண்டும் என்கிறீர்களா? உண்மை. பணக்காரர் வீட்டுத் தலையணை; 'அதற்கு, அடுத்து அடுத்து உறைமாற்றம் உண்டு. நமக்கும், அடுத் தடுத்து மாற்ற, உடை கிடைத்து விட்டால் நல் வாழ்வாகி விடுமா? தலையணை நிலை போதுமா நமக்கு?

போட்ட இடத்திலே கிடந்து பயன்படும் தலையணை அல்ல நாம் என்கிறதா உங்கள் சிந்தனை? மெய்யான கூற்று. நம் விருப்பப்படி, வாழ நமக்கென்று ஒரு வீடு தேவையென்கிறீர் களா? ஒப்புக்கொள்கிறேன்.

உணவும், உடையும், உறையுளும் போதியபடி பெற்று இருப்பது மட்டும் மனித வாழ்வாகாது. பின் எது மனித வாழ்வு? மானத்தோடு வாழ்வது மனித வாழ்வு. அதுவே நல்வாழ்வு. உண விற்காக மண்டியிடும் நிலை ஆகாது. உடைக் காக, பாதந் தாங்கும் நிலையும் வேண்டா. உறை யுளுக்காக, இச்சகம் பேசித்திரிய வேண்டா. இத் தனையும் நம் உரிமை. உரிமையைப் பெற மானத்தை இழக்காதே தங்காய்! மானத்தை விற்றுத்தான் உயிரோடு இருக்க முடியும், நடமாட முடியும்

என்பது கோணல் நிலை; அக் கோணலை நிமிர்த்துவோம்.

பிழைக்க, உழைக்க இது இயற்கை நிலை; 'பிழைக்க, தலையாட்டு' இது நோய் நிலை. 'பிழைக்கப் பல்லிளிக்க' இது மற்றொரு நோய். 'பிழைக்கச் சுரண்டு' இதுவும் ஒரு நோய். வெறும் பிழைப்பிற்காக, மக்கள் இனம் பல நோய்களில் சிக்கிச் சீரழிகிறது.

உடல் நோய்களைத் தடுக்கவும் போக்கவும் பாடுபடுவதுபோல, சமுதாய நோய்களையும் நீக்க வாரீர்! உடல் நலத்தை வளர்க்கச் சிந்தனையும் முயற்சியும், காலமும் பொருளும் செலவிடுகிறோம். மானத்தை வளர்க்க என் செய்வோம்? சிந்தனையை இக் கேள்வியின்மீது திருப்புங்கள். முயற்சியும் இப்படித் திரும்பட்டும். காலமும் பொருளும்கூடக் கண்டவற்றிற்கெல்லாம் செலவாக வேண்டா. மானத்தோடு, ஆண்மையோடு, உரிமையோடு, உண்மையோடு வாழும் மக்கட் சமுதாயத்தை உருவாக்கப் பயன்படட்டும் அவை.

உலகம் முழுமைக்கும், பலப்பல நன்மைகளை, பெரும்பெரும் நன்மைகளை விளைவிக்கும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் எப்படிப் பிறந்தன? யாரால் பிறந்தன? நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்த மேதை, கூட்டத்தின் கைதட்டலைக் கருத்திற் கொண்டாரா? கொண்டிருந்தால், கோமாளித் தனத்தையல்லவா கற்றிருப்பார்? சிந்திக்க வைப்பதற்குப் பதில் சிரிக்க வைப்பதில் அல்லவா தன்னையும் உலகையும் பாழாக்கியிருப்பார்? தனக்கு எவ்வளவு கிடைக்கும் என்று எண்ணியிருந்தாலும், எவரோ ஒருவருடைய அடைப்பக்காரராக அல்லவா சென்றிருப்பார்?

முன்ஞேரோடு முடிந்தது அறிவு என்று எண்ணியவரல்லர் அம் மேதை. பிழைப்புக்கு வழிதேடி அலேந்தவரல்லர் அவர். உற்றுக் கவனித்தார். ஒருமனப்பட்டுக் கவனித்தார். துணிந்து சிந்தித்தார். தாமாகச் சிந்தித்தார். நல்லதொரு முறையைக் கண்டு கொடுத்தார். விளேவு, உலகத்திற்கு நன்மை; நமக்கும் நன்மை.

உலகத்தின் ஒப்புயர்வற்ற சாதனேகள் எல்லாம்—உலகத்தின் பெரும் கண்டுபிடிப்புகளெல்லாம்—உலகத்தின் ஒளிமயமான கொள்கைகளெல்லாம்—செம்மறியாட்டுப் போக்கைவிட்டு முன்ஞேர் விட்ட இடத்திற்கு அப்பாலும் துணிச்சலாக முன்னேறி, எடுத்த ஒன்றிலே முழுமனதாக ஈடுபட்டுத் தாமே கண்டு, கூர்ந்து சோதித்து, புகழ் பரணியையோ, தூற்றல் புழுதியையோ திரும்பிப் பார்த்துச் சிந்தை கலேயாமல் பாடுபட்ட ''ஒருமனத்தால்'' ஏற்பட்டவை. இது நினேவிருக்கட்டும் தம்பீ!

மக்கள் இனம், மானத்தோடு வாழ, அச்சமற்று இருக்க, உரிமையோடு உலவ கல்வி வேண்டும். தூறல் கல்வி அல்ல; இரண்டொரு அங்குல மழைக் கல்வியல்ல. கொட்டு கொட்டென்று கொட்டும் ஒரு மழைக் கல்வி வேண்டும். பரவல் கல்வி வேண்டும். எல்லோருக்கும் வேண்டும். எல்லா வயதினருக்கும் வேண்டும்..

கொட்டும் மழைக் கல்வியால் பரவலான பலன் விளேயுமா? எல்லோரும் கற்றுத் தேற முடியுமா? எதுவரை எல்லோரும் எட்டிப் பார்க்கலாம்? கல்லூரிக் கல்வி, கண்டவர்க்கெல்லாம் கொடுக்கலாமா? அதஞல் அவர்களாவது நன்மையடைவார்களா? தாங்கள் தவறியதுமல்லாமல், கல்வியின் தரத்தைக் கெடுத்துவிட மாட்டார்

களா? கல்லூரிக்கு இலாயக்கானவர்களாகப் பார்த்துப் பிரித்து மேலே அனுப்பக்கூடாதா?

இவ் வச்சங்கள் பலருடைய உள்ளத்தில் எழுகின்றன.

'கல்லூரிக் கல்விக்குத் தகுதியானவர்கள் சிலர்; உயர்நிலைப்பள்ளிக்கு ஏற்றவர்கள் பலர். தொடக்க நிலையோடு நிற்க வேண்டியவர்கள் மற்றவர்' என்பது, உயர்நிலைப்பள்ளி தேறிய மாணவர்களைப் 'போக்குப் பிரிவு' செய்வது கேடானமுறை; மக்களையும் நாட்டையும் நலியச் செய்யும் முறை.

இத் தவறான கொள்கையையும் முறையையும் பின்பற்றும் எந் நாடும் இனி போதிய அளவு வளராது. இவ்விரண்டையும் தூக்கியெறிந்து விட்டு, எல்லோர்க்கும் எல்லா நிலைக் கல்வி மடையையும் திறந்துவிட்ட நாடே, இன்று சந்திரனில் விண்வெளிக் கப்பலை பத்திரமாக இறக்குவதில் வெற்றி பெற்று விட்டது. சோவியத் ஒன்றியம், விஞ்ஞானத் துறையில், பல முதல் வெற்றிகளை அடைந்ததற்கு, இனியும் அடையப்போவதற்கு உயிர் நாடி எது? கல்வி, கல்வி, மேலும் கல்வி. எந் நிலையில் விட்டாலும் எவ் வயதில் வேண்டுமானாலும் மேலும் மேலும் கல்வி என்கிற நிலை, நிலைபெற்று விட்டதே.

கல்லூரிக் கல்வி, சிலருக்கே பொருந்தும் என்கிற கூச்சலைக்கண்டு மிரண்டு விடாதீர்கள் உடன் பிறந்தோரே! மதி 'நுட்பம்' என்பது, 'பிறவிக்கூறு ஒரு பங்கு; முயற்சியின் விளைவு தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது பங்கு' என்பது 'வாக்குக்காக' ஊக்கமூட்டும் அரசியல் வாதியின் ஒலியல்ல. விஞ்ஞான மேதை ஒருவரின் ஆராய்ச்சியின் முடிவு. சென்ற நூற்றாண்டிலேயே ரஷ்ய விஞ்ஞானி செசினோவ், ஆழ்ந்து,

ஆராய்ந்து கண்ட உண்மை. இதுவே, மேதைகளைப் பெருக்கும் முறை. மாருக உயர்கல்வியைப் பாத்திகட்டி, வேலியிட்டு, மடக்குதல் நம் நாட்டையும் மக்களையும் முடக்கிவிடும்.

முயற்சியின் விளைவே மதிநுட்பம் என்பது சோவியத் கல்வியின் கொள்கை மட்டுமல்ல; அன்ருட நடைமுறையில் அங்குக் காண்பதுவும் அதுவே.

ஆகவே பெருங்கல்வியாளர்களின் கோபத்தைக் கண்டு அஞ்சாதே; தகுதியுண்டோ என்று அஞ்சாதே; உனக்குத் தகுதியைத் தராவிட்டால், நீயே உன் முயற்சியால் தகுதியைத் தேடிக் கொள்ள முடியும்.

'தகுதியற்றவன்' என்கிற அவமானத்தைத் துடைக்கப் பாடுபடு. விழிப்பாக பாடுபடு. பெரியவர்கள் வீட்டுப் பிள்ளைகளைவிட விழிப்பாகப் பாடுபடு. படி; மேலும் படி; மேலும் மேலும் படி. உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?

# கனவு வென்றது

என்னருமைத் தம்பீ, தங்காய்!

கனவுகள் நனவாகின்றன. எல்லாக் கனவுகளுமா? இல்லை. எல்லோருடைய கனவுகளுமா? இல்லை. சிற்சில கனவுகள், சிலருடைய கனவுகள் வெற்றி பெறுகின்றன. உங்கள் கனவுகளும் அப்படி வெற்றிபெற வழிவகை என்ன? பலப்பல கனவுகளாக இல்லாமை முதல் வழி; இன்று ஒரு கனவு, நாளைக்கு ஒரு புதுக் கனவு; இப்படி மறந்து மறந்து போகிற கனவுகள் மறைந்தும் போகும். அவை முளைக்கா, வேரூன்றா; வளரா, பலிக்கா. எனவே நம் வாழ்க்கைக் கனவுகள் புதர்களாகாதிருப்பதாக. இரண்டொன்றாக இருப்பதாக. ஒருபோது ஒரு கனவாக இருப்பதாக. அது பலிக்கும்வரை வேறு கனவுகள் வந்து முந்தியதைப் புதைத்து விடாதிருப்பதாக.

அக் கனவு எத்தன்மையதாக இருக்க வேண்டும்? அது உயரியதாக இருக்கட்டும். நன்மை தருவதாக இருக்கட்டும்.

புதராக இல்லாமல், தனிமையாகவே வரும் கனவும் தானே நனவாகி விடாது. உயரிய, நன்மையான கனவும் தானே பலிப்பதில்லை. அதற்குப் போதிய முயற்சி வேண்டும். தொடர்ந்து முயற்சி வேண்டும். ஒருமுகமான முயற்சி வேண்டும். முயற்சி மட்டும் போதுமா? போதாது. ஏற்ற சூழ்நிலையும் தேவை.

'காற்றிலேறி விண்ணிலே சாடுதல், கவிஞனின் கற்பனை' என்று ஒதுக்கிய காலம் அன்று; இன்றோ இது சாதனையாகி விட்டது. நில மண்டலத்திலிருந்து, நிலாமண்டலத்திற்குச் செல்லுதல் என்ற கருத்தே பித்தனின் பிதற்றலாகத் தோன்றிற்று.

நகைப்பிற்கு இடமாக இருந்தது முன்பு. இன்றோ வியப்பிற்கு உரியதாகி விட்டது. நாளை நடைமுறைக்கு வந்துவிடும். மக்களுக்குப் பழக்கமாகி விடும்.

விண்வெளியில் பயணம் செய்து, நிலாவில் விண்வெளிக் கப்பலைப் பத்திரமாக இறக்குவதில் வெற்றி பெற்று விட்டது மானுடம். தானே சென்று இறக்குவதில் வெற்றிபெற்று விடும் மானுடம். மானுடத்திற்காக, இதில் முதல் வெற்றியைப் பெற்ற நாடு எது? சோவியத் நாடு.

சோவியத் நாடு என்றால், அந் நாட்டிலுள்ள அத்தனை மக்களும்—இருபது கோடி மக்களுமா— இதில் பங்கு கொண்டனர்? பாடுபட்டனர்? இல்லை. மக்கள் அத்தனை பேருமல்ல. இவ் விஞ்ஞானச் சாதனைக்குப் பொறுப்பு. விஞ்ஞான விற்பன்னர்கள் பலர் இதற்குப் பொறுப்பு.

இதுவரை யாரும் பெறாத வெற்றியை, பெறற்கரிய பெரும் வெற்றியைப் பெற்ற—இவ் விஞ்ஞான மேதைகள் யார்? இக் காலத் தவசிகள், இதிலும் அதிலும் கவனத்தை சிதறவிடாதவர்கள். எதிர்ப்பட்டவற்றையெல்லாம் வாரியணைத்து, வழி மறந்து போகாதவர்கள். அறிவை, ஆற்றலை, முயற்சியை, காலத்தை சென்றவிடத்தாற் செல விடாது கட்டிக்காத்தவர்கள். ஒன்றே தொடங்கி, நன்றே முடிக்கும் திண்ணியர்கள். ஒரு மனப் பான்மையினர், எனவே செயற்கரிய செய்து முடித்தனர்.

ஓங்கி, பிற உலகளந்த இவ் விஞ்ஞான மேதைகள் எப்படி உருவானார்கள், போர் போராகக் கட்டிகளைத் தோண்டியெடுத்து இடித்துப் புடைத்துப் பிரித்து, சிறுசிறு தங்கத் தூள்களைப் பொறுக்கிக் கொள்வதுபோல், பெற்றோர்களா இம்

மேதைகளை? போக்குச் சோதனைகள் என்ற 'வித்தைகளை', புதுமுறை ஆருடங்களை—பிஞ்சுப் பருவத்தினரிடைக் கையாண்டு, கணக்கிலடங்கா தவர்களைக் கழித்துவிட்டு, இங்கொருவரை அங் கொருவரைப் பொறுக்கியெடுத்து, அப்பொறுக்கு மணிகளுக்கு 'தயார்தீனி' கொடுத்துப் பெறவில்லை இந் நூற்றுண்டின் சித்தர்களை. மாருக, வெள்ளம் போல் கல்வியைப் பாய்ச்சினுர்கள். மூலைமுடுக் கெல்லாம் பாய்ச்சினுர்கள். எல்லோர்க்கும் பாய்ச் சினுர்கள். மழைக்குக்கூடப் பள்ளிக்கூடப் பக்கம் ஒண்டாதவர்களெல்லாம் பல்கலைக் கழகங்களில் பெருநடை போடுமளவிற்குப் பாய்ச்சினுர்கள்.

பாலையில், முட்புதர்களே ஏராளம். அங்கு வளரும் மரங்கள் இரண்டொரு வகையினவே. குறிஞ்சியில் பெருமழை பெய்யும். உயர்மலைத் தொடரில் எவற்றைக் காணலாம்? வானுற ஓங்கி வளர்ந்துள்ள உயர் மரங்களைக் காணலாம். பலவகையான உயர் மரங்களைக் காணலாம். நால்வகைப் படையினரும் ஒரே நேரத்தில் தங்குமளவிற்குத் தழைத்த மரங்களைக் காணலாம்.

தாவர வளர்ச்சிக்கு மழைப் பெருக்கம் தேவை. மானிட வளர்ச்சிக்குக் கல்வி மழைப் பெருக்கம் தேவை. உலகத்தில் முன்னணியில் நிற்கும் நாடுகளில் கல்வி மழைப் பெருக்கத்தைக் காண்கிரும். பல்துறை பொருளாராய்ச்சியைக் காண்கிரும்.

கல்வியைப் பொறுத்தவரையில், இந்தியாவின் குறிஞ்சியாக தமிழ் நாடு வளர்ந்து வருகிறது. இது நீடித்தால், பிற பகுதிகளுக்கும் இக் கல்வி மழைப் பெருக்கம் பரவினுல், நம்மிடையிலும் உலக மேதைகள்—பலதுறை உலக மேதைகள்—வளர்வார்கள். வானுற ஓங்கி வளர்வார்கள்.

இரண்டொருவர் அல்லர். பலப்பலர் வளர்வார்கள். இப் பழம்பெரும் நாட்டிலும், துறைதோறும் துறைதோறும் உலக மேதைகள் பெருக வேண்டாவா? அதற்குத் துணையாகக் கல்விப் பெருவெள்ளம் ஓட வேண்டாவா? அதற்குத் தடையாக நாம் இருக்கலாமா? கூடாது, துணை யாக இருக்கவேண்டும்.

மழைவளம் பெருக மரங்களை—பல்வகைப் பெரும்மரங்களை — முளைக்கச் செய்யும். வளர்க்கச் செய்யும். அவற்றைக் காக்க வேண்டுமே! கண்டவை மேய்ந்துவிடாதபடி காக்கவேண்டும். வழிப்போக்கரெல்லாம் வெட்டி, ஒடித்து, அழித்து விடாதபடி பாதுகாக்க வேண்டும். இது மக்கள் பொறுப்பு. மக்களின் தலைவர்களாக உள்ளவர் களின் பொறுப்பு.

சந்திர மண்டலத்தை எட்டிப் பிடித்துள்ள இன்றைய இரஷ்ய விஞ்ஞானிகளை—உலக மேதை களை — கண்ணிலும் அருமையாகக் காத்து வந்தனர் அந்த நாட்டவர். அன்றாட ஊர்ப் பசிக்கு, குழுப்பசிக்கு இரையாகாது காத்தனர். வழிபட்ட சிக்கல்களில் எல்லாம் எதிர்காலப் பேரறிஞர்களைச் சிக்கவைக்காமல், போராட்டங் களிலெல்லாம் தள்ளிப் பலியிடாமல், வாழையடி வாழையாகக் காத்தனர்.

விதை நெல்களை, பொங்கல் படையலுக்கு எடுப்பது சரியல்ல. பொறுக்கு விதை மணிகளை அவசர சோற்றுக்குப் பயன்படுத்தலாகாது. பாது காத்து வைத்திருந்து பருவத்தே விதைத்து, வளர்த் துக் காத்து, ஒன்று நூறாகப் பலன்பெற வேண்டும். இவ்வழியைச் சோவியத் மக்கள் பின்பற்றுகின்றனர். இந் நல்வழியை, மானிட வளர்ச்சி வழியை அவர் களுக்குக் காட்டியது யார்? தலைவர் லெனின்.

கொடுங்கோல் மன்னனும் ஜார் ஆட்சியைக் கவிழ்ப் பதற்குக்கூட வருங்காலத்தவர்களை, எதிர்கால மேதைகளை, உலக விஞ்ஞானிகளாகப் போகும் மாணவர்களை இழுக்காது 'படியுங்கள், படியுங்கள், மேலும் படியுங்கள்' என்று மட்டுமே மாணவர் களுக்குத் திட்டம் கொடுத்தார் லெனின். எதையோ மாற்றுவதற்கு, எதையோ கவிழ்ப்பதற்கு, எதையோ தடுத்து நிறுத்துவதற்கு, அன்றைய மாணவர் சமுதாயம் பலி கொடுக்கப்படவில்லை. தலைவரைப் பின்பற்றும் பிற்காலத்தவரும் இந்த அறநெறியை விழிப்பாகப் பின்பற்றுகின்றனர். அதன் விளைவே சந்திர மண்டலப் பயணம்.

நாமும் செயற்கரிய செய்ய வேண்டாவா? உலக நாடுகளின் இடையே சமமாக, தலை நிமிர்ந்து நிற்க வேண்டாவா? ஆம் என்றால் வழியென்ன?

'மாணவர்கள் ஒரே நேரத்தில் மாணவர் களாகவும், அரசியல்வாதிகளாகவும் இருக்க முடியாது, இருக்கக்கூடாது' என்று நம் தலைவர் பாரதத்தின் தந்தை. உலகத்தின் உத்தமர் அண்ணல் காந்தியடிகளார் வழிவகுத்திருக்கிறார். அந் நேர் வழியை, செங்குத்தான வழியை, நல்வழியை, உறுதியாக கடைப்பிடிக்கவேண்டும். பின்னர் நாமும், நமது உரிய பங்கு, மேதைகளை வழங்கி ஒளி விடலாம். தன்சுடர் ஒளிகளாகத் திகழவேண்டிய தம்பிகளே, தங்கைகளே! கண்டவர் கையில் சிக்கும், பலரும் அழுத்திப் பார்க்கும் 'டார்ச்சு' களாகலாமா?

# அறியாமையைத் துடைக்க வாரீர்

என்னருமைத் தம்பீ, தங்காய்!

நீங்களும் நானும் உலகத்தின் மூத்த குடி. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய குடி. இது மகிழ்ச்சியை ஊட்டுகிறதா? இது நம் கடமையை நினைவூட்ட வேண்டுமே! மகிழ்ச்சியில் கடமையை மறக்கலாமா?

தம்பீ! கடமை என்ன? மூத்த அண்ணனின் கடமை என்ன? காத்தல்; வளர்த்தல். எதைக் காத்தல்; எதை வளர்த்தல்? பெற்றோரைக் காத்தல்; உற்றார் உறவினரைக் காத்தல். தம்பி தங்கைகளைக் காத்தல்; வளர்த்தல். வீட்டைக் காத்தல்; நிலபுலன் களைக் காத்தல்; குடும்பமானத்தைக் காத்தல்; உடைமையை, உரிமையைக் காத்தல்; வளர்த்தல்.

தங்காய்! முதற்குடிக்கு முதல்தரமான கடமை உண்டு. பெருங்குடிக்குப் பெருங்கடமை உண்டு. முதற்குடியும் பெருங்குடியுமான நமக்கு முதல் தரமான பெருங்கடமைகள் உள்ளன. அவற்றைக் கண்டு அஞ்சாதீர். அவற்றை விட்டுவிட்டு இன்றைய பொறுப்புக்களில் இருந்து நழுவாதீர்.

தம்பீ, இன்றைய பொறுப்பு என்ன? நிலைக்குத் தக்க பொறுப்பு, இதுவே இயற்கை நியதி. பச்சிளஞ் சிறுவனும் சிறுமியும் சாணி பொறுக்கி வாழ்வது இயற்கை நியதியல்ல. இது பெற்றோரின் பொறுப் பற்ற தன்மையின் விளைவு. சமுதாயத்தின் ஈரமற்ற நெஞ்சின் நோய், ஏதோ கல்வியாளன் ஒருவரின் கருத்து—பிரசாரக் கருத்து—என்று ஒதுக்கி விடாதீர். இக் கருத்தைக் கேட்க அஞ்சி செவிகளை வேறுபக்கம் திருப்பி, நம்மை நாமே வஞ்சித்துக் கொள்ளக் கூடாது. நாட்டையும் வஞ்சிக்கக் கூடாது. தம்பீ! மாறாக இக் கருத்தைக் கேள்; சிந்தி; ஏற்றுக்கொள்; இதில் நிலைத்து நில்; உறுதி

யாக நிலைத்து நில். இக் கருத்து அங்கிங்கு எனாதபடி எங்கும் வேரூன்றும்வரை நிலைத்து நிறைவேற்று.

தங்காய்! இதோ காந்தியடிகளார்! அண்ணல் காந்தியடிகளார்! இந்திய நாட்டின் தந்தை காந்தி யடிகளார்! நம் அரசியல் அடிமைத்தன அவமானத் தைத் துடைத்த சான்றோர் காந்தியடிகளார்! இவரது நல்லுரையையும் கேட்போம். உடன் பிறந்தோரே! இதோ உற்றுக் கேளுங்கள். இதோ வாழ்வுரை!

''சின்னஞ்சிறு குழந்தைகளைப் பள்ளிக்கூடத் திற்கு அனுப்பாமல் நிறுத்திவிட்டு, அவர்களைக் கூலிவேலைகளில் ஈடுபடுத்துவது நாட்டின் கேவலத் திற்கு அடையாளம். குறைந்தது பதினாறு வயது வரையிலாவது அவர்களைக் கல்விக் கூடத்தில் வைத்திருக்கவேண்டும்.''

கேட்டதா காந்தியுரை? இது வாழ்வு உரை. இது, இவரையும் அவரையும் மட்டும் வளர்த்து விட்டு, பலரையும் ஒதுக்கிவிடும் உரையல்ல. எல்லோரையும் வளர்க்கும் உரை. எல்லோருக்கும் வாழ்வளிக்கும் உரை. இதுவே இன்றைய தேவை.

சிறுவர் சிறுமியரைக் கல்வியில் ஈடுபடுத்த வேண்டும். பதினாறு வயது வரையிலாவது வேறு வேலைகளில் ஈடுபடுத்தக்கூடாது. இப் பொன் னுரையை நாம் உணர்ந்தால் போதுமா? மக்கள் உணரவேண்டாவா? எப்படி உணருவார்கள்? தாமே படித்து உணர முடியுமா? மூத்தோர் பலர் எழுத்தறி வில்லாதவர்களாயிற்றே. அவர்கள் இதைப் படிப்ப தெப்படி? சிந்திப்பதெப்படி? உணருவதெப்படி?

எழுத்தறிவு பெற்றால் படிப்பர். சிந்திக்கத் தூண்டினால் சிந்திப்பர். சிலராவது சிந்திப்பர். உணருவர். ஊருக்கு ஒருவர் இருவர் உணருவர். உணர்வுச் சூழல் விரியும். நல்ல சூழல் வளரும்.

பொதுமக்களுக்கு எழுத்தறிவூட்ட நீங்களும் நானும் நம் சொந்தத்தில் செய்ததென்ன? ஒன்றுமில்லை. இனிச் செய்யப் போவதென்ன? ஒன்றுமில்லை என்று பதில் கூறலாமா? ஆகாது.

உடன் பிறந்தோரே!

நாம் பெற்றோம் எழுத்தறிவு. நாம் பெற்றோம் கல்வி. நம்மில் சிலர் பெற்றோம் உயர் கல்வி. யார் செலவில் பெற்றோம் இவற்றை? முழுவதும் தம் செலவில் கற்றவர் எவரோ ஒருவர். சம்பளம் கட்டிப் படித்த தம்பிகூடத் தன் செலவில் படித்த தாகக் கருத வேண்டாம். அவர் கட்டின சம்பளத் தோடு—அரசினர் பணம் அதாவது பொது மக்கள் வரிப்பணம் நிறைய சேர்ந்திருக்கிறது. படித்தவரெல்லாம் மற்றவர் வரியில்—மேலாடையற்றவரும் கட்டும் வரியில் படித்தவர் என்பதை உணர வேண்டும்.

யாருடைய உழைப்பில் உருவானோமோ—யாருடைய தியாகத்தில் கல்வி கற்றோமோ—அவர்களுக்கு நாம் ஆற்றவேண்டிய கடமையை நினைத்துக் கொள்ளுங்கள். நம் பட்டத்தைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டாம். நம் படிப்புச் சீட்டைப் பிறருக்கு அளிக்க வேண்டாம். நாம் அறிவைப் பங்கிட்டுக் கொள்ளவேண்டாவா? எழுத்தறிவைப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும். உயர் அறிவையும் பங்கிட்டுக் கொள்ளவேண்டும் தம்பி!

நாம் பொதுமக்களுக்கு எழுத்தறிவு ஊட்ட வேண்டும். ஆண் மக்களுக்கு மட்டுமல்ல; பெண் மக்களுக்கும் ஊட்ட வேண்டும். ஏற்கனவே எழுத்தறிவு பெற்றிருந்தால், தொடர் அறிவு பெறத் துணை செய்வோம் வாரீர்!

பண்டைக் கதையறிவு உண்டு நம் மக்களுக்கு. தெருக்கூத்தைப் பார்த்துப் பெற்றார்கள் அவ்வறிவை. திரைப்படத்தைப் பார்த்துப் பெற்றதும் அதுவே. பாவலர், நாவலர் பொழிவதும் அதுவே. இன்று நம் மக்களுக்குத் தேவையானது புதிய அறிவு; புத்தக அறிவு. வறுமை உளைச் சேற்றிலிருந்து வெளியேற வழியறிய வேண்டும். காலைப் பின்னியிழுக்கும் வேற்றுமை வேர்களிலிருந்து விடுபடும் அறிவு வேண்டும். அழுக்கிலே வாழ்ந்து, நோயிலே நலிந்து போகாமல் தடுப்பதற்கான அறிவு வேண்டும் நம் மக்களுக்கு. நம்மாலே ஆவதொன்றுமில்லை என்னும் கையறு நிலைப் போக்கை மாற்றும் அறிவும், கருத்தும் தேவை நம் மக்களுக்கு. 'முயற்சி தன் மெய்வருத்தக் கூலிதரும்' என்னும் நம்பிக்கைப் போக்கை வளர்க்கும் அறிவை அளிப்போம் நம் மக்களுக்கு.

கோபுரத்தில் உட்கார்ந்து உபதேசிக்க வேண்டாம். நாம் பொது மக்கள் நிலைக்கு வந்து, அவர்களோடு இருந்து, அவர்களோடு சேர்ந்து, அவர்களுக்கு எழுத்தறிவையும் வளர் அறிவையும் பகிர்ந்தளிப்போம் வாரீர்! இதுவே இன்று நாம் செய்ய வேண்டிய சமுதாயப் பணி; நாட்டுப் பணி. மொழித் தொண்டுமாகும். ஒரு சில முத்தமிழ்ச் செல்வரும், சில பல இருமொழிப் புலவரும் போதும் என்று நிறைவுகொண்டே ஏமாந்தோம் நாம். பின்னடைந்தோம் நாம். அரைத்த மாவையே அரைத்து அலுத்துவிட்டோம் நாம். உடன் பிறந்தோரே! நீங்கள் மாற்றவேண்டும் இந் நிலையை.

'நம்மவர் அடிமைகள் என்ற அவமானத்தைத் தாங்காது, கொதித்து எழுந்தது முந்திய தலைமுறை. அலை அலையாக அடக்கு முறை வந்தாலும் அஞ்சாது, விடுதலைக்குப் போரிட்டது அந்தத் தலைமுறை. அரசியல் அவமானத்தை அடியோடு அழித்தது அத் தலைமுறை.

'நம்மவர் தற்குறிகள்' என்ற அவமானத்தை இன்னும் எத்தனை காலம் பொறுத்துக் கொண்டிருப்பது? நமக்குத் தன்மானமில்லையா? தரணியாண்டவன் என்று ஆர்ப்பரித்துக்கொண்டே தற்குறித் தனத்தை மறந்து விடலாமா?

உடன் பிறந்தோரே!

எழுத்தறியாமை சமுதாய அவமானம். அதைத் துடைப்பது நம் கடமை; முதற் கடமை. அக் கடமையாற்ற முற்படுவீர்.

கோடை விடுமுறையை வீணாக்காதீர். அக்கம் பக்கத்திலுள்ளவர்களை அணுகுங்கள். அவர்கள் விரும்பும் சொற்களை எழுதப் படிக்கக் கற்றுக் கொடுங்கள். அவர்களைச் சிறுமைப்படுத்தாமல் கற்றுக்கொடுங்கள். வீடுதோறும் குடிசைதோறும் எழுத்தறிவு என்னும் விளக்கை ஏற்றிவையுங்கள், அறிவொளியைத் தூண்டி விடுங்கள்.

இது பெரும் பணி; நற்பணி; இதன் தொடக்கம் அடக்கமாக இருக்கட்டும். விளம்பரத்திற்காக எவரையும் தேடி அலையாதீர். பேராலமரம் இரைச்சல் இட்டுக் கொண்டு முளைப்பதில்லை, சந்தடியின்றி முளைத்து விடுகிறது, வளர்ந்து விடுகிறது.

எழுத்தறிவு இயக்கமும் இரைச்சலின்றிப் பகட்டின்றி முளைத்து விடட்டும். ஓய்ந்த நேரமெல்லாம் வளரட்டும். தம்பிகளே, தங்கைகளே! அறிவு விடுதலைக்கு அர்ப்பணியுங்கள் உங்களை. ஆயினும் உங்கள் கல்விக்கு இடையூறாக அர்ப்பணிக்க வேண்டாம். விடுமுறை நாட்களை அறிவுப்பயிருக்கு ஒதுக்குங்கள் போதும்.

# உலகம் அழைக்கிறது

அருமைத் தம்பீ, தங்காய்!

உங்களேயும் என்னேயும் உலகம் அழைக்கிறது. நமக்கு மட்டுமா அழைப்பு? இல்லே. நம்மோடுள்ள பலரையும் அழைக்கிறது.

எதற்கு அழைக்கிறது உலகம்? வாழ அழைக்கிறது உலகம்.

'இதோ இருக்கிரேமே! இதற்கென்ன அழைப்பு' இதுவன்ரே உங்கள் ஐயம்.

இருப்பது வேறு தம்பீ. வாழ்வது வேறு தங்காய். இருப்பதும் வாழ்வதும் ஒன்றல்ல. உயிரோடு இருப்பவர்களெல்லாம்—இருப்பவைகளெல்லாம்—செய்வது. இருப்பது, வாழ்வது, இருப்பவர்களிலே சிலரே செய்வது. மற்றப் பலரோ, கட்டை வண்டிக்கு முன்பளு, பின்பளு.

பிறந்தோம். அது நம் இச்சையால் அன்று. இன்று இருக்கிரேம். இதுவும் நம் சதுராலன்று தம்பீ! வாழ்வது நம் முயற்சியால். அது ஒன்றுதான் நமக்குரியது. அதுவும் முழுக்க முழுக்க நமக்குரியதன்று. ஆயினும் அதற்கு நாம் பங்காளிகள். இதை உணருங்கள் உடன் பிறந்தோரே.

எது வாழ்வது? எவர் வாழ்வார்? வசையொழிய வாழ்வது வாழ்வு. அவரையும் இவரையும் தள்ளி மிதித்துவிட்டு வாழ்வது வாழ்வன்று. பலிக்குமிடமெல்லாம், அடாது செய்து, பழியைப் பொருட்படுத்தாது வாழ்வதும் வாழ்வன்று. பிறருக்குத் துன்பம் விளேவிக்காது, பழிக்கு அஞ்சி, கொடுமைக்குக் கூசி, நேர்மைக்குத் துணேயாக நிமிர்ந்து நின்று, வாழ்வதே வாழ்வு. வசையொழிய வாழும் அச் சான்ரேரே வாழ்வார்.

பிறர்?

பிறப்போர்; வளர்வோர்; இருப்போர்; இறப் போர்.

இதை உணர்ந்தோம். ஆகவே வசையொழிய வாழ்வோம். நல்லது. இது போதுமா?

பதில் நீங்களே கண்டுகொள்ளுங்கள்! நான் வழிகாட்டுகிறேன்.

எதிரே மேசை. பக்கத்திலே நூலடுக்கு. அதோ அவ்வண்டியின் பின்பளு. இதோ இவ்வண்டியின் முன்பளு. அதோ வேலியில் செடி. இதோ தோட் டத்தில் பழமரம்.

அவை வசை ஒழிய இருப்பவை. அவையோ நாமும்? அவற்றைப்போல் இருந்தால் போதுமா?

நாம் அவையல்ல. அவற்றைப்போல் இருத் தல் ஆகாது. ஆக்கத் தெரிந்தவர்க்கே பயன் பட்டு, மற்றவர்க்கு உதவாது நின்றுவிடக் கூடாது. இப்படி உங்கள் மனம் 'குசு குசு' வென்று உரைக் கிறதா? ஏன்?

நாம் மக்கள். மக்கள் இயல்பு வேறு. பிற உயிர்கள், பொருள்களின் இயல்பு வேறு.

நம் இயல்பிற்கு எது ஊதியம்? எது நிறைவைத் தரும்? மெய்யான நிறைவைத் தரும்?

> ஈதல், இசைபட வாழ்தல் அதுவல்லது
> ஊதியம் இல்லை உயிர்க்கு.

இது நெடுந்தொலைவிலிருந்து கேட்கிறதா? இது பொய்யாமொழி; பொதுமொழி; எக்காலும் பொய் யாப் பொதுமொழி.

ஏது ஈதல்? சற்று ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

'அம்மா பிச்சை' என்று கேட்டு வந்தார் ஒருவர். ஐந்து காசு கொடுத்தாய்.

'ஐயா! அறநிலையத் திருப்பணி' என்று அறிவித்துக்கொண்டு வந்தார் பெரியவர். பொற்குவை தந்தாய்.

இவை ஈதல் என்று நினைக்கிறாய், அப்படித் தானே!

இவை ஈதலின் தளிர்; ஒரு சிறு பகுதி; முழு உருவம் அல்ல.

நாடி வந்தவர்களுக்குக் கொடுப்பது நல்லதே. அதைவிடச் சிறந்தது தேடிச் சென்று கொடுப்பது.

வறுமை பொருளுக்கு மட்டுமன்று.

அறிவிலும் வறுமைப்படுவதுண்டு. அறிவையும் இரத்தலுண்டு.

விளங்குகிறதா?

மேலும் சிந்திப்போம். நல்லுணர்ச்சிக்கும் வறுமை ஏற்படும், அன்புணர்ச்சிக்கும் வறுமை வரும். ஆகவே அன்புணர்ச்சியையும் ஈயக் கற்றுக் கொள்வோம். அருளுணர்ச்சியையும் ஈயக் கற்றுக் கொள்வோம்.

மேலும் கவனிப்போம்.

நீங்களும் நானும் கொடுக்கக் கூடிய காசுகளை விட, பொற்குவியல்களைவிட விலையுயர்ந்தது அறிவு. நல்லறிவு.

நம் அறிவு குறைவாயிருக்கிறதா? நிரப்பிக் கொள்ள உலகம் அழைக்கிறது. அறிவு எங்கே முளைத்தாலும், வளர்ந்தாலும், அது அகிலர்

முழுமைக்கும் பொதுச் சொத்து. ஆகவே அறிவைப் பெருக்கிக் கொள்வோம்.

நம் அறிவு தீயதாயிருக்கிறதா? அதைத் திருத்திக் கொள்ள உலகம் அழைக்கிறது. மனிதனை மனிதன் குறைவாகக் கருதுவதும், இழிவாக நினைப்பதும், நடத்துவதும் தீய அறிவு. மனிதனை மனிதன் வெறுப்பதும், ஒதுக்குவதும் தீய அறிவு. மனிதனை மனிதன் சமமாக மதிப்பது, நடத்துவது நல்லறிவு. 'சேரவாரீர் செகத்தீரே!' என்று மக்கள் அனைவரையும் இணைத்துக் கொள்வது நல்லறிவு.

அத்தகைய நல்லறிவு உலகிற்குத் தேவைப் படுகிறது.

எவ்வுலகிற்கு?

கிணற்றுத் தவளைக்குக் கிணறே உலகம். குட்டை மீனுக்கு குட்டையே உலகம். குகை மனிதனுக்குக் குகையே உலகம். கற்கால மனிதனுக்குத் தன்னூரே உலகம். பிற்கால மனிதனுக்கு அக்கம்பக்கமே உலகம். வானொலிக் கால மனிதனுக்கு எது உலகம்? இக் கால மனிதனுக்கு எது உலகம்?

விண்வெளிக்கால மனிதனுக்கு எது உலகம்?

நில மண்டலம் முழுமையும்—ஏன் அண்டம் முழுமையும்— அவன் உலகம் அல்லவா?

நம் மூதாதையர் காலத்தில், மாந்தர் அறிவு, நல்லறிவு, தன் ஊருக்கப்பால் விரியவில்லை. பின்னர் அக்கம் பக்கத்திற்குப் பரவிற்று. அறிவு பயன்படும் எல்லை விரிந்து, விரிந்து இன்று உலகை வளைத்துக் கொண்டது. இன்றோ நல்லறிவு ஊர் உலகோடு, நாட்டு உலகோடு தேங்கி நிற்காமல், நில உலகம் முழுமைக்கும் பாய்ந்து ஓடுகிறது. இந்தியாவில் உணவுத்

தட்டுப்பாடு என்றதும், உலகத்தில் எத்தனை நாடுகள் 'இதோ எங்கள் உதவி, எங்கள் உதவி' என்று விரைந்து அளிக்கின்றன.

நாளை, பிற கோள்களுக்கும் செல்ல வாய்ப்பு வளர்கிறது. எவ்வுணர்ச்சியோடு செல்ல? எதற்குச் செல்ல? நல்லுணர்ச்சியோடு செல்ல வாய்ப்புகள் பெருகுகின்றன. அருள் உணர்ச்சியோடு செல்ல வாய்ப்புகள் வளர்கின்றன. கேட்டு வாங்க மட்டுமல்ல, கொடுத்துவிட்டு வரவும், தொண்டு செய்து உதவவும் வாய்ப்புகள் வருகின்றன.

இந்நிலையில்,

காலமறிந்து நடவாதான், கோலமறியாக் குரங்காவான்.

நாம் காலமறிந்து நடப்போமாக. போர்க்காலம் அன்று; இன்றல்ல, நாளையுமல்ல. போர்க்கொடி நம் மூதாதையர் கொடி.

அருட் கொடி நம் கொடி.

வாளும் வேலும் அக் கால மக்களுக்குப் பொருந்தின, வென்றுவர வாளும் வேலும். எதிர்காலத்திற்கு, குண்டும் கணையும் என்று நினைத்து விடாதீர்கள். குண்டும் கணையும் வருங்கால மக்களுக்குப் பொருந்தா. குளிகையும் குழையும் எதிர் காலத் தேவை. உழவுப் பொறியும், தொழிற் பொறியும் எதிர்காலத் தேவை, உடன் பிறந்தோரே! எதிர்கால உலகம் தொண்டு உலகம் என்பதை மறக்க வேண்டாம். அத் தொண்டு உலகம் உங்களையும் என்னையும் அழைக்கிறது. சுரண்ட அழைக்கவில்லை; சுருட்ட அழைக்கவில்லை; தலைகளை உருட்ட அழைக்கவில்லை; வலைகளை வீச அழைக்கவில்லை. நல்லறிவைக் கொடுக்க, நல்லுணர்ச்சியை ஊட்ட, நற்றொண்டைச் செய்ய நானி

லம் அழைக்கிறது. தூங்காதே தம்பி! விழித்துச் சோம்பாதே தங்காய்! சந்தை இரைச்சலிலே மயங்காதீர்! வாரும்! குறிக்கோளோடு வாரீர்! நெறியோடு வாரீர்! தொண்டு செய்ய வாரீர்! தொடர்ந்து தொண்டாற்ற வாரீர்!

# வாழும் முறை

அருமைத் தம்பீ, தங்காய்!

நீங்கள் வாழப் பிறந்தவர்கள். உங்கள் வாழ்க்கை வாழ்வதற்காக.

அதோ தோட்டம். அதிலே இருக்கின்றன மரஞ்செடி கொடிகள். பக்கத்திலே தொழுவம். அதில் கட்டுண்டு கிடக்கின்றன கறவைப் பசுக்கள். அவற்றைப் போல் இருந்து வல்லானுக்குப் பயன் பட்டு, இறக்கப் பிறந்தவன் அல்லன் நீ! உன் நிலை யும் அதுவன்று தங்காய். நீங்கள் அனைவரும் தன் னறிவு பெற்று, ஆற்றலைப் பெருக்கி, பாடுபட்டுத் தேடிப் பகுத்துண்டு, உரிமையோடும் ஒழுங்கோடும் துணிவோடும் வாழப் பிறந்தவர்கள்.

நீ எங்கே பிறந்தாய்? ஓட்டைக் குடிசையிலா? இருக்கட்டும். குனிய வேண்டாம். உள்ளத்தில் குனியவேண்டாம். பிறந்தது பட்டிக்காட்டிலா? பரவாயில்லை. நாடாளுமன்றம் உன்னை ஏற்கும்; உலகப் பாராளுமன்றம் உன்னை ஏற்கும் நாள் வரும்.

படிப்பறியாக் குடும்பத்தில் பிறந்தாயா? போகட்டும். நாணாதே! அறிவுலக அறைகூவலை ஏற்றுக் கொள். ஊழையும் உப்பக்கம் காண்போம் வா!

தங்காய்! உனக்கும் வாய்ப்பு உண்டு. நல்ல நல்ல வாய்ப்பு உண்டு. சமவாய்ப்பு உண்டு. ஆகவே அச்சந்தவிர்; அழுக்காறு அகற்று.

தம்பீ! எங்கே பிறந்தாலும் நீயும் மனிதனாக, தன்மான மனிதனாக, பண்பட்ட மனிதனாக, உரிமை யுள்ள மனிதனாக, பெரும்பொறுப்பு ஏற்கும் மனித னாக வாழலாம். அப்படி வாழ்வது உன் கையிலிருக் கிறது. உன் உறுதியிலிருக்கிறது. உன் முயற்சியி லிருக்கிறது. தங்காய்! உனக்கும் இதுவே விதி.

நல்வாழ்வு வாழ, வகை சில சொல்லுகிறேன் கேள் தம்பீ.

உன்னை நீ நம்பு. வாழ்க்கையின் உயிர் நாடி நம்பிக்கை. உன்னிடம் அறிவு உண்டு; ஆற்றல் உண்டு; மக்கட் பண்பு உண்டு; இவை, உன்னில் நீறுபூத்த நெருப்புப்போல் இருக்கின்றன என்று நம்பு. தன்னம்பிக்கையில்லாதவன் எதையும் செய்ய முடியாது. சிறந்தது எதையும் பெறமுடியாது. ஆகவே ''உள்ளத்தனையது உயர்வு'' என்பதை மறவாமல் நம்பிக்கையோடு பாடுபடு.

எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்! எவர்? திண்ணியர். மனித வாழ்வு, நல்வாழ்வு வாழ வேண்டுமென்று, ஏதோ காற்றுவாக்கிலே பொழுது போக்காக நினைக்காதே. உறுதியாக எண்ணி, ஆழமாக முடிவுசெய்துகொள்.

முடிவு முயற்சியாக வேண்டும். அதுவும் இடையறாத முயற்சியாக வேண்டும். முதன்முதலில் நீ கற்றுக்கொள்ள வேண்டிய பழக்கம் சுறுசுறுப்பு; உலகில் உயர்ந்தது. சிறந்தோர் எவரும் சோம்பிக் கிடந்ததில்லை; தேம்பி நின்றதுமில்லை. ஓயாத உழைப்பால், மெய்மறந்த உழைப்பால், குறிக்கோளை மறவாத—வேளைக்கு வேளை மாற்றாத உழைப்பால், காலாகாலத்தில் கருத்தாய்ச் செய்த முயற்சியால் உயர்வு பெற்றிருக்கிறார்கள். அவையத்து முந்தியிருக்கிறார்கள். உங்களுக்கும் அதே வழி. வேறு வழி இல்லை.

வாழ்வனவற்றுள், சிறியது சிற்றெறும்பு. ஆனால் அதன் சுறுசுறுப்பு எவ்வளவு பெரியது பார்த்தாயா? அதனிடமிருந்து நீ ஏன் பாடங் கற்றுக்கொள்ள கூடாது? நான் கற்றுக்கொள்வதற்கும் காலங்கடக்க வில்லையே!

பகலவனை, உன் விழிப்பிற்காகக் காத்துக் கொண்டிருக்கச் செய்யாதே! நீ அவன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கப் பழகிக்கொள். அதாவது விடியற்காலையில் எழுந்திருக்கக் கற்றுக்கொள். எந்த நாளும் இந்தப் பழக்கத்தைக் கைவிடாதே. இதனால் விளையும் நன்மை அளவிடற்கரியது. இதைக் காலம் காட்டும். பட்டறிந்து சொல்கிறேன் என்பதை மட்டும் இப்போது உணர் தம்பீ!

காலம் பொன்னிலும் மணியிலும் விலையுயர்ந்தது. இழந்த பொன்னை—பொருளை—மீண்டும் பெற்றாலும் பெறலாம், ஆனால் இழந்த காலத்தைத் திரும்பப்பெற முடியாது. இவ்வுண்மையை மறக்காதே. காலத்தை வீணாக்காதே. விளையாட்டு வாழ்க்கைக்குத் தேவை. வெறும் பொழுதுபோக்கோ வீண்.

ஒவ்வொன்றிற்கும் ஒரு பருவம் இருப்பதை இயற்கையில் காண்கிறோம். அப் பருவநிலைக்கு மனிதனும் பெரும்பாலும் கட்டுப்பட்டவனே. கற்பதற்குக் காலவரம்பு இல்லை. என்றாலும் இளம் பருவத்திலே கற்பது எளிது. இப் பருவமே, வேறு பொறுப்புகள், கவலைகள் கௌவாதது. எனவே, உன் இளமைப் பருவமே கற்பதற்குச் சிறந்த காலமாகும். அக்காலத்தில் எவ்வளவு ஆழமாகவும், அகலமாகவும் கற்றுக் கொள்கிறாயோ, அவ்வளவு நன்மை பிற்காலத்திற்கு. எதிர் காலம் எவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறதோ? யார் கூற முடியும்? ஆகவே எத்தனை கலைகள் பற்றி அறிய முடியுமோ, அத்தனை கலைகளை அறிந்துகொள். எவ்வளவு திறமைகளைப் பெறமுடியுமோ, அவ்வளவையும் பெற்றுக்கொள். எதிர்பாராத நேரத்தில், அவற்றுள் ஏதாவது ஒன்று உனக்குக் கைகொடுக்கும்.

தம்பீ! ஆற்றல்களில் சிறந்தது, 'கூடிவாழும்' ஆற்றல். நீ மிகவும் கெட்டிக்காரன். நல்லது. நீ மிக்க திறமைசாலி. மறுக்கவில்லை. ஆயினும் உனக்கு நான்கு பேரோடு சேர்ந்து வாழ, சேர்ந்து பல செயல்களைச் செய்து முடிக்கத் தெரியாவிட்டால் பயன் என்ன? நீ காட்டிலா தனித்து வாழப் போகிறாய்? அப்படி வாழ்பவனாக இருந்தால், ஒருக்கால் உன் அறிவின் உயர்வையும், ஆற்றலின் மிகுதியையும் எண்ணி, இறுமாந்து மற்றவர்களை ஒதுக்கி விட்டு இருக்கலாம். ஆனால், நீயோ நாட்டிலே வாழ்பவன்; நான்குபேர் நடுவிலே வாழ்பவன். ஆகவே உனக்கு, 'கூடிவாழும்' திறமை வேண்டாவா?

உலகம் பலவிதம் என்பது உனக்குத் தெரியாதா? உலகத்திற்குப் போவானேன்? உன்னையே நீ எண்ணிப் பாரேன். காலவோட்டத்தால் உன் உருவிலே மாற்றம். அதோடு உன் கருத்திலேயே, எத்தனை வளர்ச்சிகளை—எத்தனை மாறுதல்களைக் காண்கிறாய். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குமுன், நீ பாலகனாய் இருந்தபடி இன்று நீ இல்லையே, அதற்காக உன்னோடு நீ கோபித்துக்கொள்ள முடியுமா? அம் மாற்றத்தின் காரணமாக உன்னை நீ அலட்சியப்படுத்தலாமா? உன்னை நீ இழிவாகக் கருதுவதா? இதைப் போலத்தானே உன்னைச் சுற்றி வாழும் மக்கள் நிலையும். அவர்கள் கருத்தால், கொள்கையால், பழக்க வழக்கங்களால் உன்னிலும் வேறுபட்டிருக்கலாம்; அவர்கள் மாறுபட்ட பல்வேறு தோற்றங்களைப் பெற்றிருக்கலாம். அதற்காக அவர்களை அலட்சியப்படுத்தலாமா? அவர்களிடமிருந்து ஒதுங்கி ஓடலாமா? மற்றவர்களோடு சேர்ந்துவாழ விரும்பாவிட்டால் உன் வாழ்வின் வேர் குறுகிப்போகுமே. அப்போது, உன் வாழ்வு, எப்படி அகன்று உயர்ந்து வளரும்? வாழ்வின் வெற்றிக்குப் பரந்த தொடர்பு

—நாலாப் பக்கங்களிலும் நல்லெண்ணம் தேவை. இவற்றைப் பெறும் வழியென்ன?

அடக்கம், பணிவு, அன்புடைமை, இன்சொல் ஆகியவற்றின்மூலம் தொடர்புகளையும் நல்லெண் ணத்தையும் வளர்க்கலாம். இதை உணர்ந்து, மனிதரை மனிதராகக் கருதிப் பழக, கூடிவாழ முயல்வாயாக, விடாது முயல்வாயாக. 'எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் ஓர் விலை' என்ற பாரதியின் கனவு, உன் மூச்சாகும்வரை, தளராது முயல் வாயாக.

சுறுசுறுப்பால், காலங் கருதிச் செய்யும் முயற் சியால், கூடிவாழும் திறமையால், உனக்கு அறிவு, ஆற்றல், துணைவலி ஆகியவை பெருகும். வெற்றி வளரும். இவற்றால் மட்டும் நீ முழு மனிதனாக வாழ்ந்திட முடியாது.

மனிதனாக வாழ பட்டம், பதவி, அதிகாரம் மட்டும் போதா; மனிதத் தன்மை, மக்கட் பண்பு தேவை. அரம் போலும் கூர்மையரேனும், மரம் போல்வர் மக்கட் பண்பு இல்லாதார் என்பது பொய்யாமொழியன்றோ? மக்கட் பண்பு என்பது என்ன? அதை எப்படி அடையலாம்?

மனம் உடையவன் மனிதன். மனம் உறுதி யுடையது மட்டுமன்று; ஆழமுடையது மட்டுமன்று; ஈரமுடையது; உருகும் தன்மை உடையது; இரங் கும் இயல்புடையது; துன்பத்தைக் கண்டு துடிக்கக் கூடியது; அன்பைப் பொழியக் கூடியது; அருளை வழங்கக் கூடியது. பிறிதினைத் தன்னைப்போல் நோக்கக்கூடியது. இத் தன்மைகளைச் சரியானபடி வளர்ப்பாயாக. அப்போது முழு மனிதனாவாய்.

இத் தன்மைகளின் இயல்பான விளைவென்ன? பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் மனதின் சிறந்த

கனியாகும். பண்பட்ட கனியாகும். அதுவே மக்கட் பண்பாகும். அப் பண்பைப் பெறும்போது, நீ முழுதும் கனிந்த மனிதனாவாய். சிறந்த மனிதனாவாய்; வையத்துள் வாழ்வாங்கு வாழும் மனிதனாவாய். அந் நன்னிலையை அடைய விடாது முயல்வாயாக.

தம்பீ! நீ பெற்றபேறு உனக்காக—அல்லது—உன் உற்றார் உறவினருக்காக மட்டும், எப்படியும் காப்பாற்றப்பட வேண்டியது என்று கருதாதே. நாடெல்லாம் வாழக் கேடொன்றுமில்லை. இது மயக்குச் சொல் அன்று, தெளிவுரை. மெய்யான தெளிவுரை. எனவே, உன் அறிவை, ஆற்றலை, பண்பை மற்றவர்களோடு பகிர்ந்து மகிழ ஆயத்தப் படுத்திக்கொள். வளர்க, நீ முத்துறையிலும். வாழ்க, நீ வாழ்வாங்கு.

# நோக்கும் போக்கும்

என்னருமைத் தம்பீ, தங்காய்!

நீங்களும் நானும் பிறந்தபோது இருந்த நிலை என்ன? இன்று இருக்கும் நிலை என்ன? முதலில் உடல் நிலையை—பருவ நிலையைக் கவனிப்போம்.

பிறந்தபோது ஆறு பவுண்டு, ஏழு பவுண்டு அல்லது எட்டு பவுண்டு எடையுள்ள குழந்தையாக இருந்தோம். இன்று அதே எடையில் யாராவது இருக்கிறோமா? இல்லை. யாருமே இல்லை. எல்லோருமே பலமடங்கு பளுவாகி விட்டோம். ஆறு பவுண்டு குழந்தை, பதினாறுபவுண்டு குழந்தையாகி, இருபத்தாறு பவுண்டு குழந்தையுமாகி அறுபது பவுண்டு சிறுவனாகி, நூற்றறுபது பவுண்டு காளையாவது இயற்கை. அதுவே முறை. அதுவே எதிர் பார்க்க வேண்டியது. இம் மாற்றம்—வளர்ச்சி உயர்வு—நல்லது; தேவையானது; உயிர்ப்பின் அறிகுறி.

பிறந்தபோது இருந்த உயரம் வேறு. சிறுவனாக இருந்த உயரம் வேறு. இளைஞனாக இருந்த உயரம் வேறு. மனிதனாக இருக்கப் போகும் உயரம் வேறு. இம் மாற்றம்—வளர்ச்சி—உயர்வு—தவறா? கெடுதலா? தேவையற்றதா? நோயின் அறிகுறியா? அஞ்சவேண்டியதா? வெறுக்கவேண்டியதா?

பச்சைக் குழந்தையாக இருந்தபோது பல்லெல்லாம் போன தள்ளாத பாட்டிகூடத் தூக்கவும் ஆட்டவும்கூடிய அளவு இலேசாக இருந்தானே; இன்று, பெற்றெடுத்த என்னாலேயே தூக்க முடியவில்லையே? இப்படியா பருத்துப் போவது என்று எந்தத் தாயாவது ஏங்குவது உண்டா? தந்தைதான் ஏங்குவதுண்டா?

தாயும் தந்தையும் அவாவுவது என்ன? குழந்தை குழந்தையாகவே இருக்கவல்ல. குழந்தை குமரனாக

வேண்டும். காளை தலைவனாக வேண்டும் என்று பெற்றோரோ வேறு நல்லோரோ விரும்புவது தவறா? கோளாறா? அதர்மமா?

அரை மீட்டர் துணியில் ஒரு சொக்காய் தைத்துப் போட்டுவிட்டேன் அன்று. இன்றோ கால்சட்டை, மேல்சட்டை தேவையாகிறது. இரண்டிற்கும் சேர்த்து ஆறு மீட்டர் தேவை! 'எங்கே போவது இவ்வளவு துணிக்கு? ஏனோ வளர்ந்தான் இப் பாவிமகன்?' என்று அங்கலாய்க்கிற அன்னையைக் கண்டதுண்டோ? அப்பனையாவது கண்டதுண்டோ தம்பி!

'அரை மூடியோடு அலைந்து கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். சேலை, ரவிக்கை தேடும் நிலைக்கா மளமளவென்று வளர்ந்து விடுவது' என்று பல்லுதிர்ந்த பாட்டிகூடச் சலித்துக் கொள்வதில்லை. ஏன்?

எடை கூடுதலும், உயர வளர்ச்சியும் இயற்கை; தேவை; உயிர்ப்பு என்பது பாட்டிக்குத் தெரியும். தாத்தாவிற்குத் தெரியும். அம்மைக்குத் தெரியும். அப்பனுக்குத் தெரியும். அனைவருக்கும் தெரியும். எடை கூடுதல் தமக்குச் சுமை என்பதும் தெரியும். உயர்ந்து வளருதல் அதிகச் செலவு என்பதும் தெரியும். சுமைக்கு அஞ்சி, செலவிற்கு அஞ்சி, பிறந்த குழந்தை பிறந்த எடையோடு, பிறந்த அளவோடு தேங்க வேண்டுமென்று கருதுவதில்லை; உபதேசஞ் செய்வதில்லை. தேங்கச் செயல்புரிவதில்லை.

வளர்ச்சி, பருத்தல் நோக்காக அமைகிறது; முறையான நோக்காக அமைகிறது; என்ன விலை கொடுத்தும் பெறவேண்டிய நன்னோக்காக அமைகிறது.

'தன் பிள்ளை வளரவேண்டும். பருக்க வேண்டும்' என்று தாயோ தந்தையோ நினைப்பது தவறன்று; 'பிற பிள்ளைகளெல்லாம் வளராமல், பிறந்த நிலையில் இருந்தால் மட்டுமே என் பிள்ளை யின் தொடர் வளர்ச்சிக்குத் தடையேதும் வராது. அவன் முழு வளர்ச்சிக்கு வேண்டியனவெல்லாம் குறைவறக் கிடைக்கும். ஆகவே மற்றவர்கள் பிறந்த நிலையிலேயே நிலைத்துவிடவேண்டும்' என்று நினைப்பதோ தவறு; தீயது; கொடியது; வெறுத்து ஒதுக்க வேண்டியது.

'வாழில் முப்பது கோடி முழுமையும் வாழ் வோம்' என்பது கவிஞனின் பிதற்றல் அன்று; கற்பனையன்று; கனவுமன்று. விரைந்து சிக்கெனப் பிடித்துக் கொள்ள வேண்டிய வாழ்க்கை நெறி. காலத்திற்கு ஏற்ப இந் நெறியைத் திருத்த வேண்டாவா தம்பீ! நல்லது, திருத்திக் கொள்வோம். 'வாழில் ஐம்பது கோடி முழுமையும் வாழ்வோம்' என்று திருத்துவோமா? 'வாழில் இருநூறு கோடி முழுமையும் வாழ்வோம்' என்று திருத்துவோமா?

பெற்ருேர் நோக்கு, பிள்ளைகளின் வளர்ச்சி; குடிகள் நோக்கு எதுவாக வேண்டும்? நாட்டின் வளர்ச்சியாக வேண்டும்.

தான்தான் கல்வி; தான்தான் இலக்கியம்; தான் தான் தராசு என்பது அகந்தை. அத்தகைய அகந்தையாளரை நாளும் காண்கிருேம். அந்த அகந்தை உன்னையும் என்னையும் பற்ருதிருப்பதாக; தம்பீ, நான்தான் நாடு. என் வளர்ச்சியும் என் மக்கள் வளர்ச்சியுமே நாட்டின் வளர்ச்சி என்கிற முனைப்பு உனக்கும் எனக்கும் ஏற்படக்கூடாது தங்காய். நாடு என்பது நாலுபேரோடு அடங்கி விடுவதன்று. நான்கு குடும்பங்களோடு குன்றிவிடு வதன்று. நூறு வீடுகளோடு நின்று விடுமதுமன்று.

கோடிகோடி மக்களைக் கொண்டது. நம் நாடோ ஐம்பது கோடி பேரை—மன்னிக்கவும், மணித் துளிக்கு மணித்துளி மேலும் வளரும் எண்ணிக் கையினரைக் கொண்டது. அத்தனை பேரும் வளர்ந் தால் மட்டுமே நாடு வளர்ந்ததாகப் பொருள்.

உன்னுடன் பிறந்த ஐவருள் மூத்த அண்ணன் மட்டும் வளர்ந்துவிட்டு, மற்றவரெல்லாம்—நீயும் சேர்ந்து—தேய்ந்து விட்டால் உன் குடும்பம் வளமாக வளர்ந்துள்ள குடும்பம் என்று பெருமை கொள்ள முடியுமா? அடுத்த வீட்டு ஐவருள், அனை வரும் உன் அண்ணன் அளவு இல்லாவிட்டாலும், பெரிதும் வளர்ந்து பருத்து விட்டனர் என்று வைத்துக் கொள்ளுவோம். அப்போது எந்த வீட்டுக்குச் சிறப்பு? உன் வீட்டிற்கா, அடுத்த வீட்டிற்கா? சிந்தித்துப் பாருங்கள் இளைஞர்களே! அஞ்சாது சிந்தித்துப் பாருங்கள் மங்கா மணிகளே! அண்ணன் எவ்வளவு அறிவாளியானாலும், வல்ல வனானாலும், நல்லவனானாலும்—செழுங்கிளை தாங்கு பவனானாலும் அவன் ஒருவனை மட்டும் வளர்ப்பதற் காக வீட்டிலுள்ள மற்றத் தம்பி தங்கையர் ஐவரை யும் தேயவிடுவது, தேங்க விடுவது, தியாகஞ்செய்து விடுவது துரோகமல்லவா? அறிவறிந்த ஆண்மை யாளன் அதற்கு உடன்படுவானா? அறிவறிந்த பெண்மைதான் அதற்கு தலையாட்டுமா?

இங்கும் அங்கும் இழுத்துப் பிடித்து, இதிலும் அதிலும் மிச்சப்படுத்தி, இதையும் அதையும் அதிக மாக்கி பெற்றெடுத்த அனைவரையும் கிட்டத்தட்ட ஓரளவு வளர்த்தல் பெற்றோரின் கடமை. அதுவே அவர்கள் நோக்கு. தம் அளவே தம் மக்களை வளர்த்தல், அவர்கள் நோக்கமாகவே இருக்கிறதா? இருக்கலாமா?

நாலேகால் அடி தாய், 'தன்மகனும், மகனுக்கு மகனும், வாழையடி வாழையாக நாலேகால் அடி

மரபை—தொன்மையின் பெயராலே—பண்பாட்டின் மயக்காலே—காத்துவர வேண்டும். அதற்கு மேல் வளரக்கூடாது என்று எண்ணுவதில்லை. ஐந்தடி வளர்ந்த மகனைக் கண்டு பூரிப்பாள், அது மட்டுமா? ஆறடி ஆண்மகன் ஆவான் என்று எதிர்பார்ப்பாள். ஆக வேண்டும் என்று விரும்புவாள்; உதவுவாள்; யார் வீட்டிற்கோ செல்லப் போகிற தன் மகள் கூடத் தன்னிலும் உயர்ந்து வளர்வதையே எந்தத் தாயும் விரும்புவாள். தன்னிலும் உயர்ந்து, சிறந்து தன் மக்கள் விளங்குவதைக் கண்டு மகிழ்வதே மக்கள் இயல்பு.

உடல் வளர்ச்சியில் மட்டுமா தன்னிலும் தன் மக்கள் உயர்ந்திருப்பதை விரும்புகிறார்கள் பெற்றோர்? ''தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்தில் மன்னுயிர்க் கெல்லாம் இனிது.'' இக்குறள் காலத்தால் கறைபடாதது.

அறிவிலும், தம்மிலும் தம்மக்கள் உயர்ந்திருப்பதையல்லவா விரும்புகின்றனர் பெற்றோர்? அதற்காக எத்தனை தன்னலன்களைத் துறக்கின்றனர் பெற்றோர்? நீண்ட நெடுங்காலம் தங்கள் வாயைக் கட்டி, வயிற்றைக்கட்டி பிள்ளைகளை அவையத்து முந்தியிருக்கச் செய்யும் பெற்றோர்களைக் கண்டதில்லையா உடன் பிறந்தோரே!

வளர்ச்சி நோக்கு, தியாகத்தை கேட்பது. தொடர்ந்த தியாகத்தைக்கூடக் கேட்பது. தியாகம் செய்வதற்கு அஞ்சித் தேய்வு நோக்கை ஏற்கும் பெற்றோர் இல்லை. ஐந்து பேரை அழித்து ஒருவரை வளர்க்கும் பெற்றோர்—பெற்றோர் அல்லர்! அனைவரையும் வளர்ப்பவரே பெற்றோர். அனைவரையும் வளர்க்கும் நோக்கே பெற்றோர் நோக்கு. அதுவே

நன்நோக்கு; இயற்கை நோக்கு; சீரிய முறை; நல்லறம்; உயர்வு உள்ளல்.

இதை, உயர்வு உள்ளலை—நீங்களும் நானும் நம்வரையில், நம் குடும்பங்கள் வரையில், மேற் கொண்டால் போதுமா? நாட்டைப் பொறுத்தும், நமக்கு வளர்ச்சி நோக்கு, உயர்வு நோக்கு ஏற்பட வேண்டாவா? வளர்ச்சி நோக்கு வந்தால், நம் துய்ப் புக்களைக் கட்டுப்படுத்த வேண்டி வருமே என்று அஞ்சி மற்றவர்கள் எப்படியோ நாசமாகப் போகட் டும் என்ற சலிப்பு நோக்கை ஏற்கலாமா? ஒருவருக் காகப் பலரைப் பலியிடும் கசாப்புக்கடைப் போக்கை ஏற்கலாமா?

இந்தியாவைப் பெற்றேம். வரலாற்றில் முன்னர் காணுத அளவு இணைந்த இந்தியாவைப் பெற்றேம். உரிமை பெற்ற இந்தியாவைப் பெற்றேம். குடியாட்சி இந்தியாவைப் பெற்றேம். பிறப்புபற்றியன்றி,தகுதி பற்றி, யாரும் எந்நிலைக்கும் உயர்வதற்கு வாய்ப்பளிக்கும் சம உரிமை இந்தியா வைப் பெற்றேம். அந்த இந்தியா, பிறந்த மேனியாக இருக்க விரும்புவதா? தொன்மையைக் காட்டி அதன் தன்மையைத் தேய்க்கலாமா? தன்னலத்திற்கு— தன் சுகபோகங்களுக்கு வரம்புகட்டப்படுமோ என்று அஞ்சி, அதன் வளர்ச்சிக்குத் தடையாகலாமா? நாட்டை வளர்ப்போமென்று நமக்கு வேண்டிய நாலுபேர்களை மட்டும் வளர்த்துக் கொள்ளச் சொற் சிலம்பம் ஆடலாமா?

பெற்றேரைப் போல, சம உரிமைக் குடியாட்சி இந்தியாவைப் பெற்ற நாமும், இந்தியா முழுவதும் வளர, இந்தியர் அனைவரும் வளர எண்ணவேண் டாவா? நன்ருக வாழ்வோம், ஒன்ருக வாழ்வோம் வாரீர்.

நாட்டு வளர்ச்சி நோக்கை, நாட்டிலுள்ளோர் அனைவரும் உயர வேண்டும் என்ற உயர்வு உள்ளலே, சிக்கெனப் பிடித்துக் கொள்வோம். அந் நோக்குக்கு ஏற்ப நம் போக்கை திருத்திக் கொள்வோம் இளைஞர்களே!

# புதிய போக்குத் தேவை

என்னருமைத் தம்பீ, தங்காய்!

எல்லோரும் வாழ்வோம், நன்றாக வாழ்வோம், ஒன்றாக வாழ்வோம் என்ற பெருநோக்கு வந்து விட்டதா? மகிழ்ச்சி, எழுச்சி படையினரே; அந் நோக்கிலே ஊன்றி நில்லுங்கள்; கணப் பொழுதும் தளராது நில்லுங்கள்.

நோக்கிலே சமதை வந்தபின் போக்கிலும் சமதை வேண்டும். எல்லோரையும் சமமாக மதி. அம்பலத்திலும் சமமாக மதி, அறையிலும் சமமாக மதி. சமமாக மதிப்பதுபோல் நடிக்காதே. அந் நோய் பெரியவர்களோடு நின்று விடட்டும்; நீயும் நானும் உண்மையாகவே எல்லோரையும் மனிதர் களாக மதிக்கக் கற்றுக் கொள்வோம். உனக்கும் எனக்கும் பட்டம் இருக்கலாம். ஆனால் அது இல்லா தவர்களை இழிவாகக் கருதக் கூடாது. அறிவு என்பது பட்டத்திலே இல்லை தம்பீ! பட்டம் ஏதுமில்லா வள்ளுவன் முன்னே, நீயும் நானும் எம்மாத்திரம்! நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தைத் தந்த இளங் கோவிற்காவது படிப்புச்சீட்டு உண்டா? அவன் அருகே நிற்க நம்மிலே எத்தனை பேர் அருகதை உடையவர்கள்? ஆகவே படிப்பு அகந்தையிலே வீழ்ந்து விடாதீர்கள். பிறப்பு அகந்தையும் ஆகாது ஐயா, ஆகாது. இந்தச் சாதி, அந்தச் சாதி என்கிற பேச்சையும் விடுங்கள். இந்தியச் சாதி என்ற போக்கை மேற்கொள்ளுங்கள். நான் என்னும் அகந்தைப் போக்கை விட்டுவிட்டு நாம் என்னும் சமத்துவப் போக்கை வளர்த்துக் கொண்டால், சிலர் மட்டுமல்ல, பலரும் பக்கத் துணையாவார். அது பாதி வெற்றி கிட்டியது போலாகும்.

பெருநோக்கிற்கேற்பப் பெருந்தன்மையும் தேடிக்கொள்ள முடிவு செய்து கொண்டீர்களா

உடன் பிறந்தோரே! நல்லது. அடுத்துத் தேட வேண்டியதைக் கூறுகிறேன் கேளுங்கள் மணிகளே!

தாயின் தியாகமே நம் உருவாகும். பத்து மாதம் சுமக்கத் தாய் உடன்படவில்லை என்றால், நீயும் நானும் ஏது? பெற்ற தாயும் 'இதுவரை பட்டது போதும். இனியும் படமுடியாது துயரம். நான் காக்கமாட்டேன் பத்தியம். அவன் விட்ட வழியாகட்டும்' என்று கைவிட்டிருந்தால் நம்மில் எத்தனைபேர், சிசு மரணத்தைத் தப்பி இந்த நிலைக்கு வந்திருப்போம்? தாயின் பாடும், சுமையும் தியாகமுமே நம்மையெல்லாம் ஆளாக்கிவிட்டது தம்பீ! உன் நிலையும் அதுவே தங்காய்!

இது நமக்கு வழிகாட்டட்டும். வரும் இளைய பாரதத்திற்கு நாம் தாயாக இருக்கவேண்டும். நல்ல பாரதத்தை உருவாக்கும் பொறுப்பை நாமே சுமக்க வேண்டும். யாரோ சுமப்பார்கள் என்று ஏமாந்து விடாதே. யாரோ சுமந்து பெற்றால், யாருக்கோ சொந்தமாகிவிடும். வறுமையற்ற பாரதத்தை, வளமிக்க பாரதத்தை வளமாக்க இத் தலைமுறையே தாயாகிப் பத்தியங் காக்கவேண்டும். கடும் பத்தியமும் காக்கவேண்டும் சிலவேளை. சுமையையும், பொறுப்பையும் தாங்கும் போக்கு வளரட்டும் நம்மிடையே. எத்தனை நேர்ந்தாலும் அத்தனைக்கும் ஊடே அடிவயிற்றிலே வைத்துப் பத்திரமாகப் பொறுப்பைக் காக்கும் போக்கைத் தேடிக்கொள்வோம் ஒளிபடைத்த கண்ணினோரே!

சுமந்து பெற்று, பத்தியங் காத்து, பாலனாக்கி விட்டதும் தீர்ந்து விடவில்லை தாயின் கடமை. மேலும் தொடர்கிறது அவரது பொறுப்பு. பெற்ற பிள்ளை வாலிபனாகி, காளையாகி, தன்காலில் தான் நின்று, தன்னையும் செழுங்கிளையையும் தாங்கும் நிலையை அடையும்வரை, தாயின் பொறுப்ப விலகுவ

தில்லை. தாயும் சளைப்பதில்லை. தன் சொந்த நலன்களையெல்லாம் குறைத்துக் கொண்டு, பலமுறை தன் வாயையும் வயிற்றையும் கட்டி, பிள்ளைகளை ஊட்டி வளர்ப்பது தாய். புதிய பாரதத்திற்குத் தாயாகத் தொண்டாற்ற வேண்டிய நாம், நம் சொந்த நலன்களைச் சிறிது சிறிதாகக் குறைத்துக் கொள்ள வேண்டும். இதிலும் அதிலும் செய்யும் செலவை, மெள்ள மெள்ளவாவது குறைத்துக் கொள்ள வேண்டும். ஒரு சமுதாயம் எந்த அளவிற்குத் தியாகஞ் செய்ய, சிக்கனப்படுத்த முன்வருகிறதோ அந்த அளவிற்கே, அச் சமுதாயத்தின் அடுத்த தலைமுறை முன்னேறும். தம் சுகத்தை விட்டுக் கொடுத்து மிச்சப்படுத்திய தாய், மிச்சப்படுத்தியதை என்ன செய்கிறார்? பதுக்கி வைப்பதில்லை, பிள்ளைகளின் வளர்ப்பிற்குச் செலவிடுகிறார். அவற்றின் தேவைகளுக்குச் செலவிடுகிறார். அதே போல் நீங்களும் நானும், நம் செலவுகளை, தள்ளிப்போட முடிந்த அளவு தள்ளிப்போட்டு, அப்படி மிச்சப்படுத்திய பொருளை, நாட்டின் வளர்ச்சிக்காகச் செலவிட வேண்டும். நம் குடும்பங்களைப் பலியிட்டு, நாட்டை வளர்க்கும் அளவிற்குத் தியாகிகளாகா விட்டாலும், நாட்டையும் வளர்த்து அதோடு நாமும் வளரும் அளவிற்காவது நாட்டுப் பற்றுடையவர்களாக வேண்டும். அறிவுத் தெளிவுடையவர்களாக வேண்டும்.

இக் குழந்தை பையனாகி, எனக்கு எவ்வளவு உதவுவான்? இக் குழந்தை பெண்ணாகி என்னைப் பேணுமா என்று உங்கள் தாயும் என் தாயும் எண்ணினார்களா? இலாபக் கணக்கை எண்ணியிருந்தால் நாம் ஏது? இந்தச் சிந்தனை ஏது? இதைப் படிப்பது எங்கே? தாயின் கடமை உணர்ச்சி, இரத்தப் பாசம், சுமையைத் தாங்க, பத்தியம் காக்க, உணவைக் குறைக்க, அதே உடையைக்

கசக்கிக் கட்டிக்கொள்ள ஊக்கின. நம் கடமை யுணர்ச்சியும் இந்தியப் பற்றும் புதிய பாரதத்தை வளர்க்கும் சுமையை ஏற்க, அதற்காகப் பத்தியம் இருக்க, தேவைகளைக் குறைக்க ஊக்குவதாக. கால்சட்டைகளையும் கைச்சட்டைகளையும் மேலும் மேலும் நாமே அடுக்கிக்கொண்டு போகும் போக்குப் போவதாக. 'பேஷனுக்காக' புதுப்புது உடை மாற்றப்பித்து ஒழிவதாக, நகைப்பித்தும் குறைவதாக.

ஒப்பிலாத பாரத சமுதாயத்தை—எல்லோருக்கும் நல்வாழ்வளிக்கும் பாரத சமுதாயத்தை—மெலிந்தவர்களை வலியவர்கள் காக்கும் பாரத சமுதாயத்தை—வலிவும் வளமும் நிறைந்த சுதந்திர பாரத சமுதாயத்தை வளர்க்க, உயர்ந்த நோக்கோடு, ஏற்ற போக்கோடு, உள்ள உறுதியோடு, கடமை உணர்வோடு, தியாக சிந்தையோடு, நாட்டுப் பற்றோடு பாடுபட விழிமின், எழுமின், உழைமின்.

# தியாகம் செய்வோம்

என்னருமைத் தம்பீ, தங்காய்!

'வாழில் அனைவரும் வாழ்வோம்; வீழில் அனைவரும் வீழ்வோம்' என்ற சமதை நோக்கு உள்ளத்தில் ஊன்றிவிட்டதைப் பற்றி மகிழ்ச்சி. மனிதர்களை மனிதர்களாகவே மதிப்பதென்று முடிவு செய்வதை வரவேற்கிறேன்.

நம் சமதை நோக்கு, வெறும் இலட்சியமாக நின்றுவிடக்கூடாது. என்றோ ஒரு நாள் யாரோ ஒருவர் எப்படியோ சமநிலையை உருவாக்கிவிடுவார். நாம் அதை 'உள்ளத்தால் உள்ளலே போதும்!' என்று உட்கார்ந்துவிடக்கூடாது. அந்நிலையை நாமே உருவாக்க வேண்டும். நம் உழைப்பால் உருவாக்க வேண்டும். விரைவில் உருவாக்க வேண்டும். இல்லையேல், ஆறின கஞ்சி பழங்கஞ்சியாக மாறிவிடும். சமதை என்பது பொருளற்ற, உயிரற்ற பகட்டுச் சொல்லாக ஊசிப்போகும். அந்த நிலைக்கு விடக்கூடாது.

உடன் பிறந்தோரே! சமதை, நாட்டின் மூச்சாக, வாழ்க்கை முறையாக விரைவில் வர வேண்டும். அதற்கு ஆவனசெய்ய, அவர் வரட்டும் இவர் வரட்டும் என்று காத்துக் கொண்டிருக்காதீர்கள். நாம் ஒவ்வொருவரும் சமதையை வளர்க்க வரிந்துகட்டி நிற்போமாக. சொல்லெல்லாம் அதற்கே சொல்வோம். தொண்டெல்லாம் அதற்கே காணிக்கையாக்குவோம்.

ஆதிக்கம் புரிவோர், சமதையென்றதும் துடிதுடிப்பர், சூழ்ச்சிகள் பல செய்வர். இதுவே அவர்கள் கை முதல்; அவர்கள் முன்னோர் சொத்து. ஆதிக்கவாதிகள் தாமே சமதைவாதிகளாக மாறிவிடுவார்கள் என்று கனவு கண்டு ஏமாறவேண்டாம். உயரத்திலே இருக்கிற மாங்காய் தானாகி நிலத்தில்

விழாது. மரத்தையும் சூழ்நிலையையும் கட்டிக் காத்து வந்தால் அக் காய் கனியாகிவிடும். நன்ருகக் கனிந்ததும் யாரும் ஏறிப் பறிக்காவிட்டாலும், தானே கீழே விழுந்துவிடும் அம் மாங்கனி.

சமுதாயத்தையும் பக்குவப் படுத்திவிட்டால், சமதைக்குப் பக்குவப் படுத்திவிட்டால், உச்சியிலே காத்திருக்கும் ஆதிக்கவாதிகளும் தாமே கனிந்து கீழே விழுந்துவிடுவார்கள்.

சமதையிலே நம்பிக்கையுடையோர் பணி என்ன? சமுதாயத்தை அதற்குப் பக்குவப்படுத்துதல். நம் சமுதாயத்தைப் பிளவுபட்ட சமுதாயத்தை, மேடையிலேயே 'எல்லோரும் ஓர் குலம்' என்று கூறிவிட்டு, வீட்டிலே 'என் குலம்' என்று பிரித்துப் பேசும், நடிப்புப் போக்கிலே நலியும் நாம் சமுதாயத்தைச் சொல்லால், செயலால் பக்குவப் படுத்த முனேவோமாக. எறும்பூரக் கல்லும் தேயும். இளைஞர்களாகிய எறும்புகள் ஊர, சமுதாயக் கல்லும் தேயும். பேச்செல்லாம் சமதைக்காகப் பேசுவோமாக. எழுதுவதெல்லாம் சமதைக்காக எழுதுவோமாக. தொண்டெல்லாம் இவரையும் அவரையும் உயர்த்துவதில் வீணுக்காமல் நாட்டை உயர்த்தப் பயன்படுவதாக.

இன்றைய நிலை என்ன தம்பீ! 'தொண்டை நாட்டவரே வாரீர்' என்ருல், சான்ருேரே வருக என்று வாழ்த்துவர்.

'பல்லவ நாட்டாரே!' என்று அழைத்தால் நம் பல்லக்குத் தூக்கப் பலரும், படைபடையாகத் திரண்டோடி வருவர். அம் மனிதர்கள் தோளிலே நீங்களும் நானும் மமதையோடு பவனி வரலாம். 'பாண்டி நாட்டவரே வாரீர்' என்ருல் பழங்காலச் சிந்தனையோடு முடங்கிவிட்ட பலரும் பணத்தோடு

வருவர் பாராட்ட. 'சோழநாட்டுச் சோதரரே' என்றதும், சோழி அணிய சிலருக்கே உரிமையுண்டு என்ற காட்டுக்கால நினைப்பிற்கு மேலே வளராத சோழ நாட்டார் பலரும் கூடிப் போற்றிப் புகழ்க் கனையோடும், கலையோடும் முன்வந்து நிற்பர்.

'மக்களினத்தோரே வாரீர்! தொண்டு செய்ய வாரீர்! சாதிச் சேறு போக்க வாரீர்! சமய வெறிக் காய்ச்சல் தணிக்க வாரீர்! மொழி வலிப்பை நிறுத்த வாரீர்! வறுமை அகற்ற வாரீர்! வளம் பெருக்க வாரீர்! பகுத்துண்ண வாரீர்! சேர்ந்து வாழ வாரீர்! ஓர் நிலையாக வாழ வாரீர்!' என்று குரல் கொடுத் தால் பதில்குரல் கொடுக்க ஆள் இராது. இன்றைய நிலை இது! ஆம். இன்றைய நிலை இதுவே. இருந்தால் என்ன? பல்லக்குப் பவனிக்காக, புகழுரைகளுக்காக, பண முடிப்பிற்காக உன்னை விற்காதே தம்பீ! நீயும் உன்னை விற்காதே தங்காய்! மானிடத்தை விற்க மாட்டேன், உடன் பிறந்தோரே!

மறைந்து போனதைத் தோண்டி எடுத்து வைத்து அடுக்காக அளந்தால் மெய்மறந்து கேட்பர். கருத்திழந்து உருகுவர். மாறுகப் பெறவேண்டிய நிலையை, அதற்காகக் கொள்ள வேண்டிய நிலையை, அதற்காகக் கொள்ள வேண்டிய கருத்தைக் காட்டி ஞல், கல்லடி, சொல்லடி கிடைக்கும். அதற்காக அஞ்ச வேண்டாம். பதுங்க வேண்டாம். ஒதுங்க வேண்டாம்.

முன்னேடி பெறுவது குட்டும், திட்டும். மெய் யான விரைவான முன்னேடி பெறுவது ஆணியால் அடிப்பபடுவது, குண்டடிபடுவது.

மோகன தாசர், தம் சொந்தப் பிழைப்பைத் துறக்கத் துணியாதிருந்தால், தேசத் தந்தையாகி இருப்பாரா? தம் சொந்த சுகபோகங்களையெல்லாம்

தூக்கி எறிந்து விட்டு, தரித்திர நாராயணர்களின் தொல்லைகளையெல்லாம் தம்முடைய சுமையாக ஏற்றுக் கொள்ளாதிருந்தால், மகாத்மாவாகியிருப்பாரா? பாரதத்தை விடுவித்திருப்பாரா?

காந்தியடிகளின் தியாகம், பல்லாயிரக்கணக்கானவர்களின் தியாகத்தைக் காட்டுத்தீ போல் வளர்த்தது. அவரது எளிமை செல்வரின் செருக்கை உறையிட்டு வைத்திருந்தது. அச் செருக்கு அழிவை எருவாக்கி ஓர் நிறை இந்தியனை உருவாக்குவதற்கு முன்னே குண்டுக்கு இரையாக்கிவிட்டோம்.

நாமும் காந்தியடிகளைப் போன்று பெரும் பெரும் தியாகங்களைச் செய்ய முடியாவிட்டாலும் நேருவைப் போன்று இலட்சியத்திற்காகச் சிறை வாழ்வை நிறை வாழ்வாகப் பலமுறை ஏற்கத் துணியாவிட்டாலும், குமரனைப் போன்று உயிரைக் கொடுத்து இலட்சியக் கொடியைக் காக்காவிட்டாலும், அணில்களாக இருந்து நிலைக்கேற்ப சமதைத் தொண்டு புரிவோம் வாரீர் மானிட மலர்களே!

# பாரதம் வளர்க

என்னருமைத் தம்பீ, தங்காய்!

இன்று சுதந்திர நாள். நாடெங்கும் விழா. ஊர்தோறும் கொண்டாட்டம். மனம்தோறும் மகிழ்ச்சி பொங்க வேண்டும். எதற்காக மகிழ்ச்சி?

உரிமை பெற்றதற்காக மகிழ்ச்சி. தன்னுட்சி உரிமை பெற்றதற்காக மகிழ்ச்சி. அன்னிய ஆட்சியி லிருந்து விடுதலே பெற்றதற்காக மகிழ்ச்சி. பல சிற்றரசுகளாகச் சிதறிக் கிடந்து, அன்னியருக்கு அடிமைப்பட்டு அவதிப்பட்டாலும், விழித்தெழுந்து போராடி இறுதியில் உரிமைப் போரில் வெற்றியும் பெற்று, உரிமைப் பாரதமாக மலர்ந்ததற்காக மகிழ்ச்சி அடையவேண்டும். உரிமைப் பாரதம் இணைந்த பாரதமாக மலர்ந்ததற்காக மகிழ்ச்சி அடைய வேண்டும். உரிமைப் பாரதத்தை இணைந்த பாரதமாக்கிய சிறப்பிற்காக மகிழ்ச்சி அடைய வேண்டும். இணைந்த உரிமைப் பாரதம் பிறவி மன்னர்களின் பிடியிலிருந்து விடுபட்டு உரிமைக் குடிமக்களின் அரசாக, காய்த்திருப்பதற்காக மகிழ்ச்சி கொள்ளுதல் பொருத்தம்; இயல்பு; முறை. ஆகவே ஆடுவோம், பள்ளுப் பாடுவோம், ஆனந்த சுதந்திரம் அடைந்த மகிழ்ச்சிப் பள்ளும் தேவை. அதோடு, அடுத்துச் செய்ய வேண்டியவற்றைக் காட்டும், உணர்த்தும் ஊக்கப் பாடல்களும் பாடுவோம்.

நம் தன்னுட்சி உரிமை பெற்றுப் பத்தொன்பது ஆண்டுகள் நிறைகின்றன. பலப்பல ஆண்டு நிறைவு களைக் காணவேண்டும் தம்பீகளே, தங்கைகளே!

கோனுட்சி நாட்டில் கோனும் அமைச்சும், தளபதியும், நாட்டுப் பற்ருேடும், வீரவுணர் வோடும், விழிப்போடும் இருந்தால் போதும். மற்ற வர்கள் தங்கள் தங்கள் வேலேகளிலேயே மூழ்கி

விடலாம். குரல்கொடுக்கும்போது திரண்டு வந்தாற் போதும். துணிந்து போர் புரிந்தால் போதும்.

குடியாட்சிக்குச் சிலருடைய நாட்டுப் பற்று மட்டும் போதாது. பலருடைய நாட்டுப் பற்றும் போதாது. மக்கள் அனைவருக்கும் நாட்டுப் பற்று வேண்டும். சிலருக்கோ, நாட்டுப்பற்று தானே ஊறும். பலருடைய நாட்டுப் பற்றையோ ஊட்டி வளர்க்கவேண்டும். மக்கள் அனைவருக்கும் நாட்டுப் பற்று வேரூன்ற வேண்டுமானால் முயன்று வளர்க்க வேண்டும். பல்லாண்டு முயன்று வளர்க்கவேண்டும்.

முள்ளும் புல்லும் எங்கெங்கோ முளைத்து விடுகின்றன. யாரும் விதைத்துப் பயிரிடா விட்டாலும், முளைத்துப் பரவி விடுகின்றன. நெல்லோ, எள்ளோ, எங்கெங்கோ முளைத்து, விளைந்து நமக்காகக் காத்துக் கொண்டிருப்பதில்லை. தேவைப் படும் அளவு நெல்லையும் எள்ளையும் நாமே பயிரிட்டுக் கொள்ளவேண்டும். இடமறிந்து, காலமறிந்து பயிரிட்டுக் கொள்ளவேண்டும். உழுது, விதைத்து, நீர்ப்பாய்ச்சி, எருவிட்டுக் கட்டிக்காத்துப் பயிரிட்டுக் கொள்ளவேண்டும்.

'தன் பெண்டு, தன் பிள்ளை, தன் சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டு' என்னும் தன்னலம் அருகம்புல் போன்றது. பயிரிடாமலே முளைத்து விடுவது; எளிதில் முளைத்துவிடுவது. அது மட்டுமா? வேரிலே உயிரை வைத்துப் பிழைத்துக் கொண்டிருப்பது; எவ்வளவு காய்ந்தாலும், கருகி வாடி வதங்கினது போல் தோற்றமளித்தாலும், சில மழைத்துளி பட்டதும் தளிர்த்துவிடுவது; பட்டுத் தளிர்த்துத்தொல்லை கொடுப்பது. பயிர்வளர, நன்கு விளைய புல்லைக் களைய வேண்டும். தேவைப்பட்டால் அடுத்தடுத்தும் களையவேண்டும்.

நல்லோர் நெஞ்சிலேகூட, தன்னலம் என்னும் அருகம்புல், அடுத்தடுத்து தளிர்த்து, ஊர்நலம், பொதுநலம், நாட்டுநலம் ஆகிய நற்பயிரைப் பாழாக்கும். ஆகவே, நாட்டுப் பற்றை வளர்ப் பதற்கு வழி, தன்னலத்தைக் கல்லியெறிவதுதான். இதை உணர்வோம். எல்லோருக்கும் உணர்த்து வோம் உடன்பிறந்தோரே! ஊருக்கு மட்டுமல்ல, நமக்கு நாமும் உணர்த்திக் கொள்வோம்! பலமுறை உணர்த்திக் கொள்வோம்! அன்றாடம் உணர்த்திக் கொள்வோம்.

'தன்வீடும் தானும்' என்பது மட்டுமா செதுக்கி ஒதுக்க வேண்டிய புல்? 'தன் சாதியும் தானும்' என்பதும் செதுக்கி ஒதுக்க வேண்டிய பூண்டே. இக் குழுப் பற்றும் இக் காலத்திற்கு ஆகாத பூண்டே. தன்னலத்தை விடத் தீய சக்தி, 'தன் சாதி' உணர்ச்சி. இது நச்சுப் பூண்டு. இதையும் அடுத் தடுத்து முயன்று, கத்தரித்து அல்லது தோண்டி யெடுத்து அழிக்காவிட்டால் இது புதராகிக் காடாகி நாட்டுப் பற்றையே, மக்கள் மாண்பையே அழித்து விடும்.

நாட்டுப் பற்றையும் மக்கள் மாண்பையும் வளர்க்க வேண்டியது நம் கடமை. நம் எல்லோ ருடைய தலையாய கடமை. நாட்டுப் பற்றும், மக்கள் மாண்புணர்ச்சியும் காட்டுப் பயிரல்ல. நுட்பப் பயிர், மிகநுட்பப் பயிர். ஆகவே அதிக விழிப்போடும் கருத்தோடும், உழைப்போடும் பொறுப்போடும் இந்நுட்பப் பயிர்களை வளர்ப்போமாக; நற்பயிர்களை வளர்ப்போமாக. இந் நற்பயிர்களுக்கு இடையூறாக முளைக்கும் சாதிப்பூண்டை—நச்சுப்பூண்டை—மடி செய்யாது அடுத்தடுத்து, ஆண்மையோடு, அறி வோடு கிள்ளி எறிவோமாக. செதுக்கி ஒதுக்கு வோமாக. அஞ்சாது அடுத்தடுத்து செதுக்கி

ஒதுக்குவோமாக. பல நூற்றுண்டுகளாக, வெட்ட வெட்ட முளைத்து முளைத்து, அங்கிங்கெனுதபடி எங்கும் காட்சியளித்த சப்பாத்தியை—கள்ளியை அழித்தோம். பல்லாண்டு தலைகாட்டாதபடி அழித்தோம். சாதிச் சாப்பாத்தியும் தேவையில்லாதது. நச்சுப் பிராணிகளின் உறைவிடம் ஆனது. ஆகவே என்சாதி, உன்சாதி என்கிற உணர்ச்சியும் நம் பெரியவர்களோடு பட்டுப்போக வேண்டும். அதற்கான பணியை அவர்களா செய்வார்கள்? நாமே செய்யவேண்டும். தொடர்ந்து செய்யவேண்டும். ''எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் ஓர் குலம்'' என்பது இலக்கியத்தில் மட்டும் உறைந்து விடாமல், மேடையோடு மட்டும் நின்றுவிடாமல், எழுத்தோடு குந்திவிடாமல், வாழ்க்கையாகப் பூக்கும்வரை பாடுபடுவோம் வாரீர்!

மற்ருெரு நச்சுப் பூண்டு உண்டு. அது நச்சுப் பூண்டு மட்டுமன்று, அது ஒட்டுவார் ஒட்டியும் கூட. அது உண்டால் கொல்லும்; தொட்டால் அரிக்கும்; இரத்தம் சிந்த அரிக்கும். இப்பூண்டையும் —ஒட்டுவாரொட்டியையும்—முளையும் விட்டு வைக்கக்கூடாது. இதையும் செதுக்கி ஒதுக்க வேண்டும். இதன் வேரிலே வெந்நீர் ஊற்றி அழிக்க வேண்டும். போதாதென்ருல் இரசாயன மருந்து போட்டு அழிக்க வேண்டும். அழிக்கப்பட வேண்டிய அந்த ஒட்டுவார் ஒட்டி எது?

எங்கள் நாடு தொண்டை நாடு! எங்கள் நாடு பல்லவ நாடு! எங்கள் நாடு பாண்டி நாடு! எங்கள் நாடு சோழ நாடு! எங்கள் நாடு சேர நாடு! எங்கள் நாடு கோசல நாடு! இத்தகைய பகுதிப் பாச உணர்ச்சிகள் இன்று தேவையில்லை. இவை தீங்கானவை. இவை ஒட்டுவாரொட்டி. முன்னே காட்டிய இரு புல்களைவிட, இம்முள் பொல்லாதது,

விடாதது. ஆகவே அவ்விரு புல்களைச் செதுக்கி ஒதுக்குவதிலே காட்டும் அக்கறையைவிட அதிக அக்கறையை இதைத் தோண்டி எறிவதிலே காட்ட வேண்டும். இதை அழிக்க அதிகப்படியான விழிப்பு வேண்டும். அதிக உழைப்பு வேண்டும். அதிக உறுதி வேண்டும். அதிக ஆண்மை வேண்டும்.

ஒருவர் இறந்த பிறகு, 'குழைந்து நயந்து' போற்றுவோம். சிறப்புச் செய்வோம். அவரே உயிரோடு வாழ்ந்தபோது, அல்லற்படுத்தி, மகிழ்ந்திருப்போம். அலட்சியப்படுத்திப் பூரித்திருப்போம். அவர்களது வழி வந்தோர் அல்லல்படுவதையும் காண மறுப்போம். சமாதிச் சிறப்பு நம் மரபு. வாழ்வோரைத் தாழ்த்துதல் நம் குறை. இக் குறையைப் போக்குவோம். சமாதியான தொண்டை நாட்டையும் பல்லவ நாட்டையும் பாண்டி நாட்டையும் சோழ சேர நாட்டையும் கோசல நாட்டையும் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும், வரலாற்று நூல்களிலும் சமாதிகளிலும் சாந்திபெற விட்டு விட்டு, வாழும், வளரும் குடியரசு இந்தியாவைப் போற்றுவோம்; வளர்ப்போம்!

# முன்னே நோக்குவோம்

என்னருமைத் தம்பீ, தங்காய்!

தொண்டை நாட்டையும், பல்லவ நாட்டையும், பாண்டி நாட்டையும், சோழ நாட்டையும், சேர நாட்டையும், கோசல நாட்டையும் சமாதிகளில் சாந்திபெற விட்டுவிடும்படி வேண்டியதை மறக்காதீர். யாரையும் புண்படுத்த அன்று தம்பீ இவ் வேண்டுகோள். மறைந்ததைத் தோண்டி எடுத்து வைத்துக்கொண்டு, ஊர்கூட்டி ஒப்பாரிவைப்பது நல்லதன்று. சமாதிகளை இழிவு படுத்த வேண்டாம். ஆனால் சமாதிகளைச் சிறப்புச் செய்வதிலேயே கால மெல்லாம் கழித்துவிடலாமா? பொருளையெல்லாம் இழந்து விடலாமா? அது அவர்களுக்கும் துணையன்று, வாழ்விற்கும் வழியன்று.

''பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே''. இவ்வறிவுரையை நம் முன்னோர் யாருக்காக விட்டுச் சென்றனர்? நமக்கா? அன்னியருக்கா? தமிழிற்குரிய நாம், தமிழ் வழிவந்த நாம் இவ்வுரையைப் போற்ற வேண்டாவா? இதன்வழி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் தம்பிகளே!

ஐம்பத்தாறு நாடுகள் கொண்டது பாரதம் என்பது பழையது. பண்டைக்காலக் கருத்து. பிற்காலத்திலே சிதறிப்போன கருத்து. ஐந்நூற்று அறுபதுக்கு மேற்பட்ட சிற்றரசுகளிடமும் ஆங்கிலேயனிடமும் அடிமைப்பட்டிருந்த பெரும் பரப்பு கொண்டது இந்தியா என்பதும் பழையது. மேற் கூறிய இரு கருத்துகளும் முற்காலத்திற்குச் சரி. இக் காலத்திற்குச் சரியன்று. இவையிரண்டுமே இக் காலத்திற்குப் பழையன. ஆகவே கழிய வேண்டியன; கழிக்கப்படவேண்டியன.

பழையன கழிந்தால் புதியன புகவேண்டாவா? வேண்டும். புக வேண்டியது எது? நாம் எல்லோரும் இந்தியர் என்னும் கருத்தே புகவேண்டியது. இதுவே காலத்திற்கு ஏற்றது. வலிவூட்டுவது. இணைத்த இந்தியாவைக் கண்ட பிறகு, சுதந்திரக் குடியாட்சி இந்தியாவைக் கண்ட பிறகு, கற்கால நினைப்பிலே, தேர்க்கால நினைப்பிலே, பல்லக்குக்கால நினைப் பிலே சுருக்கிவிழலாமா? உடன் பிறந்தோரே! நீங்களும் நானும் இனியும் தொண்டை மண்டலத் தாருமல்ல, பாண்டிய மண்டலத்தாருமல்ல, புதிய பாரதப் புதல்வர்கள்.

நம் கண்கள் எங்கே உள்ளன? யாருக்காவது முகத்தின் பின்னே கண்கள் உண்டா? என்றாவது உண்டா? கண்கள் முன்னே அமைந்திருப்பதன் நோக்கம் என்ன? முன்னே பார்த்து, முன்னேற வேண்டும் என்பதே நோக்கம். அதை விட்டு விட்டு இயற்கைக்கு மாறாக, வளர்ச்சிக்கு ஊறாக, முன்னேற் றத்திற்குத் தடையாக, பின்னே பார்த்துக் கொண்டே பாழாக வேண்டாம். அடிக்கடி திரும் பிப் பார்த்துக் கொண்டும் அல்லற்பட வேண்டாம். பெருமூச்சு விடவேண்டாம். சென்றுபோன சிறப் பிலே சொக்கி நின்று, ஓட்டப் பந்தயத்தில் தோற் றுப்போன முயலாக வேண்டாம் நாம்.

தேவையில்லாத பழைய கருத்துகளை, தேய்த்து விடும் பண்டைக் கருத்துகளை, மோதவிடும் பகுதிப் பாசங்களை உதிர்த்துவிடக் கற்றுக்கொள்வோம். அவற்றிற்கு மாறாக, காலத்திற்கேற்ற புத்தம்புதிய கருத்துகளை, ஒற்றுமைப்படுத்தும் கருத்துகளை, உயிரூட்டும் கருத்துக்களை விரைந்து ஏற்றுக்கொள் வோம். ஏற்ற உடனே நிலைபெற்று விடுவதல்ல. எந்தப் புதிய கருத்தும், சென்ற காலச் சிந்தனை யெல்லாம் வந்து வந்து திசை திரும்பும், புதிய

கருத்தைத் தழைக்க விடாதபடி தொல்லைப்படுத்தும்.

சாதிச்சிந்தனை, ஆதியில் இல்லாவிட்டாலும், பாதியில் வந்தாலும், பல நூற்றாண்டுகளாக நமக்கு வெறியூட்டி வருவது; அலைக்கழித்து வருவது. அம்மா கற்றுக் கொடுத்தது. அப்பா எருவிட்டு வளர்த்தது. அத்தை மெல்ல மெல்லச் சொல்லிச் சொல்லி வளர்த்தது. அக்கம் பக்கத்தார், அடுத் தடுத்து நினைவுபடுத்தித் தழைக்க வைத்தது. கான கக் காலத்துக் காவலுக்குப் போட்ட இவ்வேலி முள்ளை நாகரிகக் காலத்திலும் பருவத்திற்குப் பருவம் பயிரிடுவது அறியாமை; தீங்கு. ஆகவே இப் பயிரை அடியோடு கைவிட்டுவிடுவோம் உடன் பிறந்தோரே!

சாதி வேற்றுமை எவ்வளவு பொருத்த மற் றதோ அவ்வளவு பொருத்தமற்றதே இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பகுதிப் பாசத்தைப் பற்றிப் பல்லவி பாடுவதும். இதற்கும் நாம் ஏமாறக் கூடாது.

சாதி நஞ்சிலே, பகுதிப்பற்று அழுக்கிலே வளர்ந்து விட்ட பெரியவர்களுக்காக, கோடானு கோடி இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தை, மானி டத்தின் எதிர்காலத்தைச் சின்னாபின்னப் படுத்தக் கூடாது. சென்றதினி மீளாது. ஆகவே வருவதைக் கவனிப்போம். பிணைக்கப்பட்ட பாரதம் எழுச்சி கொண்ட பாரதமாக, செழிப்பு கண்ட பாரதமாக, சமதை உணர்ச்சிகொண்ட பாரதமாக, நேர்மை வளரும் பாரதமாக, அனைவரும் வாழும் பாரதமாக உருவாவதற்கு நம்மாலான தொண்டினை இன்றும் செய்வோம்; என்றும் செய்வோம். வளர்க பாரதம்; வாழ்க வையகம்.

# நவம்பர் பதினுலு

நவம்பர் பதினுன்காம் நாள்; நவபாரதத்தின் பெருநாள்; பொன்னுள், திருநாள்! அந்த நாளேப் பாரதம் முழுதும் கொண்டாடுகிறது. அன்று இமயத்தில் கொண்டாட்டம், குமரி முனையில் கொண்டாட்டம். ஏன் இக் கொண்டாட்டம்?

அந் நன்னுள், நேருவின் பிறந்த நாள், ஜவகர்லால் நேருவின் பிறந்த நாள்.

செல்வத்திலே பிறந்து, வளத்திலே வளர்ந்த பெருமகனுரின் பிறந்த நாள் என்பதற்கா கொண்டாடுகிருேம்? இல்லே. இக் காரணம் பற்றி கொண்டாடுவதாயின், உற்ருர் உறவினர், வேண்டிய பெருங்குடியினர் மட்டுமே கொண்டாடுவர். நாடு முழுவதும் கொண்டாடாது.

அறிவு மேதை என்பதற்காகக் கொண்டாடுவதாயின், கல்விக் கழகங்களோடு நின்றிருக்கும் கொண்டாட்டம்.

ஜவகர்லால் நேரு செல்வக் குடியில் பிறந்தவர்; உண்மை. அறிவு மேதை; உண்மை. அவர் மனிதர்; நல்ல மனிதர்; சிறந்த மனிதர்; தலேசிறந்த மனிதருள் மாணிக்கம். ஆம்; இதுவும் உண்மை. இது அவரது தனிச் சிறப்பு.

சிறப்புகளின் சிகரமாக விளங்கிய நேரு எங்கோ யாருக்கும் எட்டாத உச்சியில் வீற்றிருந்து ஒளிவீசவில்லே. மாருக மக்களோடு ஒருவராக வாழ்ந்தார். எளிய மக்களோடு மீண்டும் மீண்டும் உறவாடினுர்; ஒளி கொடுத்தார்; வழிகாட்டினுர். நாற்பது ஆண்டுகளாக நாடு முழுவதும் சுழன்று சுழன்று மக்களின் நிலேயை உணர்ந்தார்; உருகினுர்; அவர்களுக்காக உருகினுர். வீட்டிலும் சரி, நாட்டிலும் சரி, அவர் சிந்தையெல்லாம், சீந்துவாரற்ற தரித்திர நாராய

ணர்களைப் பற்றியே. தன்னை மறந்து, மக்களை நினைத்து வாழ்ந்தார்; உழைத்தார்; அவர்களுக்கா கவே கடைசி வரை உழைத்தார்.

உங்கள் நேருவும் எங்கள் கென்னடியும் அரசியல் கட்சிப் பெரியவர்களாக இருந்ததும், நாட்டை ஆளுவோர்களாக இருந்ததும் உண்மை. ஆனால் அவர்கள் வெறும் கட்சிப் பெரியவர்கள் அல்லர். தனிநாடுகளின் பெரும் பதவியாளர்கள் மட்டுமல் லர். அவர்கள் இருவரும் மனித குலத்தின் காவலர் கள். மனித குலம் முழுமைக்கும் குரல் கொடுத்த வர்கள். மனித குலம் முழுமைக்கும் உழைத்தவர் கள். இப்படி அமெரிக்காவில் கார் ஓட்டிகளெல் லாம் என்னிடம் ஐந்தாண்டுகளுக்கு முன் எடை போட்டது இன்றும் பசுமையாக இருக்கிறது. ஆம்! நேருவின் கண்ணோட்டம், உலகக் கண்ணோட்டம்; மனித குலக் கண்ணோட்டம்.

உலகோடு இணைந்த நாடாகவே, விடுதலை இந்தியாவைக் கண்டார்! இந்தியர்களின் விடுதலை யையும், மனித குலத்தின் ஒரு பகுதி மக்களின் விடுதலையாகவே கண்டார் நேரு. இந்திய விடுதலைக்கு அவர் பட்டபாடு எவரே பட்டார்? சுகபோகங்களை யெல்லாம் சுவைக்கும் பருவத்தில், சுவைக்கும் வாய்ப்புகள் நிறைந்திருந்தும், அத்தனையையும் ஒதுக்கி விட்டு, மீண்டும் மீண்டும் சிறை சென்று ஒன்பதாண்டு சிறைவாழ்க்கையை அனுபவித்து விடுதலையைப் பெற்றுத் தந்தார். அடிமைத்தனம் அழிய வேண்டும்; சமூக விடுதலை ஓங்க வேண்டும். ஏற்றதாழ்வு விலகவேண்டும். வேற்றுமையுணர்ச்சி பட்டுப்போக வேண்டும். ஒற்றுமை வளரவேண்டும். 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம்' என்ற உணர்ச்சி தழைக்க வேண்டும். நாட்டால் இந்திய ராக, இனத்தால் மனிதராக வாழும் பெருவாழ்வை

நோக்கி, பெரு நடை நடக்க உறுதி கொள்ளவேண்டும். சமத்துவ, சகோதரத்துவ சமுதாயத்தை உருவாக்கும் பெரும் பணிக்கு, நேருவின் நற்பணிக்கு நம்மை காணிக்கையாக்கிக் கொள்வதே, நேருவின் பிறந்தநாளைக் கொண்டாடும் முறை. அவரைப் போற்றிவிட்டு, பின்பற்றத் தவறிவிட்டால், கொண்டாட்டம் வெறும் பொழுது போக்காகும்.

நேருவின் பிறந்தநாளைத் தனியொருவரின் பிறந்த நாளாக மட்டும் கொண்டாடவில்லை. குழந்தைகளின் நாளாகக் கொண்டாடுகிறோம். குழந்தையின் சிறப்பெல்லாம் நிரம்பப் பெற்ற பெருமகனாரின் பிறந்தநாளை, குழந்தைகளின் பெருநாளாகக் கொண்டாடுவது சாலப் பொருத்தம்.

அஞ்சாமை, குழந்தை இயல்பு. அஞ்சாமை நேருவின் தனிச்சிறப்பு. அவர் யாருக்கும் அஞ்சாதவர். எதற்கும் அஞ்சாதவர். கொடுமைகண்டு, கொதிப்பது குழந்தை இயல்பு. நேருவும் சிறுமை கண்டு சீறியவர்; கொடுமை கண்டு கொதித்தவர். குரோதமின்மை குழந்தைக் குணம். குரோதமின்மை நேருவின் சிறப்பு.

நேருவின் பிறந்தநாளை எப்படிக் கொண்டாடுவது—குழந்தைகளின் நாளை எப்படிக் கொண்டாடுவது—குழந்தைகள் வளர வாழ, செம்மையாக வளர வகை செய்வதே குழந்தைகள் நாளைக் கொண்டாடும் முறை; நேருவின் பிறந்த நாளைக் கொண்டாடும் முறையுமாகும். எல்லாக் குழந்தைகளும்—பெரும்பாலான குழந்தைகள் மட்டுமல்ல—எல்லா மென்றால் எல்லாக் குழந்தைகளும், காலத்தில் கல்வி கற்க ஏற்பாடு செய்ய வேண்டும். வறுமையினால் ஒரு குழந்தை கற்கவில்லை யென்றால் இங்குள்ள எல்லோரும் நாண வேண்டும். குடிசையின் பக்கத்திலே, முச்சந்தியிலே சிறுவர் சிறுமியர் சீரழிந்து

போக விடக்கூடாது. மாடுமேய்க்க ஆடுமேய்க்க சிறுவர் சிறுமியரை விடக்கூடாது. குழந்தையைக் காக்க, வீட்டைப் பெருக்க, சிற்றாள் வேலை செய்ய, படிக்கும் வயதினரை அமர்த்தக் கூடாது. அனுமதிக்கக் கூடாது. பதின்மூன்று வயது முடிய பையனும் பெண்ணும், எல்லோர் வீட்டுப் பையனும் பெண்ணும் கற்பதிலே ஈடுபட்டிருக்க வேண்டும். பிழைக்கப் பொருள் தேடுவதிலேயே ஈடுபடக் கூடாது. அத்தகைய சூழ்நிலையை விரைவிலே உருவாக்க வேண்டும். அதற்கு நம்மைப் படைக்க வேண்டும். அதை இவ்வாண்டு குழந்தைகள் நாளிலே உறுதிப்படுத்துவோமா?

பிடி அரிசி எடுத்து வைத்துப் பள்ளிப் பகலுணவைப் பலப்படுத்துவோமா? ரூபாய்க்கு ஒரு காசு ஒதுக்கி வைத்து உடை தானத்திற்கு, கல்வி தானத்திற்கு உதவுவோமா? எல்லோரும் கற்க எல்லோரும் உழைத்து, எல்லோரும் உதவி, எல்லோரும் வாழ்வதே நேருவிற்கு அஞ்சலி.

# குலப் பெருமை

என்னருமைத் தம்பீ, தங்காய்!

இன்று என் சிந்தனை, இருபத்து ஏழு ஆண்டுகளைக் கடந்து செல்கிறது. அன்று சீகாகுளம் என்னும் நகரத்தில் இருந்தேன். அப்போது வட விசாகப்பட்டினம் மாவட்டத்தின் கல்வி அதிகாரியாக இருந்தேன்.

அப்போது ஒரு நாள் காலை, கடைநிலை ஊழியர் ஒருவர் வந்தார். அவர் கையிலே தாம்பாளம். அதில் வெற்றிலைப் பாக்கு, வாழைப்பழம், பூ, மஞ்சள் இத்தனையும் இருந்தன. அச்சிட்ட அழைப்பிதழ் ஒன்றும் அவற்றின் மேல் இருந்தது. அவ்வூழியர் பணிவான இயல்பினர். என்னை வணங்கி, கொண்டு வந்ததை என்னிடம் கொடுத்தார். அழைப்பிதழை எடுத்துப் பார்த்தேன். அது தெலுங்கில் இருந்தது. என் மனைவியை அழைத்து அதைக் கொடுத்தேன். அவர் வாங்கிப் படித்தார். ஊழியரின் தலைமகனுக்குக் காதணி விழா. அதற்கான அழைப்பு அது என்று விளக்கினார். ஊழியரோடு தெலுங்கில் பேசினார். சில தகவல்களைக் கேட்டறிந்தார். தமிழ்ப் படுத்தினார், சுருக்கம் இதோ.

என் ஊழியர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். அந்த அரச குடும்பம் அப்போது ஆட்சியிலே இல்லை. ஆயினும் செல்வத்திலும் செல்வாக்கிலும் இருந்தது. அக் குடும்பத்தின் பெயரை அவர் கூறினார். அவர்கள் இன்றும் நல்ல நிலையில் உள்ளனர். ஆகவே அக் குடும்பப் பெயரையும் ஊழியர் பெயரையும் நான் வேண்டுமென்றே மறைக்கிறேன் தம்பீ!

வேலை சிறியதுதான். குலத்திலோ அவர் பெரியவர். குலப் பெருமையைக் காக்க வேண்டியது அவரது கடமையாம். தலைமகனுக்குத் தக்கபடி காதணி விழா நடத்துவது குலப் பெருமையைக்

காக்கும் வழிகளிலே ஒன்றும். ஆகவே விழாவைச் சிறப்பாக நடத்த முடிவு செய்யப்பட்டது. அச்சிட்ட அழைப்பிதழ், விருந்து இவை அம் முடிவின் விளைவு கள். இவற்றிற்குச் செலவு ஐந்நூறு ரூபாய் மட்டும். இன்றைய ஐந்நூறு அல்ல தங்காய், அன்றைய ஐந்நூறு ரூபாய். இது நினைவிலிருக்கட்டும்.

இச் செலவிற்குப் பணம் எங்கே? முந்தைய சொத்து உண்டா? இல்லை.....சேர்த்து வைத்தது உண்டா? இல்லவே இல்லை. கையூட்டை நம்பியா இத் திட்டம்? அதுவுங்கூட இல்லை. தானுகைக் கொடுப்பவர்களிடமும் வாங்கி அறியாதவர் அவர். பின் எப்படிச் சமாளிப்பார்? கடன் வாங்கி சமாளிப் பார். அவரது நாணயத்தை நம்பித் தெரிந்தவர் ஒருவர் கடன் கொடுத்தார். ஐந்நூறு ரூபாயும் கடனே. இவ்வளவு கடன்பட்ட அவரது மாதச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? பதினைந்து ரூபாய். பதினைந்து ரூபாய்ச் சம்பளத்தில் இனி மிச்சம் பிடித்துத்தான் ஐந்நூறு ரூபாய்க் கடனை அடைக்க வேண்டும். இதற்குக் குறைவாகச் செலவு செய்தால் உலகம் தூற்றும். பழிவந்து சேரும். வழிவழி யாகப் பழி தொடரும். எனவே இவ்வளவு செலவு செய்யாமல் முடியாது. நான் விழாவிற்கு வந்து, சிறப்பு செய்யவேண்டும் என்பது வேண்டுகோள். எவ்வளவு சிறிய சம்பளத்தின் மேல் எவ்வளவு பெரிய கடன் வாங்குகிறார்! அதுவும் எவ்வளவு சிறிய நிகழ்ச்சிக்கு என்று வியப்படைகிறீர்களா உடன் பிறந்தோரே? நானும் அப்படியே எண்ணி னேன். என்னுள் சினமும் பொங்கிற்று. பொங்கி என்ன பயன்? நாமோ, ஒல்காப் புகழ் படைத்த தொல்பண்பினர். மரபைக் காக்கவே மூச்சை வைத்திருப்பவர். இங்கே புதியதைச் சொல்ல யாருண்டு? சொன்னாலும் கேட்க ஆளுண்டா?

பல்லைக் கடித்துக்கொண்டு இருந்துவிட்டேன்; இன்றும்தான் இருக்கிறேன்.

வீட்டுவிழா, ஊர்விழா—இவை எண்ணிறந்தன நம் நாட்டிலே. இவை விழுங்கும் செல்வமும் மலைபோன்றது நம் நாட்டிலே. திருமணமென்றும், தீபாவளியென்றும் செலவிட்டுச் செலவிட்டு அளவிற்குமேல் செலவிட்டுத் 'தீபாவளியானது' இந்தியச் சமுதாயம். பண்டைப் பழக்கமன்று, சிறுசிறு நிகழ்ச்சிகளுக்கெல்லாம் பெரும்பெரும் பொருளை இறைத்து விட்டு ஏங்குவது நம் சமுதாயம். திருவிழாவென்றும் சடங்கென்றும் உள்ளதை எல்லாம் வேட்டு விட்டு விட்டு கையைப் பிசைவது நம் சமுதாயம். இத்தனையிலும் தப்பி, ஏதோ சிறிது வெள்ளையாகவோ, கறுப்பாகவோ சேர்த்து வைத்தால் அதையும் பண்ணையிலோ, ஆலையிலோ, தொழிற்சாலையிலோ முதலீடு செய்யாமல் வெள்ளியிலும் பொன்னிலும் முடக்கிவிடுவது; ஆகவே பொருளாதாரத்தில் முடங்கி விடுவது நம் சமுதாயம்.

இவையே நம் மக்களின் பொருளாதாரக் கீழ் நிலைக்குக் காரணம். இவற்றின் தொல்லையினால், சாண் ஏறினால் முழஞ் சறுக்கி விடுகிறது. இத் தீமைகளைக் களைந்தால் வீடும் நாடும் வளமுறும்.

இது என் தனிப்பட்ட கருத்தன்று; கண்டு பிடிப்புமன்று தம்பீ!

இந்தியப் பொருளாதாரத்தைப் பற்றி அறிந்த ஆண்மையாளரின் ஆணித்தரமான முடிவு இது. இன்று நேற்றைய முடிவன்று. பல்லாண்டுகளாகப் பொருளாதாரப் பாடம் படிப்போர் சொல்லிவரும் முடிவு. இதைப் படித்தால் போதுமா? நினைவில் வைத்திருந்து, நன்முக எழுதி, பரீட்சை தேறினால் போதுமா? வாழ்க்கைக்குப் பயன்படுத்த வேண்டாவா?

'கற்றபடி நிற்க, அவர்' என்று ஒவ்வொரு வரும் தன் தன் பொறுப்பைத் தட்டிக் கழிக்க லாமா? பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல.

ஆகாறு அளவிட்டதாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை.

இது பொய்யா மொழி. வீட்டிற்கும் பொய்யா மொழி. நாட்டிற்கும் பொய்யா மொழி. இதைச் சிக்கெனப் பற்றுவீர். சிக்கனமாக வாழ்வீர்! கொண்டாட்டச் செலவுகள் குறையட்டும். திண்டாட்ட நிலைகள் மாறட்டும். பூட்டி வைப்பது மாறட்டும். சுமந்து திரிவது குறையட்டும். வங்கியிலே போட்டு வைப்பது வளரட்டும்.

மற்றவர் கிடக்கட்டும் தம்பி! நீ, நில்! நிமிர்ந்து நில்; துணிந்து நில். தீமையை நீக்கிவிடத் துணிந்து நில். புது வழிகாட்டத் துணிந்து நட. திருமணம் முதலிய நிகழ்ச்சிச் செலவுகளைக் குறைப்பது என்று உறுதிகொள். அப்படியே செய்துகாட்டு. ஊரார் தூற்றட்டும். அதுவொன்றே அவர்கள் செய்யக் கூடியது. முதியவர்கள் முணுமுணுக்கட்டும். அவர்கள் பொழுதும் போகவேண்டுமே!

# உயர்த்திடுவீர்! உயர்ந்திடுவீர்!

என்னருமைத் தம்பி, தங்காய்!

இன்று டிசம்பர் பதினோராம் நாள். இது பிறந்தநாள். யார் பிறந்த நாள்? பாரதி பிறந்த நாள். எந்த பாரதி? தேசியக் கவி சுப்ரமணிய பாரதி.

அதோ, அவரது பொலிவான தோற்றம் காண்கிறேன். விடுதலைக் கனல் கக்கும் கண்களைப் பார்க்கிறேன். அவரது கபடமற்ற நேரிய பார்வையை நோக்குகிறேன். அச்சம் தவிர்க்கிறேன். ஆண்மை கொள்கிறேன்.

சிந்தனை சிறகடித்துச் செல்கிறது. பின்னோக்கிப் பறக்கிறது. முப்பந்தைந்து ஆண்டுகளுக்கு முந்திய மாலைப்பொழுது; திருவல்லிக்கேணி கடற்கரை. மாநிலக் கல்லூரிக்கு முன்பிருக்கும் மணல் வெளி. திலகர் கட்டத்தில் கூட்டமொன்று நடக்கிறது. பெருங்கூட்டமில்லை. சாதாரண கூட்டம். ஒலி பெருக்கி உண்டா? இல்லை. ஆயினும் என்?

கணீரென்று பாட்டொன்று கேட்கிறது சொல் முறியாத பாட்டு வருகிறது. காற்றோடு கலந்து, ஆனால் தெளிவாக, எடுப்பாக வருகிறது. அப் பாட்டு எங்களை ஈர்க்கிறது. நானும் என்னுடன் இருந்த நண்பர்களும் பாட்டு வரும் பக்கம் நடக்கிறோம். நடைபாதையை விட்டு நகர்ந்து கூட்டத்திற்கு வந்துவிட்டோம்.

கட்டான உடல். கருநிறம். வெண்கலத் தொண்டை. இத்தனையும் உடைய ஒருவர் பாடுகிறார். கேட்டோரெல்லாம் வீறு கொள்ளுகின்றனர். உறுதி கொள்ளுகின்றனர். இதோ அந்தப் பாட்டு; ஈரதிப்பாட்டு.

இதந்தரு மனையினீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு இரண்டுமாறி, பழிமிகுந்து இழிவுற்றாலும்
விதந்தரு கோடி இன்னல் விளைந்தெனை அழித்திட்டாலும்
சுதந்திரத்தேவி, நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே
நின்னருள் பெற்றி லாதார் . . . . . . .

நிகரிலாச் செல்வரேனும்
பன்னரும் கல்வி கேள்வி
படைத்துயர்ந்திட்டாரேனும்
பின்னரும் எண்ணிலாத
பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோடொப்பார்!

என்று முழுப்பாட்டையும் பாடி முடிக்கிறார். கைக ளெல்லாம் கொட்டின. நெடுநேரம் கொட்டின.

நொடிப் பொழுது அமைதி. மீண்டும் விடுதலை முழக்கம் அவரே பாடினார். என்ன பாடினார்?

'விடுதலை, விடுதலை' என்னும் பாடலை முழங் கினார்.

'திறமைகொண்ட தீமையற்ற தொழிற் புரிந்து யாவரும் தேர்ந்த கல்வி ஞானம் எய்தி வாழ்வோம் இந்த நாட்டிலே! விடுதலை, விடுதலை, விடுதலை'.

'தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோமிந்த நாட்டிலே. விடுதலை, விடுதலை, விடுதலை.'

விடுதலை முழக்கப் பாட்டைக் கேட்ட கூட்டத் தினர் அனைவரும் எழுச்சி பெற்றனர். அவ்வெழுச்சி, பின்னர் அச்சத்தால் அடங்கிவிடக் கூடாதென்று எண்ணினர் போலும்.

மீண்டுமொரு பாடலைப் பாடினார் அவரே.

'அச்சமில்லை அச்சமில்லை, அச்சமென்பதில்லையே' என்ற பாட்டை முழுவதும் பாடி முடித்தார் அவர். அதன் அடிகளைக் கேட்கக் கேட்க, 'ஆம் ஆம்' என்றன எங்கள் உள்ளங்கள். 'சரி சரி' என்று ஆடின எங்கள் தலைகள். கொட்டி, ஒப்புக் கொண்டன எங்கள் கைகள்.

பாட்டுக்குப் பாட்டு இடைவேளை இரண்டொரு விநாடிகள். அந்த இடைவேளைகளில் கைகொட்டி எங்கள் ஆதரவைக் காட்டினோம் நாங்கள்.

மேலும் சில தேசிய கீதங்கள் முழங்கின.

'வாழில் முப்பதுகோடி முழுமையும் வாழ்வோம்
வீழில் முப்பதுகோடி முழுமையும் வீழ்வோம்'

என்று சூளுரைக்கும் பாரதப் பொதுமைப் பாடலோடு முடிந்தது இசை முழக்கம். கடலொலியென ஒலித்தது கையொலி.

பாரதி நூல்கள் பறிமுதல் செய்யப்பட்டிருந்த காலம் அது. பாரதிப் பாட்டைப் பாடினால் குற்றம். ஏன் என்றால் சிறைவாசம், அந் நிலையிலே பாரதிப் பாடல் ஒன்றையல்ல, பலவற்றைத் துணிந்து பாடுகிறார் ஒருவர். கூடிக் கேட்டுப் பாராட்டுகின்றனர் பலர்.

இத்தனை பாராட்டுகளையும் பெற்றுக்கொண்ட இவர் யாரோ, என்ன பேரோ என்று அறிய விரும்பினோம்... ஸ்ரீமான் ஜீவானந்தம் என்று கூறினார் பெரியவர் ஒருவர். அவரே பின்னர் தமிழ் நாட்டுப் பொது உடைமைக் கட்சித் தலைவர்களுள் ஒருவரான, மறைந்த தோழர் ஜீவானந்தம் ஆவார்.

பாரதி பாடல்களைக் கேட்டு, சுதந்திர ஆர்வம் கொண்டிருந்த கூட்டத்தின் முன்னர் எழுந்து நின்றார் ஒருவர். அவர் இடுப்பிலே தூய வெள்

ளாடை. மேலே தூய வெண் சொக்காய். அதன்மேல் வெண்துண்டு ஒன்று; அத்தனையும் கதர். அதிக உயர மில்லாது சற்று மெலிந்த இவர், மென்மையாகத் தொடங்கினார். அவ்வினிய குரல் தெள்ளு தமிழ் பேசிற்று. இனிய தமிழ் பேசிற்று. இலக்கிய தமிழ் பேசிற்று. அரசியல் தமிழ் பேசிற்று. அத் தென்றல் மெள்ள மெள்ள பெருங்காற்றாயிற்று. விடுதலைப் புயலாகி வீசிற்று. நெடுநேரம் வீசிற்று. மகுடி கேட்டு ஆடும் நாகமென மாறினர் கூட்டத்தினர். நவீன அரசியல் கருத்துகளை வாரிவழங்கும், தமிழ்த் தென் றலைப் போற்றினர். விடுதலை வேட்கை கொண்டு வீறுபெற்றனர். பெறுவோம் உரிமையை என்று பொங்கினர்.

வேடிக்கை பார்க்க வந்த கூட்டத்தை, இந்திய விடுதலை வேட்கை கொண்ட கூட்டமாக்கி, தமிழ்ப் பற்றுடைய கூட்டமாக்கி, சமத்துவ உணர்ச்சி பெற்ற கூட்டமாக்கியதும் அமர்ந்தார் அச் சாது. யாரோ அவர்? தமிழ் நாட்டில் இந்திய விடுதலை இயக்கத்தைப் பட்டிதொட்டியெல்லாம் பரப்பிய பெரியோர்கள் சிலருள் ஒருவர் அவர். முன்னோடித் தலைவர்களுள் ஒருவர் அவர். இக் கால அரசியல், பொருளியல், சமுதாய இயல் கருத்துகளையெல் லாம் தமிழிலே, எளிய தமிழிலே, இனிய தமிழிலே, துள்ளுநடைத் தமிழிலே பேசி, எழுதி வாழ்ந்த தமிழ்த் தென்றல் அவர்.

தொழிலாளர் இயக்கம், சமதர்மம், பொது உடைமைக் கொள்கையெல்லாம் தமிழ் நாட்டின் பொது மக்களுக்கு அறிமுகப் படுத்திய முன்னோடித் தலைவர்கள் சிலருள் ஒருவராகிய அவர், தேசத் தொண்டர், சமயத் தொண்டர், சமதர்மத் தொண் டர், திரு. வி. க. என்று செல்லமாக அழைக்கப்படு பவர். அன்று நாங்கள் கேட்டது, எழுச்சி பெறச்

கேட்டது திரு.வி. கல்யாணசுந்தரனாரின் சொற்பொழிவையே.

தம்பிகளே! தங்கைகளே! இவர்கள் யாரையும் நீங்கள் இன்று பார்க்க முடியாது கேட்க முடியாது. அவர்கள் எழுத்தையாவது படிக்க வேண்டாவா? பாட்டையாவது படிக்க வேண்டாவா? வாழ்க்கையையாவது அறிய வேண்டாவா?

அவர்களை 'காப்பி' அடிக்க அல்ல. அவர்களைப் போல், அகன்ற அறிவுபெற, ஆழ்ந்த கல்விபெற, அஞ்சா நெஞ்சம்பெற, தன்னலமற்ற பொது நல உணர்ச்சி பெற, புதுவழி, நல்ல வழி நடக்க, உள்ளது சிறக்க எதையும் எதிர்பாராது, கொள்கைக்காகப் பம்பரம் போன்று சுழன்று சுழன்று பாடுபட்டால் அல்லவா தலைமுறைக்குத் தலைமுறை முன்னேற்றம், வளர்ச்சி கிட்டும்?

எனவே பாரதியைப் படியுங்கள். தமிழ்த் தென்றலைத் தேடிப் படியுங்கள். ஜீவாவின் எழுத்துகளைத் தேடிப் படியுங்கள். பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைப் படியுங்கள். எழுச்சி கொள்ளுங்கள். ஆர்வம் பெறுங்கள்.

சென்றிடுவீர் எட்டுத் திக்கும். கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர். பயிற்றிப் பல கல்வி தந்து பாரை உயர்த்திடுவீர். நீவிரும் உயர்ந்திடுவீர்.

# வாழ்வளிக்கும் கல்வி

கல்வி, கண் அளிக்கும். கல்வி, வழிகாட்டும். வாழும் வழி காட்டும் கல்வி, ஆளாக்கும்; ஆற்றல் மிக்க ஆளாக்கும்; அறிவுடைய ஆளாக்கும்; சீலமுடைய ஆளாக்கும்; அவையத்து முந்தி இருக்கும் ஆளாக்கும். எனவே கல்வி தேவை. எல்லோர்க்கும் தேவை; என்றென்றும் தேவை.

மனிதப் பிறப்புரிமைகளில் ஒன்று கல்வி. அடிப்படை உரிமை கல்வி. அது எல்லோர்க்கும் எட்ட வேண்டும். இவ்வுரிமைக்குக் குறுக்கே வறுமை வரக்கூடாது. இன வேற்றுமை இடையூறாகக் கூடாது. மொழியும் வழிமறிக்கக் கூடாது. எங்கே பிறப்பினும் எக்குடிப் பிறப்பினும், எம்மொழி பேசினும் கல்வி, பட்டக் கல்வி, உயர்பட்டக் கல்வி, பேரறிஞர் பட்டக் கல்வி, அத்தனையும் எட்டும் வகையில் கல்வி முறை அமையவேண்டும். கல்விக் கூடங்களும் பெருக வேண்டும். வாய்ப்புகள் வளர வேண்டும். வசதிகள் பெருக வேண்டும். கல்லார் யாருமில்லாத அந் நன்னிலையை நோக்கி நாம் விரைய வேண்டும்.

கல்வி அமைப்பு எப்படியிருக்கவேண்டும்? பள்ளியிறுதி வரை முழுநேரக் கல்வியாக இருக்க வேண்டும். எவரும் பதினைந்து அல்லது பதினாறு வயது முடிவதற்கு முன், சம்பாதிப்பதைப் பற்றிச் சிந்தனை செய்யக்கூடாது. அத்தகைய சூழ்நிலை நாட்டில் உருவாக வேண்டும். இல்லை. அதை உருவாக்க வேண்டும்.

கல்லூரிப் படிப்பு முழு நேரப் படிப்பாக வேண்டியதில்லை. பகுதி நேரப் படிப்பாகலாம். எல்லோர்க்கும் இல்லாவிட்டாலும், பெரும்பாலோர்க்குப் பகுதி நேரப் படிப்பாகவே இருக்கவேண்டும்.

நிறைய மதிப்பெண்கள் பெற்றவர்கள், ப
ஓட்டமும் நடையுமாக முன்னேறக்கூடிய
அவர்களுக்கு முழு நேரப் படிப்பு சரி. ம
களுக்கு? பகுதி நேரப் படிப்பே சரி, ஏன்? அ
மெள்ள படித்துப் பட்டம் பெறக்கூடிய
மதிப்பெண்கள் குறைந்தவர்களெல்லாரும்
படிப்பிற்கு, பட்டப்படிப்பிற்கு இலாயக்கற்ற
என்பது தவறு. அத் தவறான கருத்தை,
கருத்தை அறிஞர் உலகம் கைவிடுவதாக! வி
கைவிடுவதாக.

ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட முடியா
எல்லோரும் உடல் நலம் அற்றவர்களா?
பயிற்சி பெற உரிமையற்றவர்களா? விளை
களில் கலந்து கொள்ள உரிமையற்றவ
வினைகளை மேற்கொள்ளத் தகுதியற்றவர்க

கல்லூரிப் படிப்பு இருவகையாக
வேண்டும். முழுநேரப் படிப்பிற்கும் பகு
படிப்பிற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். ஒ
கல்லூரியும் பட்டப் படிப்பிற்கு ஏற்பாடு (
போதுமா? போதாது. உயர் பட்டப் படி
ஏற்பாடு செய்யவேண்டும். இதிலும் மு
படிப்போடு பகுதி நேரப் படிப்பிற்கு
வேண்டும். தரத்தைக் காக்கும்பேரால் வ
ஒடுக்குவது நல்லதன்று. தரங்கெடாது வா
பெருக்க முடியாத கல்வி உலகம் அறிஞ
ஆகுமோ? ஆகாது.

கல்லூரிப் படிப்பைப் பொறுத்த
'இப்போது இல்லையேல் எப்போதும் இல்லை
நிலை மாற வேண்டும். உயர்நிலைப் படிப்பை
தும் நேரே கல்லூரிக்குச் சென்றால்
கல்லூரிக் கல்வி பெற முடியும் என்பது
முறை. காலத் தேவைக்குப் போதாத மு